janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakththitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakththitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 செப்டம்பர் 25 - அக்டோபர் 01 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 25




**தெலுங்கானா ஆயுதப் போராட்டம்**

1947 செப்டம்பர் 11ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உடந்தையாய் இருக்க, ஹைதராபாத் சமஸ்தானத்தை நிஜாம் >>>



ப 08

**விஜயவாடா நோக்கி...**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாடு வரும் அக்டோபர் 14 முதல் 18ம் தேதி முடிய ஐந்து தினங்கள் ஆந்திர மாநிலம் >>>



ப 02

**மனு சாத்திரம் கூறும் சூத்திரன்!**

சமீபத்தில் சூத்திரர்கள் குறித்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா குறித்து பா.ஜ.க.வும் சங்கப் பரிவாரங்களும் தொடர்ந்து >>>



ப 03

## விஜயவாடாவில் அக்டோபர் 14 முதல் 18 வரை நடைபெறும் அகில இந்திய மாநாடு

# மாபெரும் அரசியல் திருப்பு முனையை உருவாக்கும்!

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு கூட்டம் திருப்பூரில் செப்.17 அன்று நடைபெற்றது. இதில் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் ஆனிராஜா கலந்து கொண்டு தேசிய நிர்வாகக்குழு முடிவுகளை விளக்கிப் பேசியதாவது:**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு கூட்டம் செப்.14, 15 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அகில இந்திய மாநாட்டின் அரசியல் வரைவு அறிக்கை, அமைப்பு நிலை அறிக்கை மற்றும் வேலை அறிக்கை நிர்வாகக்குழுவில் நிறைவேறியது.

சென்ற தேசிய நிர்வாகக்குழுவுக்குப் பின்பு சில முக்கிய அரசியல் நிகழ்வுகளை குறிப்பிட விரும்புகிறேன்.

பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து விலகி எதிர்க்கட்சிகூட்டணியில்இணைந்துள்ளது இந்திய அளவில் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. எதிர்க்கட்சிகளுக்கு பெரிய ஊக்கத்தை கொடுத்துள்ளது. இதை எப்படி கொண்டுபோய், பயன்படுத்தப் போகிறோம் என்பதே முக்கியமானது.

நாடாளுமன்றத் தேர்தல் வருவதற்கு முன்பே பல கட்சிகள் நாங்கள் தான் பிரதமர் என்று பேசத் தொடங்கி விட்டன. திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி பா.ஜ.க. எதிர்ப்பில் உறுதியாக இருந்தார். இப்போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பை சற்று உயர்த்திப் பேச தொடங்கியுள்ளார். பீகாரில் மகா ரக்ஷ பந்தன் கூட்டணி தலைவர் தேஜேஸ்வி மற்றும் முதல்வர் நிதிஷ்குமார் ஆகியோர் தனித்தனியாக நமது கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்களை சந்தித்துள்ளார்கள். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் ஒன்றுபட்டு நின்றால் மட்டுமே பா.ஜ.க.வை தோற்கடிக்க முடியும் என்று நமது கட்சியின் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி ‘இந்திய ஒற்றுமைப் பயணத்தை’ கன்னியாகுமரியில் இருந்து துவக்கியுள்ளார். மேதா பட்கர் எழுப்பிய கோஷத்தை காங்கிரஸ் எடுத்துக் கொண்டுள்ளது. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களான உ.பி., மத்திய பிரதேசம், சத்தீஸ்கர்போன்ற மாநிலங்களில் அதிக நாட்கள் ஒதுக்கி நடைபயணம் போகவில்லை. அங்கு அவர் மிகவும் சொற்ப நாட்களே ஒதுக்கியுள்ளார். கேரளாவில் 18 நாட்கள் நடை பயணம் மேற்கொள்கிறார். இடதுசாரிகள் ஆட்சியை விமர்சித்து பேசுகிறார். யாத்திரைப் பிரச்சாரத்தில் பா.ஜ.க. எதிர்ப்பு கூர்மைப்படவில்லையே ஏன்?

நிதிஷ்குமார் பா.ஜ.க கூட்டணியை விட்டு ஏன் விலகினார்? நிதிஷ் குமார் கட்சியை உடைத்து எம்.எல்.ஏ.க்களை இழுத்துபா.ஜ.க.ஆட்சியில்உட்காருவதற்கு துடித்தது. ஒரு எம்.எல்.ஏ.வுக்கு ரூ.25 கோடி வரை கொடுத்து விலைக்கு வாங்க முன்வந்தது. தேர்தல் நிதி, பி.எம்.கேர் பண்ட் போன்றவை எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கவும், கட்சியை பிளவுபடுத்தவும் பயன்படுத்தப்படுகிறது.

சத்தீஸ்கரில் மலைவாழ் பழங்குடியினர் போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி நடத்துகிறது. செப் 19ம் தேதி முதல் 26ஆம் தேதி வரை மாபெரும் அணிவகுப்பை நடத்த இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநில அரசு இதற்கு ஏன் அனுமதி தரவில்லை? தடையை மீறி அணிவகுப்பு நடத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தயாராகி வருகிறது.

இந்தியாவில் பல மாநிலங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடுகள் நடந்து முடிந்துள்ளன. மாநில மாநாட்டுப் பேரணிகளில் மக்கள் அதிக அளவில் திரண்டனர்.

தமிழ்நாட்டில் திருப்பூர் பேரணி காஷ்மீர் வரை பேசு பொருளாகியுள்ளது. காஷ்மீர் மாநில மாநாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதில் இளைஞர்கள் அதிகம் பங்கேற்றனர். அரசியல் விவாதம் கூர்மையாக இருந்தது.

மாநிலங்களில் நடைபெற்ற மாநாடுகளில் புதிய உணர்வு, எழுச்சி தந்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் அக்டோபர் 14 முதல் 18 வரை நடைபெற இருக்கிறது. இந்த மாநாடு இந்தியாவில் அரசியல் திருப்பு முனையை உண்டாக்கும் என்று பேசினார்.

## திருப்பூரில் நடைபெற்ற மாநிலக்குழுவில் ஆனிராஜா முழக்கம்



● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு நிகழ்வுகள், உரைகள், தீர்மானங்கள் உள்ளடங்கிய நூல் மாநில குழு கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

# உணவு தானிய கொள்முதலை தனியாரிடம் விட ஒன்றிய அரசு முடிவு

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

வரும் பருவம் முதல் உணவு தானிய கொள்முதலில் தனியாரை ஈடுபடுத்திட உள்ளதாக ஒன்றிய உணவுத்துறை செயலர் சுதான்ஷீபாண்டே செப்டம்பர் 19 அன்று டெல்லி கருத்தரங்கில் கூறியுள்ளார். இது ஒன்றிய அரசின் ஆர்வமிக்க கருத்துருவாகும்.

இதை நடைமுறைப்படுத்திடும் தீவிர திட்டம் அரசிடம் உள்ளது எனவும் கூறுகிறார்.

நாட்டு மக்களுக்கு உணவுத்தேவையை சீராக கிடைக்கச் செய்திடவும், விவசாய உற்பத்தி பொருட்களுக்கான நியாயமான விலையுடன் கொள்முதல் செய்யும் நடவடிக்கையே அரசு கொள்முதல் திட்டமாகும். தனியார்களின் கொள்முதல் மட்டுமே முழுமையாக இருந்து வந்த நிலையில், வியாபாரிகளின் லாப வேட்டைக்கு விவசாயிகளின் உற்பத்தி பொருட்கள் பலியிடப்பட்டது. கொள்முதல் செய்த உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து, செயற்கையாக உணவு தானிய தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலை ஏற்றம் மூலம் தனியார்கள் லாபவேட்டை அடைந்தார்கள். கொள்முதல் விலையையும் மொத்த வியாபாரிகளே தீர்மானிப்பர். இப்படியான நிலையில்தான் நீண்ட காலமான விவசாயிகளின் போராட்டங்களுக்கு பின் விவசாயிகளையும், நுகர்வோர்களையும் பாதுகாத்திடவே அரசு கொள்முதல் திட்டம் வந்தது.

ஒன்றிய அரசு 23 வேளாண் விளைப் போருட்களுக்கு மட்டுமே விலையை நிர்ணயம் செய்கிறது. இவை முழுமையும் அரசு கொள்முதல் செய்வதில்லை. பிற வேளாண் விளைப் பொருட்களையும் விலைநிர்ணயம் செய்து அரசே கொள்முதல் செய்திட வேண்டும் என்று விவசாயிகள் போராடி வரும் நிலையில், இருப்பதையே தனியாரிடம் விடவே ஒன்றிய அரசு துடிக்கிறது.

தனது பி.எம்.கேர்ஸ் கூட்டாளி களான பகாசுர கம்பெனிகளை கொள்முதலில் ஈடுபடுத்திடவே இந்த ஏற்பாடு. ஒன்றிய அரசின் உணவுதானிய கொள்முதலை தனியார்களிடம் கொடுக்க உள்ளதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

கருத்துருநிலையிலேயே இதை கைவிட வேண்டும் என வலியுறுத்துகிறது. இதன்மீது ஒன்றிய அரசு மாநில அரசுகளிடம் கருத்து கேட்க உள்ளது. எனவே தமிழ்நாடு அரசு இதை தடுத்திடும் நிலையில் உரிய நடவடிக்கையை எடுத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

கட்சிக் கடிதம்

# விஜயவாடா நோக்கி...








**பேரன்புமிக்க தோழர்களே!**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாடு வரும் அக்டோபர் 14 முதல் 18ம் தேதி முடிய ஐந்து தினங்கள் ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் நடைபெற இருக்கின்றது.**

மாநாட்டில் முன்வைக்கப்பட உள்ள வரைவு அரசியல் தீர்மானத்தை தேசியக்குழு விவாதித்து ஒரு மனதாக நிறைவேற்றியுள்ளது.

வரைவு அரசியல் தீர்மானம் ஆங்கிலம், தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல பொது மக்களும், அரசியல் கட்சியினரும் பல்வேறு தரப்பினரும் தங்களது கருத்துக்களை தெரிவிக்கும் வகையில் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளது.

தமிழாக்கம் செய்யப்பட்ட அரசியல் தீர்மானம் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. தோழர்கள் படித்து தங்களது கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சி மாநில தலைவர்களுக்கும், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை உட்பட அனைவருக்கும் அனுப்பியுள்ளோம்.

நாளேடுகள், வார ஏடுகள் தொலைக்காட்சிகளுக்கும் கூட அனுப்பி வைத்துள்ளோம்.

நாட்டை ஆளும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் கரமாக உள்ள பாஜகவின் ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்று வரைவு அறிக்கை திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கட்சியின் 22வது மாநாடு புதுச்சேரியில் நடைபெற்றது. அம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தில், பாரதிய ஜனதா கட்சி மக்களவைத் தேர்தலில் பெறும் பான்மை பெறுவது இந்திய அரசியலில் ஒரு தீர்மானகரமான வலதுசாரி திருப்பம் என்று மதிப்பீடு செய்தது.

அத்தகைய மதிப்பீடு எந்த அளவிற்கு மிகச் சரியானது என்பதனை கடந்த எட்டு ஆண்டுகால பாஜக ஆட்சியில் நிரூபனமாகியுள்ளது.

மீண்டும் ஆட்சிக்கு வந்த பாஜக இந்துராஷ்ட்ரம் என்ற தனது செயல்திட்டத்தை மிக மூர்க்கத்தனமான முறையில் நிறைவேற்றி வருகின்றது.

நாட்டில் பெரும்பான்மை மக்களுக்கு எதிராகவும், விரல் விட்டு எண்ணக்கூடிய பெருமுதலாளிகளின் நலன்களுக்காகவும் செயல்படுகின்ற அரசாக பாஜக உள்ளது என்பது வெட்ட வெளிச்சமாகி வருகின்றது.

நாடாளுமன்ற ஜனநாயகம் பெரும் தாக்குதலை எதிர்கொண்டுள்ளது. நாடாளுமன்ற ஜனநாயகம் சீர்குலைந்து போனால் அடுத்து என்ன நடக்கும் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சர்வதிகாரம், பாசிசம் என்ற நிலை ஏற்பட்டால் ஜனநாயகம் முற்றிலுமாக அழிக்கப்படும் என்று பொருளாகி விடும்.

அதனை நோக்கித்தான் இன்றைய ஆட்சியாளர்கள் நாட்டை நகர்த்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

இத்தகைய பேரபாயத்தை நாட்டு மக்களுக்கும் இடதுசாரிகளுக்கும் முற்போக்காளர்களுக்கும் ஜனநாயக அமைப்புகளுக்கும் தனிநபர்களுக்கும் கூட எடுத்துக் கூறும்வண்ணம் அரசியல் வரைவு அறிக்கை அமைந்துள்ளது.

இந்து, இஸ்லாம், கிறிஸ்துவம், சீக்கியம், பவுத்தம் என பல்வேறு மதங்களை பின்பற்றும் மக்களைக் கொண்ட நாடு.

மதத்தால், மொழியால், சாதியால், உடையால், பண்பாட்டால், வழிபாட்டால் என்று பல்வேறு வேறுபாடுகளை உடைய நாடு.

ஆனாலும் வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு என்று உலகம் நம்மை பார்த்து வியக்கின்றது போற்றுகின்றது.

வியப்பிற்கும் போற்றுதலுக்கும் எது காரணம்? நமது அரசியல் அமைப்புச் சட்டம். நமது அரசியல் அமைப்புச் சட்டம் மதச்சார்பற்ற, ஜனநாயக, சோசலிசக் குடியரசு என பிரகடனம் செய்கின்றது.

இத்தகைய மகத்தான கொள்கைக்கு மாறாக நேர் எதிராக இன்றைய ஆட்சி செயல்பட்டு கொண்டுள்ளது.

நாட்டின் விடுதலை இயக்கத்தில் தங்களின் மகத்தான பங்களிப்பை செலுத்தியது மட்டுமல்ல, நாடு இந்திய பாகிஸ்தான் என பிரிந்தபோது இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்கள் எங்களின் தாய்நாடு இந்தியாதான் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

அத்தகைய மக்கள் இன்று அச்சத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**தங்களது சொந்த நாட்டில் இந்திய குடிமக்கள் தங்களது உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு அற்ற நிலையில் - பதட்டத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலை என்பது வெறும் இஸ்லாமிய மக்களின் பிரச்சனை அல்ல. - அவர்களுக்கு மட்டுமே ஏற்பட்டுள்ள பதட்டம் அல்ல. - நாடே இன்று பதட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.**

நாட்டையே பதட்டத்திற்கு உள்ளாக்கி தங்களது மிகக் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள பாஜக தனக்கு கிடைத்துள்ள அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி வருகின்றது.

சுப்பிரமணிய சுவாமி பாஜகவின் மூத்த தலைவர்களில் ஒருவர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆவார். அவர் தன்னை மிகப் பெரிய அறிவாளியாக காட்டிக் கொள்ளக் கூடியவர். அப்படிப்பட்ட நபர் உச்சநீதிமன்றததில் ஓர் வழக்கு தொடுத்துள்ளார்.

அவ்வழக்கு சாதாரணமான ஒன்றல்ல இந்நாட்டையே நிலைகுலையச் செய்யக் கூடிய வழக்காகும்.

அரசியல் அமைப்புச்சட்டத்தில் உள்ள "மதச்சார்பின்மை சோசலிசம்" என்பதனை அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்பதுதான் சு.சாமியால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்காகும்.

சு.சாமியின் வழக்கை ஏற்கக் கூடாது, அதனை தள்ளுபடி செய்திட வேண்டும் என்று, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியத் தலைமை சார்பில், தேசிய செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் பினாய் விஸ்வம் வழக்கு தொடர்ந்துள்ளார். சு.சாமி வழக்கு தொடர்ந்து இருப்பது அவரது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் தொடரப்பட்ட வழக்கு எனில் பாஜக ஏன் அவர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை?

பாஜகவும் தேர்தல் ஆணையமும் நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க கடமைப்பட்டுளது.

ஏன் எனில் தேர்தல் ஆணையத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பதிவு செய்துதான் செயல்பட முடியும்.

அவ்வாறு தேர்தல் ஆணையத்தில் முறைப்படி பதிவு செய்திட அணுகும் அரசியல் கட்சிகள்.

**. மதச்சார்பின்மை**

**. சோசலிசம்**

**. ஜனநாயகம்**

ஆகிய கோட்பாடுகளை பின்பற்றி நடக்க வேண்டும் என அரசியல் சட்ட விதி உள்ளது.

இத்தகைய சட்டவிதிகளை அப்பட்டமாக மீறுவதுதான் சு.சாமியின் வழக்காகும்.

சு.சாமி தனிநபர் அல்ல, பாஜகவின் முக்கிய புள்ளிகளில் ஒருவர் என்பதனை எளிதில் புறந்தள்ளி விட முடியாது!

பாஜகவின் நோக்கம் அரசியல் சட்டத்தின் அடிப்படையையே தகர்த்து எறிவதுதான்!

நாட்டின் அஸ்திவாரத்தை ஆட்டம் காணச் செய்கின்ற சதிச்செயலில் இன்று பாஜக ஈடுபட்டுள்ளது.

இத்தகைய பேராபத்துகள் குறித்து நமது அரசியல் வரைவு தீர்மானம் மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் நிலவி வரும் அரசியல் . சமூக பொருளாதார பிரச்சனைகள் குறித்தும், வகுப்புவாத சக்திகளால் ஏற்பட்டுள்ள ஆபத்து குறித்தும் விரிவாக எடுத்துக் கூறுகின்ற தீர்மானம், அதற்கான மாற்றத்தையும் முன்வைத்துள்ளதுதான் தீர்மானத்தின் மிகச் சிறப்பான அம்சமாகும்.

தற்போதைய சூழ்நிலையில் மிக வலுவான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேவைப்படுகின்றது.

கவனம் திசை மாறுவது, அன்னிய வர்க்க போக்குகள், மற்றும் பலவீனங்கள் இவற்றை கட்சி எதிர்கொண்டு வெல்ல வேண்டும். அதற்கு அனைத்து மட்டங்களிலும் கட்சி அமைப்புகளில் முக்கிய தேவையான மாற்றங்களை கொண்டு வரவேண்டும்.

கட்சி தனது அரசியல் சித்தாந்த பணிகளை தீவிரப்படுத்தி, போர்குணமிக்க இயக்கங்களை நடத்திட வேண்டும்.

2025ம் ஆண்டு நமது கட்சியின் நூற்றாண்டு ஆகும். நூற்றாண்டு விழாவை கொண்டாடப் போகும் நாம் உருவாகிற பிரச்சனைகளை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். சுரண்டப்படும் மக்களை ஒருங்கிணைத்து, அவர்களை அரசியல்படுத்தி, நமது பிரகடனப்படுத்தப்பட்ட இலக்கான சோசலிசத்தை நோக்கி அவர்களை அழைத்துச் செல்ல அரசியலில் நமது தலைமைப் பங்கை மீட்டெடுக்க வேண்டிய அவசியம் வந்துள்ளத்தை நாம் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொழிலாளிவர்க்க மற்றும் இதர உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களை பாதுகாப்பது இடதுசாரிகளின் கடமை என்பதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மிகத் தெளிவாக உள்ளது.

வர்க்க சுரண்டலுக்கு எதிராக, சாதிய பாகுபாடுகளுக்கு எதிராக, பால் இடைவெளிக்கு எதிராக போராட்டங்கள் தீவிரப்படுத்திட வேண்டும்.

இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவைதான் ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிரான நமது கருத்தியல் போராட்டத்தின் அடிப்படைகள் ஆகும்.

பாஜக அரசாங்கம் பாசிச சித்தாந்தத்தை தனக்கான

தொடர்ச்சி 5ம் பக்கம் >>



- த.லெனின்

# மனு சாத்திரம் கூறும் சூத்திரன்!



**குற்றங்களுக்கான தண்டனை மட்டுமல்ல, வேலைக்கான கூலியையும், சாதி படிநிலைப் பார்த்துதான் கொடுக்க வேண்டும் என்று இச்சட்டங்கள் எச்சரிக்கின்றன.**

**ஒருவருடைய செல்வத்தை பிராமணர்கள் திருடிச் சென்றால் அது அடுத்த பிறவியில் நன்மையாக முடியும். சூத்திரனுக்கு செல்வம் அளித்தால் நரகத்திற்குள் விழ அது காரணமாகி விடும் என்கிறது சுக்கிர நீதி.**

**சமீபத்தில் சூத்திரர்கள் குறித்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா குறித்து பா.ஜ.க.வும் சங்கப் பரிவாரங்களும் தொடர்ந்து எதிர்வினை ஆற்றி வருகின்றன. மக்களவைத் தலைவருக்கு புகார் மனு அனுப்பி இனி தேர்தலில் போட்டியிட தடைவிதிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர்.**

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது டுவிட்டர் பக்கத்தில் இதனை பதிவிட்டு கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் ஆ.ராசா மீது பல காவல் நிலையங்களில் புகார் அளித்தும், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியும் தங்கள் எதிர்ப்பினை பதிவு செய்து வருகின்றனர்.

ஆ.ராசா கூறிய கருத்துக்கள் உண்மைக்கு மாறானதா? இந்துக்களை அவர் தாசியின் மகன்கள் என்று கூறினாரா? என்பதை ஆய்வு செய்தால் திருடனுக்கு தேள் கொட்டிய கதையாக இதை முன்வைப்பவர்களின் வாதங்களை தவிடு பொடியாக்கும் உண்மைகள் வெளிவரத்தான் செய்யும்.

மனு தர்மசாஸ்திரம் என்ற நூல் ஒருவரால் எழுதப்பட்டது அல்ல. ஆனால், பல காலங்களில் பலரால் இயற்றப்பட்டு நமது ஸ்மிருதிகள், இதிகாசங்கள், காப்பியங்களில் தொடர்ந்து பேசப்பட்டு, அது ஒரு சமூகச் சட்டமாக இருந்ததை ஆராய்ச்சி யாளர்கள் பலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

மனு வைவாஸ்தவா, மனு அப்ஸாவா, மனு சம்வரனா என்ற மூவரும் வேத காலத்தில் பேசப்பட்ட மனுக்கள் ஆவர்.

ரிக்வேதம் மனுவை மற்ற ரிஷிகளில் ஒருவராகத்தான் குறிப்பிடுகிறது. யஜூர் வேதத்தில் மனு பிரஜாபதி என்று குறிப் பிடப்படுகிறார். அதர்வண வேதத்தில் இவர் சரண்யுவுக்கும் – வாஸ்த்துவுக்கும் பிறந்தவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்துடன் மேலும் ஒரு ஆறு மனுக்கள் பேசப்படுகின்றனர். அவர்கள் சுயம்புவான மனுவில் புத்திரர்களாம்.

அறிஞர் ஜெய்ஸ்வாலின் கருத்துப்படி மனுஸ்மிருதி கி.மு. 150க்கும் கி.பி.100க்கும் இடையில் உருவானதாக கூறுகிறார்.

புத்த மதத்தை அழித்து சூத்திர மவுரிய சாம்ராஜ்யத்தை உடைத்து, அரசியல் செல்வாக்குப் பெற்ற பிராமணியமும் வைதீகமும் தனது வெற்றியைக் குறிக்கும் விதத்தில் உருவாக் கப்பட்டதுதான் மனுதர்மம்.

ஏற்கனவே இந்தியாவில் நடைமுறையில் இருந்த பொது வான நீதி குறித்த கிரிமினல், சிவில் சட்டங்களை அழித்து இந்த மனுதர்ம சட்டம் அமலாக்கப்பட்டது.

அர்த்த சாஸ்திரத்தில் உள்ள மதச்சார்பற்ற சட்டங்களை எடுத்து விட்டு அந்த இடத்தில் மனு சட்டங்களை வைத்து விட்டனர். எனவே, பாரம்பரியமாக இருந்த மதச்சார்பற்ற சட் டங்களை அழித்துதான் சாதிக்கு ஒரு நீதி சொன்ன மனு நீதி சட்டங்கள் நடைமுறைக்கு வந்தது என்பது தெளிவாகிறது.

‘சதுர்வர்ணம் மாயா ஸ்ருஷ்டம்‘ நான்கு வர்ணங்களையும் நானே படைத்தேன் என்று கிருஷ்ணர் கூறும் கூற்று இந்த மனு தர்மத்தை உள்வாங்கிதான் வந்திருக்கிறது.

புருஷோத்தமரான அந்த பகவான் முகத்தில் இருந்து பிராமணர்களும், அவரது தோளிலிருந்து சத்திரியர்களும், தொடையிலிருந்து வைசியர்களும், பாதங்களிலிலிருந்து சூத்திரர்களும் உருவானார்கள் என்கிறது பாகவதம்.

அரசன் பிரமணனிடம் அறிவுரை கேட்பது நன்று. அது ஆக்கம் தரும். அவர்களின் முடிவிற்கு புறம்பாக நீதி வழங்கிய அரசர்கள் அழிந்தனர் என்கிறார் மனு.

பத்து வயதுள்ள பிராமணனையும் நூறு வயதுடைய சத்ரியனையும் தகப்பன் பிள்ளையாக அறிய வேண்டியது. பிராமணன் தகப்பன் மரியாதையையும், சத்ரியன் புத்திர மரியாதையையும் வகிக்க வேண்டியது கடமை என்று மனு நீதியில் அத்தியாயம் 2:135ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ.ராசா பேசியது ஏதோ, இந்துப் பெண்களை கேவலப் படுத்திவிட்டதாக குதிக்கும் சங்கப் பரிவாரங்கள் மனு நீதியைப் படித்தார்களா?

இதோ பாருங்கள்...

கணவர் தூராசாரம் உள்ளவனாக இருந்தாலும் அந்நிய ஸ்திரிலோலனாய் இருந்தாலும் நற்குணம் இல்லாதவனாக இருந்தாலும் பதிவிரதையான ஸ்திரியானவள் அவரை தெய் வத்தைப் போல் போற்றி பூஜிக்க வேண்டும். மனு 5:154

பாலியத்தில் தகப்பனின் ஆஞ்சையிலும் யவ்வனத்தில் கணவரின் ஆஞ்சையிலும் கணவன் இறந்த பிறகு பிள்ளை களின் ஆஞ்சையிலும் இருக்க வேண்டியதே அல்லாது ஸ்தி ரிகள் தன் சுவாதினமாக ஒருபோதும் இருக்கக் கூடாது. மனு 5:148

மாதர்களின் ஸ்பாவமே மனிதர்களுக்கு சிருங்கார சேஷ்டைகளினால் தோஷத்தை உண்டுபண்ணும். மனு 2:213

தாய், தங்கை, பெண் இவர்களுடனும் தனியாய் ஒன்றாகக் உட்காரக் கூடாது. மனு 2:215

மாதர்கள் கற்பு நிலைமையும் நிலையா மனமும் நம்பிக் கையும் இயற்கையாக உடையவர்கள். மனு 9:15

மாதர்கள் பெரும்பாலும் விபச்சார தோஷம் உள்ளவர்கள் என்று அனேக ஸ்ருதிகளிலும், சாஸ்திரங்களிலும் சொல்லப் பட்டிருக்கின்றன. மனு 9:19

பெண்களை பாவ யோனியில் ஜனித்தவர்கள் என்று இழிவுபடுத்தியதும் பிராமண பெண்களாக இருந்தாலும் சூத்திரப் பெண்கள்தான் என்று பிரித்தாளும் சதியை எப்படி நீதி என்று சொல்வது?

மக்கள் தொகையில் பெரும்பகுதியினரான உழைப்பாளி மக்களை காலிலிருந்து பிறந்த சூத்திரனாக இழிவுபடுத்தியது ஏன்?

பிராமணர்களின் மிச்சப்பட்ட உணவை பழைய உடைகளை நொய் முதலிய சாரமில்லாத தானியம், பழைய பாத்திரம் இவை முதலானவற்றை அடுத்த சூத்திரனுக்கு கொடுக்க வேண்டும் என்று மனுதர்மத்தின் அத்தியாயம் 10 சுலோகம் 125 கூறுகிறது.

சூத்திரன் என்பவன் ஏழு வகைப்படுவர். 1. யுத்தத்தில் புறம் காட்டி ஓடுபவன். 2. யுத்தத்தில் கைதியாக பிடிக்கப்பட்டவன். 3. பிராமணனிடத்தில் பத்தியால் ஊழியம் செய்கிறவன். 4. விபச்சாரியின் மகன். 5. விலைக்கு வாங்கப்பட்டவன். 6. ஒருவனால் கொடுக்கப்பட்டவன். 7. தலைமுறை தலை முறையாக ஊழியம் செய்கிறவன் என்று அத்தியாயம் 8 சுலோகம் 415ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூத்திரன் சொர்க்கத்திற்காகவாவது, ஜீவனத்திற்காகவது அல்லது இரண்டிற்காவது பிராமணனையே தொழவேண்டும். இவன் பிராமணனை அண்டிய சூத்திரன் என்று பெயர் வந்தால் அதே அவனுக்கு பாக்கியம் என்று அத்தியாயம் 10 சுலோம் 122ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படி மனு தர்மத்தில் சூத்திரனை அற்பப் பிறவியாக எழுதியவர் மீது கோபப்படாமல் அதை எடுத்துச் சொன்ன ஆ.ராசா மீது ஏன் வருகிறது கோபம்?

இப்போது சொல்லுங்கள், இந்த சூத்திர இழிப்பட்டங்களை ஒழிக்கத்தானே சாத்திரக் குப்பைகளை ஒழிக்கப் பாடுபட்டார் தந்தைப் பெரியார். சூத்திரன் யார்? என்று ஒரு பெரிய ஆய் வையே செய்து சூத்திரர்களையும் ஆதி சூத்திரர்களான பஞ் சமர் களையும் இணைத்து அந்த உழைப்பாளி மக்களின் உயர்வுக்காகவும், மேம்பாட்டிற்காகவும் அவர்களுக்கான அரசியல் அதிகாரப் பகிர்வுக்காக பாடுபட்டவர்தானே அண் ணல் அம்பேத்கர்!

ஏன், சுவாமி விவேகானந்தர் இதுவரை இந்தியாவில் சத்ரிய ஆட்சியைப் பார்த்தாகிவிட்டது, பிராமண ஆட்சியையும் பார்த்தாகி விட்டது, இனிமேல் உழைக்கும் மக்களான சூத்திரர் ஆட்சிதான் இந்தியாவில் ஏற்பட வேண்டும் என்று முழங்கியது இவர்களுக்கு எட்டவில்லை போலும்.

ஒரு விதவையின் கண்ணீரை துடைக்க முடியாத ஒரு அனாதையும் வயிற்றில் ஒரு கவலம் சோற்றை இட முடியாத கடவுளிடத்திலோ சமயத்திலோ எனக்கு கொஞ்சம் கூட நம்பிக்கை கிடையாது என பேசியவர் சுவாமி விவேகானந்தர்.

தோட்டிகளையும், பறையர்களையும் இன்றைய இழிநிலைக்கு கீழே இறக்கிக் கொண்டு வந்தவர்கள் யார்? அவர்கள் கீழ்மை அடைவதற்கு பொறுப்பாளிகள் யார்? நிச்சயமாக ஆங்கிலேயர்கள் பொறுப்பாளிகள் அல்லர். அவர்கள் கீழ்நிலைக்கு வந்ததற்கு நாமே பொறுப்பாளிகள் ஆவோம்! என்று விவேகானந்தர் பேசியதும் மதத்தின் உட் கருத்தை வலியுறுத்தாமல் வெளி ஆச்சாரங்களை பிரதானப் படுத்தி இந்த நிலையை உருவாக்கியது நாட்டின் உயர்தட்டு வர்க்கம் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், செத்த மொழியான சமஸ்கிருதத்தை விவே கானந்தர் விட்டு வைக்கவில்லை. ஏனெனில் இவற்றில் தானே வேதங்களும், சாதியை போதிக்கும் மனு நீதியும், உப நிடதங்களும், ஸ்மிருதிகளும் உள்ளன.

“மதச் சண்டைகளும், சாதி வேற்றுமை கலகங்களும் பல்குவதற்கும் பெரும் கருவியாய் இருந்தும், இருப்பதும் சமஸ்கிருதமே! சமஸ்கிருத மொழி நூல்கள் தொலைந்து போகுமேயானால் இப்போராட்டங்களும் தொலைந்து போகும் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

சாதிகளுக்கு இடையே கலப்பு திருமணமும், சமபந்தியும் வேறு விதமான கூட்டணிகளும் கூடாது என முன்பை விட கடுமையாக்கப்பட்ட சாதி சட்டங்களை எல்லோ ரும் பின்பற்ற வேண்டும் என்றும் இந்த சாத்திரங்கள் கட்டாயப்படுத்துகின்றன. சிலரை தீண்டத்தகாதவர்கள் என்றும், மிலேச்சர்கள் என்றும் தங்க வேலை செய்வோர், இரும்பு வேலை செய்வோர், துணி வெளுப்பவர்கள், மர வேலை செய்வோர், அன்றாட உபயோகப் பொருட்களை விற்போர் போன்றவர்களை தாழ்த்தப்பட்ட சாதிகளாகவும் அவை தீர்ப்பளித்தன.

கடற் பயணங்கள் மேற்கொள்ளக் கூடாது. அப்படி மேற்கொள்ளுபவர்களை சாதியிலிருந்து வெளியேற்ற வேண் டும். அல்லது அதற்கு கடுமையான பிராயச்சித்தத்திற்கு ஆட்படுத்த வேண்டும் என்று கூறுகின்றன.

இறந்து விட்ட கணவனை எரிக்கும்போது மனைவும் சிதையில் உயிரை மாய்த்துக் கொண்டால் புண்ணியம் கிடைக்கும் என்றும் குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும், விதவைகள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்றும் வலியுறுத்துகின்றன.

அக்பர் காலத்தில் வழக்கத்தில் இருந்த சாத்திரங்களின் சில நிபந்தனைகள் கீழ் வருமாறு உள்ளது.

1. இருமல் பிராமணனைக் கொன்றதற்கான தண்ட னை யாகும். அதற்கான பிராயச்சித்தம் நான்கு தோலா தங்கத் தால் ஒரு தாமரைப் பூவைச் செய்து மந்திரம் செய்து பிறகு அதை பிராமணனுக்கு தானமாக கொடுக்க வேண்டும்.
2. காய்ச்சல் நிராபராதியான பிராமணனை கொன்றதற்கான தண்டனையாகும். பிராயச்சித்தம் மகாதேவ மத்திரத்தை 300 முறை உருவிட்டு மகா தேவ சிலைக்கு அர்ச்சனை செய்து 13 பிராமணர்களுக்கு உணவளிக்க வேண்டும்.
3. ஒரு பெண்ணின் கணவன் அவளுக்கு முன்னரே இறப்பது முற்பிறவியில் நற்குடும்பத்தில் பிறந்த அவள் வீட்டைத் துறந்து அந்நிய நபர் ஒருவருடன் குடும்பம் நடத்தி அவனுடைய சிதையில் உயிரை மாய்த்துக் கொண்டதன் விளைவுதான். பிராயச்சித்தம் அவள் தன்னைத்தானே பனிக்கட்டியில் புதைத்துக் கொண்டு உயிர்விட வேண்டும் அல்லது வாழ்நாள் முழுவதும் விரதம் இருந்து காலம் தள்ள வேண்டும்.
4. ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படுவது அவள் முற்பிறவியில் நடத்தை கெட்ட வாழ்வை மேற்கொண்ட போது, அவளுடைய வீட்டிற்கு விளையாடச் சென்ற குழந் தைகளை விரட்டியதற்கான தண்டனையாகும். பிராயச் சித்தம் அவள் ஒரு மண் பாத்திரத்தில் நூறு கிணறி லிருந்து தண்ணீர் சேமித்து அதில் ஒரு முழு பாங்கையும் ஒரு தோலா தங்கத்தையும் போட்டு பிறகு பிராமணனுக்கு அதை தானமாக கொடுத்து விட வேண்டும்.
5. ஒரு பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை மட்டும் பிறந்தால் முற்பிறவியில் அவள் மிகுந்த திமிர்பிடித்தவளும், கணவனை மதிக்காதவளுமாக இருந்ததற்கான தண்டனையாகும். பிராயச்சித்தம் அவள் ஒரு வெள்ளைக் காளையின் கொம்புகளை நான்கு தோலா தங்கத்தாலும், குளம்புகளை நான்கு தோலா வெள்ளியாலும் ஒன்றரை தோலா செம்பினாலும் பொதித்து ஒன்றரை சேர் பித்த ளையால் தயாரித்து ஒரு பாத்திரத்துடன் அவற்றை பிராமணனுக்கு தானமாக கொடுப்பதுடன் நூறு பிரா மணனுக்கு வயிறார உணவும் அளிக்க வேண்டும் என்ற வினோதங்களே இந்து மதச் சட்டங்களாகவும், வேத கங்களாகவும் இருக்கிறது என்றால் இதை மாற்றுவதற்குப் பதிலாக மாற்ற வேண்டும் என்பவர்களை தாக்குவது என்ன நீதி?

இங்குதான் பகுத்தறிவு தேவைப்படுகிறது.

பிராமணர்கள் செய்யக் கூடாத தொழில்களில் தோல் தொழில் என்று சுட்டப்படுகிறது. இப்படிப்பட்ட பிராமணர்கள் இன்று பேட்டா காலணி விற்கும் கடைகளில் வேலை செய்கிறார்கள் என்று தோழர் டாங்கே குறிப்பிட்டதுபோல, பலவற்றின் மாற்றம் கண்டுள்ளனர். நீண்ட குடுமியை அகற்றி முடிவெட்டிக் கொள்கின்றனர். நவீன உள்ளாடைகள் அணிந்து பேன்ட் சட்டை அணிந்து கொள்கின்றனர். இவையெல்லாம் வரவேற்கத்தக்க பகுத்தறிவு பரிமாணங்களே! ஆனால், மற்றவர்கள் செய்தால் சாத்திர குற்றம் என்பதுதான் இமாலய தவறாகும். எனவே, மனு தர்மம் அல்ல அதர்மத்தின் சட்டம் அநியாயத்தை நிகழ்த்தும் நாட்டம் அது என்பதே உண்மை.

தொடர்புக்கு: **94444 81703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

**மலர்** 85 **இதழ்** 25

## மநு(அ)தர்ம ஆணவம்

மரபுகளையும், பழக்கங்களையும் அறிவியல் வளர்ச்சி உடைத்து நொறுக்கி, முன் சென்று கொண்டே இருக்கிறது. பழைய உற்பத்தி முறைகளும், உற்பத்திக் கருவிகளும் தேடினாலும் கிடைக்காமல் காணாது ஒழிந்துவிட்டன. பிறப்பினால் சாதி, சாதிக்கு ஒரு தொழில் என்பதெல்லாம் நடைமுறையில் இல்லை.

மனித அறிவு வளர்ச்சி, கல்வியோடு தொடர்புடையது. அறிவியல் வளர்ச்சிக்கேற்ப சமூகம் வளர வேண்டுமெனில், கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். ‘‘கல்வி கற்பதற்கே உரிமை இல்லாதவர்கள், கல்வி கற்பது தண்டனைக்குரிய குற்றம்’ என மனு சாஸ்திரம் ‘சூத்திரர்கள்’, ‘பஞ்சமர்’ எனப் பெயரிட்டு பெரும்பான்மை மக்களை ஒதுக்கி வைத்தது. பல தலைமுறைகளாக ஒடுக்கப்பட்டிருந்த மக்களை, அடிமைத் தளையில் இருந்து விடுவிக்க கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது.

அதிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1990ம் ஆண்டில் விபி சிங் பிரதமராக இருந்த போது தான், மண்டல் குழு பரிந்துரைகளால் இட ஒதுக்கீடு கிடைத்தது. இந்துக்களுக்கு தரப்பட்ட இட ஒதுக்கீட்டை, அன்றும் எதிர்த்தனர், இன்றும் மநுவாதிகள் எதிர்க்கின்றனர்.

டாக்டர் அம்பேத்கர் தலைமையில் எழுதப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டமே ஐரோப்பாவை பார்த்து நகலெடுத்தது, இந்தியாவுக்கான அரசியல் சட்டமாக மனு சாஸ்திரம் தான் இருக்க வேண்டும் என்று, சித்பவன பார்ப்பனர்கள் உருவாக்கிய ஆர்எஸ்எஸ் அன்றே கண்டன குரல் எழுப்பியது.

இந்து என்ற சொல்லையே கருவியாக கொண்டு, ஆர்எஸ்எஸ் அரசியல் பிரிவான பிஜேபி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்துக்கு பதிலாக மனு சாஸ்திரத்தை கொண்டு வருவோம் என்றும் பகிரங்கமாகவே பேசுகிறார்கள்.

ரஷ்ய புரட்சிக்கு பின் உலகமெங்கும் தொழிலாளர் இயக்கம் விழித்தெழுந்து, வீறு கொண்ட போராட்டங்கள் மூலமாக சட்டபூர்வ உரிமைகளை வென்றெடுத்தது. இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த தொழிலாளர் குடும்பங்கள் எல்லாம் தமது வாழ்வாதாரத்தை நிலைப்படுத்திக் கொண்டதன் மூலமாக முன்னேறத் துவங்கின.

சோஷலிச நாடுகளை வலுவிழக்கச் செய்த பின்பு, ஏகாதிபத்தியம் முழு வேகத்தோடு உழைப்பவர்களுக்கு தரப்பட்ட உரிமைகளை, படுவேகமாகப் பறிப்பதில் இறங்கியுள்ளது. அண்டிப் பிழைக்கும் தினக்கூலிகளாக தொழிலாளர்களை ஒடுக்குகிறது.

‘உழைப்பு என்பது இழிந்தது; உழைப்பவர்கள் இழிவானவர்கள்; அடிமைகளாய் உழல்வதற்காகவே பிறந்தவர்கள்’ என்பதில் மனு சாஸ்திரமும் கார்ப்பரேட்டு நலன்களைக் காக்கும் தாராளமயக் கொள்கையும் பிசிறு இல்லாமல் ஒத்துப்போகின்றன.

இந்தப் புதிய சூழலில், தம்மை அடிமைப்படுத்துபவர்கள் யார் என்பதை உழைக்கும் மக்கள் புரிந்து கொள்ள, மனு சாஸ்திரம் என்ன சொல்கிறது என்பதற்கான உரையாடல் அவசியமாகிறது. திராவிட முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்கள் ‘சூத்திரன் என்றாலே விபச்சாரி மகன்’ என மனு சாஸ்திரம் சொல்வதை எடுத்து சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்வது உண்மை இல்லை என்றால், மனுசாஸ்திரம் அப்படிக் கூறவே இல்லை என்று மறுக்க வேண்டியது தானே! எவ்வளவு வசை மொழிகள், மிரட்டல்கள்.

இந்துக்களைக் கேவலப் படுத்துகிறார் என வெறியாட்டம்.

2020ம் ஆண்டில், பெண் விடுதலை பற்றி தொல் திருமாவளவன் பேசும்போது, நான்காம் வர்ணப் பெண்களை வேசிகள் என்று மனுதர்மம் சொல்கிறது எனக் குறிப்பிட்டார். பெண்களைக் கேவலப்படுத்தி விட்டார் என்று அப்போதும் ஆடினார்கள்.

மனு சாஸ்திரத்திற்கு 40, 50 வகையான விளக்கங்கள் உண்டு என்றும், அவர் தவறாக மேற்கோள் காட்டுகிறார் என்றும் அவர் 20,000 புத்தகங்கள் படித்த(!) பிஜேபி அண்ணாமலை சொன்னார்! உண்மையான விளக்கம் என்ன என்று இதுவரை பேசவில்லை.

மதச்சார்பின்மை, சோசலிசம் ஆகிய சொற்களை அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று சுப்பிரமணியசாமி நீதிமன்றம் போயிருக்கிறார். சமமின்மையை மட்டுமே விரும்புபவர்களுக்கு, சமத்துவம் கசக்கத்தானே செய்யும்.

கடவுளைப் பேச, அவர் பெயரால் கலவரமூட்ட இவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் தந்தை பெரியார் சிலை பீடங்களில் ‘கடவுள் இல்லவே இல்லை’ என்று இருப்பதை உடனடியாக அழிக்க வேண்டும் என்றும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

‘‘அடங்கிக் கிட என்று நான் எவ்வளவு உரத்த குரலில் வேண்டுமானாலும் பேசுவேன். அதற்கு எனக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால் ஏன் என்று எதிர் கேள்வி கேட்க உனக்கு உரிமை கிடையாது’’ என்பதுதான் இந்த மநு(அ)தர்ம ஆணவம்.

தமிழ்நாட்டு மக்கள் ஆதரிக்கவில்லை என்றாலும், ஆ.ராசா பேச்சை எதிர்த்து கடையடைப்புக்கு அழைப்பு விடுக்குமளவுக்கு அவர்களுக்கு தைரியம் வந்துள்ளதை மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் கவனத்தில் கொள்ள வேண்டும். உரிய வகையில் எதிர்வினையாற்ற வேண்டும்.




- கே. கபில்தேவ்

## தாட்கோ பரிந்துரைக்கும் தனிநபர் கடன்களை வங்கிகள் வழங்க முன் வர வேண்டும்

கள்ளக்குறிச்சி மாவட்டம் அதிக கிராமப்புறங்களைக் கொண்டது. இது விவசாய கூலித் தொழிலாளர்கள் நிறைந்த மாவட்டம். இந்த மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகளைத் தவிர சொல்லிக் கொள்ளும் அளவிற்கு தொழில் நிறுவனங்கள் ஏதும் இல்லாததால், இங்குள்ள மக்கள் மழையையும், வெயிலையும் பொருட்படுத்தாமல் உடல் உழைப்பை செலுத்தி தின கூலிகளாகவும், விவசாயக் கூலி தொழிலாளர்களாகவும் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

கூலி வேலை செய்து கிடைக்கும் குறைந்த வருமானத்தைக் கொண்டு மிகவும் வறுமையான சூழ்நிலையில் அன்றாடம் காச்சிகளாக கஷ்டஜீவனம் செய்து வருகின்றனர்.

அட்டவணை பிரிவை சார்ந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் 40 சதவீதத்திற்கு குறையாமல் உள்ள இரண்டு தனி தொகுதிகளை கொண்ட மாவட்டமாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளைப் படிக்க வைக்கவோ, அவர்களின் தேவையை நிறைவேற்றி தருவதற்கோ மருத்துவம் அளிப்பதற்கோ, பண்டிகை காலங்களிலோ, சுக துக்க நிகழ்வு நேரிடும் போது அதனை சந்திப்பதற்கு திண்டாடுவார்கள். வேறு வழியின்றி கையை பிசைந்து கொண்டு வாங்கும் கூலி பணம் பற்றாக்குறையால் அதிக வட்டிக்கு கடன் வாங்கி காலம் முழுவதும் மீள முடியாத அளவுக்கு கடனாளிகளாகவே ஒருவித மன அழுத்தத்திற்கு ஆளாகி மடிந்து போகிறார்கள்.

இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் வறுமையிலிருந்து மீட்டெடுக்கவும் அரசும், அரசு அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு பெரிய வடுவாக மாவட்ட அளவில் இருந்து வருகிறது. இந்த வாட்டத்தை நிரந்தரமாக போக்குவதற்கு சுயதொழில் செய்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய மூலதனம் இல்லையே என்று சொல்லக்கூடாது என்பதற்காக மத்திய அரசு தேசிய தாழ்த்தப்பட்டோர் நிதி மேம்பாட்டு நிறுவனம் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய்களை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு நேரடியாக பிரித்து 50 பைசா வட்டிக்கு சுய தொழில் செய்திட தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு தனி நபர் கடன் உதவி வழங்குவதற்காக அனுப்புகின்றனர்.

இதே போல தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி கழகம் என்னும் தாட்கோ நிறுவனத்தின் மூலம் மானிய திட்டத்தில் சுயதொழில் தொடங்க தனிநபர் கடன் உதவி பெறுவதற்கும் மத்திய, மாநில அரசுகள் நிதியை ஒதுக்கீடு செய்கிறது. இது ஏட்டளவில் வைத்து கொண்டு நடைமுறை ரீதியாக ஒவ்வொரு ஆண்டும் வங்கிகளுக்கு வரும் நிதியை திருப்பிவிட்டு தாழ்த்தப்பட்டவர்களுக்கு கடன் உதவி வழங்கினால் அந்த பணத்தை திரும்ப செலுத்தமாட்டார்கள் என்று வங்கியாளர்கள் ஒரே வரியை பதிவு செய்து ஆண்டின் இறுதியில் இந்த நிதியை திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

இதேபோல தாட்கோக்கு அனுப்பப்பட்ட தொகையை, தாழ்த்தப்பட்ட படித்த சுய தொழில் முனைவோர்க்கு கடன் உதவி வங்கிகள் தராமல், தமிழக அரசு வேறு துறைகளின் பயன்பாட்டுக்கு செலவிட திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஏழைகளுக்கும், கூலிகளுக்கும் உதவ முன் வருவதில்லை என்ற நிலை வாடிக்கையாக உள்ளது. நிபந்தனைகள், பிணையங்கள் ஏதுமின்றி வேலைவாய்ப்பின்றி கஷ்டப்படும் படித்த பட்டதாரி இளைஞர்கள் சுயமாக தொழில் தொடங்கிட தனிநபர் கடன் உதவி வழங்க அரசும், சட்டமும் சொல்கிறது. ஆனால், வங்கி மேலாளர்கள் கண்டுகொள்ளாமல் கடன் மனுதாரர்களின் மனுக்களை நிராகரிப்பதும், தள்ளுபடி செய்வதும் வங்கியாளர்களின் கைவந்த கலையாகும். சமூகத்தின் கடை கோடி மக்களாகிய அடித்தட்டு விளிம்பு நிலை மக்கள் மிகவும் போராட்ட வாழ்க்கையில் இருந்து வருகின்றனர்.

**படிப்பதற்கு வழி இல்லை, படித்த இளைஞர்களுக்கு வேலை இல்லை, வேலைக்கு சென்றவர்களுக்கு நியாயமான சட்டபூர்வ கூலி இல்லை என்ற அவல நிலை கடைகோடி மக்களின் வாழ்க்கையை சிதைத்து வருகிறது. இதனால் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ,சமூக பொருளாதார ரீதியாக முன்னேற்றம் காண முடியாமல் ஏங்கி தவித்து வருவதாக ஆய்வுகள் கூறுகிறது.**

இதனை உணராத வங்கிகள் வங்கித்துறை அலுவலர்கள் முறையான வழிகாட்டுதல்களை பின்பற்றாமல், சடங்கு போல மாவட்ட கலெக்டரால் ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பங்கள் தாட்கோ மூலம் வரவேற்கப்படுவதும் அதனை நேர்முகத் தேர்வு நடத்தி தகுதியானவர்களை தேர்வு செய்து வங்கிகளுக்கு பரிந்துரை செய்வது என்று ஒரு நாடகம் நடப்பது வாடிக்கையானது, தாட்கோ மூலம் பரிந்துரைக்கப்படும் தனிநபர் கடன் உதவி, தொழில் முனைவோருக்கு கடனுதவி தருவதற்கு வங்கிகள் ஏற்காததால் கொல்லாமல் கொலை செய்யும் பாவனையில் அலைக்கழித்து மன உளைச்சலுக்கு ஆளான பாதிக்கப்பட்டவர்கள் தனியார் நிதி நிறுவனங்களில் கடன் பெற்று வட்டியை கட்டி வாழ்க்கை முழுவதும் மீள முடியாத நிலையில் அடகு படுத்தப்பட்டு இறுதியாக தற்கொலைகளுக்கும் தள்ளப்படுகின்றனர்.

ஆகவே, ஒடுக்கப்பட்டோரின் வாழ்வுரிமைக்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை உருவாக்கி உதவியதற்கு வழி வகுத்துள்ளது. மேலும் கடைக்கோடி மக்களாகிய தாழ்த்தப்பட்ட சமூக மக்களை சுயதொழில் புரிந்து அவர்களை ஊக்குவித்து முன்னேற்றுவதற்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி கழகம் என்ற ஒரு நிறுவனத்தை தோற்றுவித்து, சமுதாயத்தில் பின்தங்கியுள்ள ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும், படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் தவிக்கும் பட்டதாரிகளுக்கும் தாட்கோ மானியத் திட்டத்தில் வங்கிகள் முன்வந்து கடன் உதவி வழங்கி பாதுகாக்க வேண்டும். இதை உறுதிப்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்த மாவட்ட அளவில் கலெக்டரின் தலைமையில் குழு அமைத்து செயல்படுத்திட கலெக்டரும் அரசும் முன்வர வேண்டும்.

தொடர்புக்கு: **98942 74211**



# பசிப் பிணியைப் போக்கும் காலை சத்துணவு திட்டம்

- ந.சேகரன்

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும், வளனும் சுரக்க வாழ்க” என்கிறது தமிழ்ப் பெருங்காப்பியமான மணிமேகலை.**

குறிப்பாகப் பள்ளிக்கு பசியோடு வரும் பிள்ளைகளுக்கு முதலில் உணவு வழங்குவது என்பது ஆற்றப்பட வேண்டியது மக்களிடமிருந்து வரி வசூலிக்கும் அரசின் முக்கிய சமூகக் கடமைகளில் முதன்மையானது ஆகும்.

அந்தவகையில், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை, சுதந்திரத்திற்கு முன்பே இந்தியாவிலே முதன் முதலாக நிறைவேற்றி பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கிய பெருமை படைத்த மாநிலம்தான் நம் தமிழ்நாடு.

**மதிய உணவுத்திட்டம் வந்த வரலாறு**

சுதந்திரத்திற்கு முன்பிருந்தே, இந்தியாவில் பசி, பட்டினிக் கொடுமைகள் பாமர மக்களை வாட்டி வதைத்த காலத்தில், பள்ளிகளில் ஆசிரியர்கள் மட்டுமே வந்திருக்க, படிக்க வேண்டிய மாணவர்களைத் தேட வேண்டிய கட்டாயச் சூழல் நிலவியது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, நீதிக்கட்சி ஆட்சியில் இருந்தபோது 1920 ஆம் ஆண்டில், சென்னை மேயராக இருந்த பி.டி.தியாகராசர், சென்னை மாகாணத்தில் சென்னை மாநகராட்சியின் சில பள்ளிகளில் மட்டும் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. பின் ஒரப்பாளையம், சேத்துப்பட்டு போன்ற பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கும் மதிய உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

அப்போதைய பிரிட்டிஷ் அரசு மதிய உணவுக்காக ஒரு மாணவனுக்கு ஒரு அணாவை மிஞ்சி செலவு செய்யக்கூடாது என நிபந்தனை விதித்திருந்தது. ஒரு கட்டத்தில், பள்ளிகளில் இலவசமாக உணவு கொடுக்கும் திட்டத்தால் அரசுக்கு நிதிச்சுமை ஏற்படுத்துகிறது என்று கூறி, 1925 ஏப்ரல் மாதத்தில் மதிய உணவுத் திட்டத்திற்கு தடை விதித்தது. மதிய உணவு நிறுத்தப்பட்டதும் பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவுக்குக் குறைந்துவிட்டது.

மதிய உணவுத்திட்டத்தை மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற அனைத்து அரசியல் கட்சிகள் ,பொதுமக்கள் அமைப்புகளுடன் நீதிக்கட்சியும் தொடர்ச்சியாக வலியுறுத்திப் போராடவே, வேறு வழியில்லாமல் ஆங்கிலேய அரசு அத்திட்டத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர அனுமதித்தது.

மேற்படி மதிய உணவுத்திட்டம் என்பது சென்னைப் பகுதியில் மட்டும் அமுல்படுத்தப்பட்டு வந்தது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இந்த மதியஉணவுத்திட்டத்தை மாநில அளவில் அமுல் படுத்திய பெருமை முதலமைச்சர் காமராசர் காலத்தில்தான்.

இதுசம்பந்தமாக கல்வித்துறை இயக்குநர் சுந்தரவடிவேலுவை அழைத்துப் பேசிய முதலமைச்சர் காமராசரிடம்” பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கப் பட்டால் பள்ளிகளில் இடைநிற்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிசமாக குறைத்து விடலாம் என்று சுந்தர வடிவேலு உறுதி அளிக்கிறார்.

அவரது கருத்தில் முழு உடன்பாடு கொண்ட முதலமைச்சர் காமராசர் மதிய உணவுத் திட்டம் மாநிலம் முழுமைக்கு அமுல் படுத்த வேண்டுமென்ற தனது விருப்பத்தை உறுதிப்பாட்டை அன்றைய மாநில நிதியமைச்சர் சி.சுப்பிரமணியத்திடம் கலந்து ஆலோசனை செய்கிறார்.

அன்றைய காலகட்டத்தில் தமிழகத்தின் தொடக்கப் பள்ளிகளில் 16 லட்சம் மாணவர்கள் படிப்பதால் இதற்கான ஆண்டு செலவு குறைந்தது ரூ.1 கோடி செலவாகும்..அடுத்தடுத்த ஆண்டுகளில் படிப்படியாக செலவீனம் கூடும் என்று கூறிய நிதியமைச்சர் மதிய உணவுத் திட்டம் சாத்யமாகாது. அது நிதி நெருக்கடியை உண்டாக்கி நமது ஆட்சியைக் கவிழ்த்துவிடவும் கூடும் என அபாய சங்கு ஊதுகிறார்.

எனவே பொதுமக்களின் ஆதரவோடு மதிய உணவுத் திட்டத்தை அமுல்படுத்தலாம் என்ற முடிவுக்கு வந்த முதலமைச்சர் காமராசர் அதற்கான முயற்சிகளில் தீவிரமாக



இறங்குகிறார்.அனைத்துத் தரப்பு மக்களிடம் ஆதரவைக் கோருகிறார். முதன்முதலாக தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள நாகலாபுரத்தைச் சேர்ந்த கிராம மக்கள் மாணவர்களின் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களை கொடுத்து முதலில் இந்த திட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றனர். பின்னர் பல கிராமங்களிலிருந்து உணவுப் பொருட்கள், நிதி உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன. சுமார்4000 பள்ளிகளில் மக்களின் நன்கொடை உணவுப்பொருட்கள் நிதி உதவி கொணடு இலவச மதிய உணவினை அளிக்கிறார் முதலமைச்சர் காமராசர்.

மக்களை மட்டுமே நம்பி இருந்தால் ஒருவேளை இந்த திட்டம் தோல்வி அடைய வாய்ப்புள்ளது என்று உணர்ந்த காமராசர், மதிய உணவுத் திட்டத்திற்கு இனிமேல் 60 சதவீதம் மாநில அரசும் 40 சதவீதம் மக்கள் கொடுத்தால் போதுமானது என்ற முடிவை அறிவிக்கிறார்.

பின்னர் மத்திய அரசின் உதவியைக் கோருகிறார். முதலில் மறுத்தது அப்போதைய ஒன்றிய காங்கிரஸ் அரசு மதிய உணவுத்திட்டத்தை ஆய்வு செய்து ஐந்தாண்டுத் திட்ட கொள்கை ஆய்வாளர்களின் பரிந்துரையை ஏற்று மதிய உணவுத்திட்டதிற்கு நிதி உதவி வழங்க முன்வந்தது. இவ்வாறாக இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாக தமிழகத்தில் மதிய உணவுத் திட்டம் வெற்றிகரமாக அமுலாகிவருகிறது.

எம்.ஜி.ஆர். 1982 இல் சத்துணவுத்திட்டத்தை துவக்கி நடைமுறைப்படுத்தினார். பள்ளிக்குச் செல்லாத 2 முதல் 5 வயது உடைய குழந்தைகளுக்கு குழந்தை நல மையங்களிலும் 5 முதல் 14 வயது உடைய பள்ளி மாணவர்கள் சத்துணவு வழங்கிடும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் முதன்முறையாக மதிய உணவில் மாதம் இரு முறை முட்டை வழங்கும் திட்டத்தை அறிவித்தார். இது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

பின்னர் 2010 ஆம் ஆண்டு வாரம் 5 நாட்கள் முட்டை வழங்க ஆவன செய்தார் கலைஞர். முட்டைசாப்பிடாத மாணவர்களுக்கு வாழைப்பழம் வழங்கப்பட்டது. ஜெயலலிதா அம்மையார் ஆட்சிகாலத்திர் கலவை சாதம் வழங்க ஏற்பாடு செய்தார். பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது கர்ப்பிணி பெண்களுக்கு சத்துணவு மாவு, 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு மாவு, வாரம் ஒரு முறை முட்டை. மதிய உணவில் 100 கிராம் கீரை காய்கறிகள் என சத்துணவுத் திட்டம் கலைஞரது ஆட்சிக் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் அவசியத்தை பார்ப்போம்.

நோய் தொற்று, உலக அளவில் ஊட்டச்சத்துக் குறைவு, எடைக்குறைவு போன்றவற்றால் பாதிக்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகம் உள்ள நாடு இந்தியா. அதாவது 10 குழந்தைகளில் 4 குழந்தைகள் போதிய உணவின்றியும் ஊட்டச்சத்தும் இன்றி அவதிப்படும் நாடு இந்தியா.

குறிப்பாக 18 மாநிலங்களில் ஊட்டச்சத்து இன்மை வெகுவாக அதிகரித்துள்ளது. இதனால், இந்தியாவின் வருங்கால மனித வளமும் நலமும் பாதிக்கப்படுகடின்றது என தேசிய குழந்தைகள் நல அமைப்பின் 2019–20 ஆய்வு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமல்ல, ஐ.நா.வின் யூனிசெப் என்ற குழந்தைகள் நல அமைப்பு இந்தியாவில் மேற்கொண்ட ஆய்வின்படி, இந்தியாவில் மட்டும் கடந்த சில ஆண்டுகளில் மட்டும், 15 லட்சம் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்றும், இதனால் ஒட்டு மொத்தமாக 24.7 கோடி மாணவரகள், உடலாலும் மனதாலும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளது.

ஆரம்ப நிலைப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு மோடி அரசு 2020 ஆகஸ்டில் ஒப்புதல் வழங்கியது. ஆனால் இன்றைய தேதி வரை காலையில் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் பற்றி மூச்சே விட வில்லை.

இதுகுறித்து பலகட்சி உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்ற நிலைக்குழு இது குறித்து ஒன்றிய அரசிடம் வினவிய போது, காலை உணவு வழங்கும் திடடத்திற்கு தேவைப்படும் 4000 கோடி ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அரசிற்கு நிதி இல்லை என நிதி அமைச்சகம் தெரிவித்ததை ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம், நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வருங்காலத்தை நிர்மாணிக்கூடிய கல்வித் துறையில் சத்துணவு, ஊட்டச்சத்து வழங்க தேவைப்படும் மிக சொற்ப தொகையாக 4000 கோடியை ஒதுக்க மறுக்கும் ஒன்றிய அரசு, கார்ப்பரேட்டுகளிடமிருந்து அரசுக்கு வரவேண்டிய கடன் தொகையில் பல லட்சம் கோடி ரூபாய்களை தள்ளுபடி செய்துள்ளது.

**சிலை எழுப்புவதிலும், சொந்த வசதிக்காக சொகுசு விமா னங்கள் வாங்க 8400 கோடி ரூபாய்களை செலவழிக்கும் ஒன்றிய அரசு தாய், தந்தையிடம் பொருளாதார வசதி இருந்தால் காலை மற்றும் மதிய உணவுத் திட்டம் அவசியமில்லை. இத்தகைய ஒரு வாழ்வியல் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.**

மூலதனத்தை கை வைக்காமல், உழைப்புச் சுரண்டலை ஒழிக்காமல் பொருளாதார சமத்துவ சூழலை உருவாக்க முடியாது.

தற்போது மாணவர்களின் வயிற்றில் அடிக்கிறது.

இதற்கு நேர்மாறாக, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக 1ம் வகுப்பு 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, காலையில் உணவு வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்து அதை செப்டம்பர் 16 தேதி முதல் அமுல்படுத்திஉள்ளது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்த ” காலை உணவு வழங்கும் திட்டத்தின் குறிக்கோள்கள்.

1) மாணவமாணவிகள் பசியின்றி பள்ளிக்கு வருதல்

2) ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படால் இருத்தல்

3) ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல்

4) பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல்.

5) வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவை

காலை உணவு வழங்கும் திட்டத்தின் முதன்மை குறிக் கோள்கள் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 1545 பள்ளிகளில் பயிலும் 1 லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது. பின்பு இந்தத் திட்டம் படிப்படியாக மாநில முழுமைக்கும் அமுல்படுத்தப்படும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

தொடர்புக்கு: **94431 20051**

>> 02ம் பக்கத் தொடர்ச்சி

கொள்கையாக வரித்துக் கொண்டிருக்கிறது.

அதனை எதிர்த்து போராடி தோல்வியடையச் செய்வது இடதுசாரிகளின் வரலாற்று கடமையாகும். இந்தப் பார்வைத் தெளிவோடு இடதுஒற்றுமை என்ற பதாகையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உயர்த்திப் பிடிக்கிறது.

இந்திய அரசியலில் ஒரு அசைக்க முடியாத வலிமை வாய்ந்த சுயேச்சையான தூணாக இடதுசாரிகள் வலிமை பெறுவதற்கு இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் இயக்கங்கள் கோட்பாடு அடிப்படையில் ஒன்றுபடுவது இந்த காலத்தின் தேவை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகின்றது.

இந்த ஒற்றுமை அர்ப்பணிப்பும், அர்த்தமும் உள்ள பங்களிப்பைச் செய்ய இடதுசாரிகளுக்கு உதவுவதோடு, மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகளை ஒரு விரிந்த, பரந்த கூட்டணியை கட்டுவதற்கு மட்டுமின்றி, சமூக விடுதலைக்கான போராட்டங்களையும் வலிமை பெறச் செய்யும்.

தோழர்களே நமது கட்சியின் அரசியல் வரைவு தீர்மானம் குறித்து நாடே பேசிக் கொண்டுள்ளது.

இவைகள் குறித்து விவாதித்து செழுமைப்படுத்தி, நிறைவேற்றவே விஜயவாடாவில் கூட உள்ளோம்.

ஆம்! கொல்லத்தில் நடைபெற்ற 23வது மாநாட்டில் நிறைவேற்றிய அரசியல் தீர்மானத்தை அமைப்புநிலை பணிகளை நிறைவேற்றிட, செயல்படுத்திட கடந்த நான்காண்டு காலம் நமது பெரும்படை போராடியது.

களத்தில் இருந்த நாம் இன்று பாசறை நோக்கிச் செல்கிறோம். விஜயவாடாவில் நாடு முழுவதிலுமிருந்து தளபதிகள் பாசறைக்கு வருகின்றார்கள்.

ஓய்வு எடுக்க அல்ல, மாறாக அனுபவங்களை பகிர்ந்து முன்னைக்காட்டிலும் தீவிரமான பங்களிப்பை அளித்திட களம் காண, திட்டம் வகுக்க கூட உள்ளோம்.

தமிழ்நாட்டில் இருந்து 100 பிரதிநிதிகள் மற்றும் 10 மாற்று பிரதிநிதிகள் பங்கேற்க இருக்கின்றார்கள்.

மாநாட்டின் தொடக்க நாளான அக்டோபர் 14ம் நாள் வரலாறு காணாத மகத்தான பேரணி நடைபெறவுள்ளது.

குறிப்பாக சீருடை அணிந்த பயிற்சி பெற்ற செந்தொண்டர்களின் மகத்தான பேரணி அதனை தொடர்ந்து லட்சக்கணக்கான மக்கள் பங்குபெறும் பேரணியும் நடைபெறவுள்ளது. நாமும் பங்கேற்போம். நமது பங்களிப்பை செய்திடுவோம். விஜயவாடா சிவப்பாகட்டும்.


**நாட்டின் கவனத்தை ஈர்ப்போம் -**

**நாட்டு மக்களின் நல்லாதரவை பெறுவோம்!**

**சர்வாதிகார, பாசிச மோடி அரசுக்கு முடிவு கட்டுவோம்!**

மீண்டும் சந்திப்போம். வணக்கம்

**தோழமைமிக்க,**



**(இரா.முத்தரசன்) மாநிலச் செயலாளர்**



-ஆர்.பாலச்சந்திரன்



# புத்தொளி காட்டிய புரட்சி வீரர் சீனிவாசராவ்

**மனித குல எழுச்சியும், விடுதலையும், முன்னேற்றமும் எண்ணற்ற விடுதலைப் போராளிகளின் தன்னலமற்ற போராட்டங்களால்தான் நிகழ்ந்தது, இது மறுக்கமுடியாத உண்மை. இன்றைய பொது வாழ்வில் சுயநலங்களும் படோபங்களும். நீக்கமற கலந்துள்ள நிலையில் மனிதகுல முன்னேற்றத்திற்கு பாடுபட முன் வந்துள்ள இளைஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவது நமது முந்தைய தலைமுறை விடுதலைப் போராளிகள்தான். அத்தகைய போராளிபுரட்சிவீரர்தான் நமது தோழர் சீனிவாசராவ் அவர்கள்.**

கர்னாடக மாநிலம் பிறந்து வாழ்நாளெல்லாம் தமிழ் நாட்டிலேயே வாழ்ந்து,உழவர்பெருமக்களுக்காகவே போராடி உயிர் நீத்தவர் சீனிவாசராவ். அன்னிய ஆட்சியை எதிர்த்துப் போராடி ,சுற்ற சுகங்களைத் துறந்து ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்கொடிக்கப் போராடியவர் தோழர் சீனிவாசராவ். தமிழகம் முழுவதும் சுற்றி விவசாயிகளை ஒன்றுதிரட்டி சங்கம் அமைத்து எழுச்சியுறச் செய்தவர்.

பி.எஸ்.ஆர்.எனதோழர்களால் அன்புடன் அழைக்கப்படும் சீனிவாசராவ் அவர்கள் கர்நாடக மாநிலத்தில் தென் கன்னடப் பகுதியைச்சேர்ந்த 'படகரா'வில் 1907ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் நாள் பிறந்தார். அவர் சிறுவனாக இருக்கும்போதே தந்தையார் காலமானார். துணை நீதிபதியாக இருந்த மாமா வீட்டில் வாழவேண்டியிருந்தது.

சீனிவாசராவ் பள்ளிப் படிப்பை முடித்து பெங்களூர் கிருத்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். பள்ளியில் முதல் மாணாக்கராகத் திகழ்ந்தார் அச்சமயம் மாணவர்களிடையே நாட்டு விடுதலைப்.போராட்ட உணர்வு மேலோங்கியிருந்தது 1920ஆம் ஆண்டில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கட்சி மகாநாடு அரசின் ஆதரவு பெற்ற கல்வி நிறுவனங்களைப் புறக்கணித்து, மாணவர்கள் வெளியேற வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது. கல்லூரியில் முதல் தர மாணவராக விளங்கிய சீனிவாசராவ் படிப்பைத்துறந்தார். நாட்டு விடுதலைப் போரில் ஈடுபடலானார். பிரிட்டீஷ் அரசில் உயர் பதவியில் இருந்த அவர் மாமா ஆத்திரங்கொண்டார்.சீனிவாசராவ் வீட்டைவிட்டு வெளியேற்றப் பட்டார்.

வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட சீனிவாசராவ் பல இடங்களுக்குச்சென்றார் பலவேலைகளைச்செய்தார். பின்னர் சிங்கப்பூர் சென்று சிலகாலம் உணவு விடுதி நடத்தினார்.ஆனால் அவர் எண்ணங்கள் முழுவதும் தன் தாய் நாட்டை நோக்கியே இருந்தன 1930ஆம் ஆண்டு கப்பலில் சென்னை திரும்பினார். விடுதலைப் போராட்ட வீரராகத் தன் வாழ்வைத் துவங்கினார்

இரண்டுமுறை உப்புச்சத்யாகிரகப் போரில் கைது செய்யப்பட்டார்.பின்னர் அன்னியத்துணிமறியலிலும்கலந்து கொண்டார். போலீசாரால் கடுமையாகத்தாக்கப்பட்டார். அதே ஆண்டு அவர் தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் ஆறு மாதம் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை சிறையில் பிரபல காங்கிரஸ் தலைவர் நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் பாதுகாப்புக் கைதியாக வைக்கப் பட்டிருந்தார். நேத்தாஜியுடன் அடிக்கடி சந்தித்தார் விவாதம் நடத்தினார்.

அதேசிறையில் முகுந்தலால் சர்க்கார், கம்யூனிஸ்ட் அமீர் ஹைதர்கான் ஆகியோரும் இருந்தனர். அமீர் ஹைதர் கான் அவர்கள் சீனிவாசராவைச் சந்தித்து மார்க்சிய கருத்துக்கள் உள்ள நூல்களைக் கொடுத்துப் படிக்கச்செய்தார். விளக்கம் அளித்தார். மார்க்சியக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு சீனிவாசராவ் கம்யூனிஸ்ட்டாக மாறினார். விடுதலையடைந்தபின் 1934ஆம் ஆண்டு பாட்னா நகரில் காங்கிரஸ் மகாநாடு நடந்தது இதில் சீனிவாசராவ், பி.ராமமூர்த்தி, ஏ. கே.கோபாலன், இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு ஆகியோர் கலந்து கொண்டனர். 1934ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட்கட்சி தடை செய்யப்பட்டதால் கம்யூனிஸ்ட் கட்சியினர் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்து செயல் பட்டனர்.

1936இல் தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சியின் முதலாவது மகாநாடு சேலத்தில் நடைபெற்றது.அதில் தோழர் ஜீவானந்தம் செயலாளராகவும் நீலாவதி சுப்ரமணியம்,பி சீனிவாசராவ் ஆகியோர் இணைச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

**1937ஆம் ஆண்டு ஜனசக்தி துவக்கப்பட்டது. நியூ ஏஜ் ஆங்கில இதழும் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் உலகயுத்தம் ஆரம்பித்தது. யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் செய்த கம்யூனிஸ்ட்கள் கைது செய்யப் பட்டனர்..1941இல் ஹிட்லரின் ஜெர்மனி சோவியத்யூனியனைத் தாக்கத் தொடங்கியது. அது பாசிசத்தை எதிர்த்த மக்கள் யுத்தமாக மாறியது. எனவேகம்யூனிஸ்ட் கட்சி பாசிச எதிர்ப்பு யுத்தத்தை ஆதரிக்க முடிவெடுத்தது .**

லக்னோவில் 1936 ஏப்ரல் 11–ல் அகில இந்திய விவசாயிகள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து பி. எஸ்.ஆரும் ஜீவாவும் கலந்து கொண்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாடு 1943 மே23ஜூன் 1ம் நாள் பம்பாயில் நடைபெற்றது. நாடெங்கும் உழைக்கும் விவசாயிகளை' விவசாய சங்க' அமைப்புக்குள் திரட்டவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. 1943 ஆகஸ்ட் 14 அன்று தமிழ் நாடு விவசாயிகள் சங்க அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அமைப்புக் குழுவுக்கு பி.சீனிவாசராவ் செயலாளராக தேர்ந்தெடுக்கப் பட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்குழு இரு மாதங்களுக்குள் மாவட்டங்களில் 19 இடங்களில் கிளைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

அக்காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் நிலங்கள் முழுக்க முழுக்க நிலப்பிரபுக்கள் மற்றும் ஆதீனங்கள் வசம் இருந்தன. மாவட்டத்து நிலப் பிரபுக்களும் மடத்தின் ஏஜண்டுகளும் சிற்றரசர்கள் போல் ஆதிக்கம் செலுத்திவந்தனர். நிலப்பிரபுக்களிடமும் மடங்களிடமும் குத்தகைதாரர்களாக இருந்த விவசாயிகள் நிலைமை படுமோசமாக இருந்தது. அவர்களுக்கு விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்குதான் கிடைத்தது. மீதி நான்கு பங்கு நில உரிமையாளருக்குப் போய்ச்சேரும். துக்காணி நிலம் வைத்திருந்த ஏழை விவசாயிகளும் காலப்போக்கில் அதை இழந்து விவசாயத் தொழிலாளியாகவும் பண்ணையடிமையாகவும் இருந்தனர். அவர்களின் வாழ்கை நிலைமையே மிகக் கொடூரமாக இருந்தது. சரியாக வேலை செய்யவில்லை எனக் கருதினாலோ பண்ணை அடிமைகள் கட்டி வைத்து சாட்டையால் அடிக்கப் படுவார்கள். வாயில் சாணிப்பால் ஊற்றிக் குடிக்கவைப்பார்கள். இந்தப் பின்னணியில்தான் பி.சீனிவாசராவ் தஞ்சைமண்ணில் தன் பணியைத் துவக்கினார்

தஞ்சை மாவட்ட ஏழை விவசாயிகள் படும் கொடுமைகளைக் கண்டு அவர்களுக்கு சங்கம் அமைத்துக் கொடுத்தார். விவசாயிகள் போராடினர். போராட்டங்களை ஒடுக்குவதற்க்கு பல அடக்குமுறைகளைக் கையாண்டனர் பண்ணையார்கள், மடங்கள். விவசாயிகள் உறுதியாக நின்று போராடியதன் விளைவாக 1944ல் களப்பாலில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட்து. களப்பால் குப்பு, அமிர்தலிங்கம், ராஜகோபால் ஆகியோர் விவசாயிகள் தரப்பில் கலந்து கொண்டனர். ஒப்பந்தம் 1) பண்ணையாட்களைச் சாட்டையால் அடித்தல், சாணிப்பால் குடிக்கச்செய்தல் ஆகியவைகளை மிராசுதார்கள் நிறுத்த வேண்டும். 2) முத்திரை மரக்காலில் நெல் அளக்கவேண்டும். இந்த ஒப்பந்தம் விவசாயத் தொழிலாளர்களுக்கு பெரும் ஊக்கத்தை அளித்தது.

1944 மேமாதம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் முதல் மகாநாடு மன்னார்குடியில் நடைபெற்றது.பி.சீனிவாசராவ் தலைவராகவும், மணலி கந்தசாமி பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் பி.எஸ்.ஆர். தஞ்சை மாவட்டத்தை கவனம் செலுத்திக் கொண்டே இதர மாவட்டங்களிலும் விவசாயிகள் இயக்கத்திற்கு வழிகாட்டினார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திராயிருப்புப் பகுதியில் விளைச்சலில் சரிபாதி கேட்டு விவசாயிகள் நடத்திய சுத்த வாரப் போராட்டமும் கீழப் பசலை உள்ளிட்ட மானாமதுரைப் பகுதியில் ஜமீன் விவசாயிகள் நடத்திய போராட்டமும், முக்கியமானவையாகும்.

உச்சவரம்புச் சட்டமியற்றி மிச்சநிலத்தை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கவேண்டுமாய் கம்யூனிஸ்ட் கட்சியும், விவசாயிகள் சங்கமும் 1961 செப்டம்பர் 14ல் மாநிலந் தழுவிய மறியல் போராட்டத்தைத் தொடங்கின. 11 ஆயிரம்பேர் கைது ஆகினர். தமிழ்நாடு முழுவதும் அலைந்து திரிந்ததில் ஏற்கனவே ஆஸ்த்மா நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவரின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. செப்டம்பர்29ம் நாள் பின்னிரவில் காலமானார். தஞ்சைத் தரணியே கண்ணீர் விட்டு அழுதது. அவரது வேண்டுகோளின்படி அவரது உடல் திருத்துறைப்பூண்டியில் புதைக்கப்பட்டது. அவர் நினைவு நாள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர்30ஆம் நாள் அனுஷ்டிக்கப்படுகிறது. தமிழக அரசும் அவருக்கு திருத்துறைப்பூண்டியில் நினைவுச் சின்னம் எழுப்பி மரியாதை செலுத்தியுள்ளது. அந்த மாபெரும் புரட்சியாளருக்கு மரியாதை செலுத்துவோமாக !

தொடர்புக்கு: 20092922

# எழுச்சியோடு நடந்த சிபிஐ 7வது கோலார் மாவட்ட மாநாடு

கர்நாடக மாநிலம் கோலார் தங்க வயலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 7வது மாவட்ட மாநாடு செப்டம்பர் 18, 19 ஆகிய நாட்களில் நடைபெற்றது.


நகரின் உரிகம் ரயில் நிலையம் அருகிலிருந்து நூற்றுக் கணக்கான தோழர்கள் கலந்து கொண்ட பேரணி நகரைச் சுற்றி மாநாடு நடைபெற்ற கிங் ஜார்ஜ் அரங்கை அடைந்தது.

பேரணி நிறைவடைந்த உடன் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

செங்கொடியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கர்நாடகா மாநிலச் செயலாளர் சாத்தி சுந்தரேஷ் ஏற்றி வைத்து பொதுக்கூட்டத்தை துவக்கி வைத்தார். மாநாட்டு வரவேற்புக் குழு செயலாளர் ஜோதிபாசு தலைமை வகித்தார். தங்கவயல் தாலுக்கா குழு உறுப்பினர் அந்துரஜ் வரவேற்றார். துணைச் செயலாளர் ரஞ்சித் நன்றியுரை ஆற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன், கர்நாடக மாநிலச் செயலாளர் சாத்தி சுந்தரேஷ், தமிழ்நாடு மாநிலக் குழு உறுப்பினர் லெனின், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கர்நாடகா மாநிலத் தலைவர் ஹரிஷ் பாலா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்.

சி.மகேந்திரன் பேசுகையில், கோலார் பகுதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் தவிர்க்க முடியாத இயக்கம். வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட தங்கச் சுரங்கம் மூடியே இருக்க வேண்டும் என்று மோடி அரசு நினைக்கிறது. அதனை



திறக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதி பூண்டு இருக்கிறது என்று பிரகடனம் செய்தார்.

சாத்தி சுந்தரேஷ் பேசும் போது, கோலார் தங்க வயல் தொகுதியில் இருந்து தான் முதல் சட்டமன்றத் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு முதல் சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யப்பட்டார். இப்போது சட்டமன்றத்தில் மீண்டும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் குரல் ஒலிக்க கோலார் ஒரு வாய்ப்பை வழங்கக் காத்திருக்கிறது என்றார்.

தோழர் லெனின் பேசும்போது, கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் அம்பேத்கரிய இயக்கத்துக்கும் இருக்கும் உறவுகள் வரலாற்றுப் பூர்வமானது. பீமா கொரெகான் வரலாற்று நிகழ்வினை கேள்விப்பட்டு அங்கு சென்ற அம்பேத்கார் ஜெய் பீம் என்ற முழக்கத்தை வைத்தார். அந்த முழக்கத்தை லால் ஸலாம் என்ற முழக்கத்தோடு கம்யூனிஸ்ட் தோழர்கள் வைக்கின்றனர். ஆனால், அம்பேத்கரை போற்றுகிறோம் என்ற பெயரில் மோடி படத்தோடு அம்பேத்கர் படத்தை போட்டு அம்பேத்கரை அவமதிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர். அம்பேத்கர் தந்த அரசியல் சாசன சட்டத்தை மாற்றி விட்டு ஹிந்துத்துவா மனுநீதி சட்டங்களை நடைமுறைப்படுத்த முயலும் பாஜக, சங் பரிவார் அமைப்புகள் கண்டனத்துக்கு உரியன என்றார்.

ஹரிஷ் பாலா பேசும் போது, கோலார் இளைஞர்கள் கோலார் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் தினசரி பெங்களூரு நகருக்கு பயணம் செய்யும் நிலை உள்ளது. இங்கே மூடி இருக்கும் தங்கச் சுரங்கத்தை திறப்பதன் மூலமும் புதிய தொழிற்சாலைகளை துவங்கியும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். காவிமயமாக்கும் தேசியக் கல்விக் கொள்கையை ஒன்றிணைந்து புறக்கணிக்க வேண்டும். 40% கமிஷன் பாஜக அரசை மாநிலத்தில் இருந்து விரட்ட வேண்டும் என்றார்.

இரண்டாம் நாள் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. அதனை துவங்கி வைத்து தோழர். லெனின் உரையாற்றினார். அரசியல் விளக்க உரையை சி.மகேந்திரன் ஆற்றினார். மாநில மாநாட்டு நோக்கவுரையை ஹரிஷ் பாலா ஆற்றினார். புதிய மாவட்டச் செயலாளராக ஜோதிபாசு, பிற நிர்வாகிகளும், புதிய மாவட்டக் குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

# மாவீரன் பகத்சிங்கின் கடிதமும் – பிரிட்டிஷாருக்கு சாவர்க்கர் கெஞ்சி எழுதிய கடிதமும்!

- ராமானுஜம்

**லாகூர் சிறை 1931, பகத் சிங்கின் கடைசிக் கடிதம் பஞ்சாப் கவர்னருக்கு எழுதப்பட்டது.**

இந்தியாவின் வைஸ்ராயால் அமுல்படுத்தப்பட்ட'' சிறப்பு லாகூர் சதி வழக்கு சட்டம் ''மூலமாக பிரிட்டிஷ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, நாங்கள் 7 அக் 1930 அன்று மரண த|ண்டனை பெற வேண்டும். அதற்கான குற்றச்சாட்டு: ''''''மாட்சிமை கொண்ட இங்கிலாந்து அரசருக்கெதிராகப் போர் நடத்தியது''''

நீதிமன்றம் இரு முடிவுகளை முன்கூட்டியே தீர்மானித்து வைத்திருந்தது :

முதலாவது, பிரிட்டிஷ் தேசத்திற்கும், இந்திய தேசத்திற்கும் இடையே ஒரு போர்ச் சூழல் உள்ளது. இரண்டாவது, நாங்கள் ''அந்தப்'' போரில் உண்மையாகவே ஈடுபட்டோம். ஆக, அதன்படி நாங்கள் போர்க் கைதிகள்.

முதலாம் கருத்தின் படி, அந்தச் சொற்றொடரின் பொருள்படும்படியான ஒரு போர் நடந்து கொண்டிருக்கவில்லை.....

''நாட்டின் பாடுபடும் மக்களை மற்றும் இயற்கை வளங்களைச் சில ஒட்டுண்ணிகளின் கூட்டம் கொள்ளையடிப்பது எதுவரை நடக்குமோ அது வரை அப்படி ஒரு போராட்டம் நடக்கும், நிகழும் என்று நாங்கள் பிரகடனப்படுத்துகிறோம்.

எப்படி இருந்தாலும், அந்த ஒட்டுண்ணிகள் முழுமுதல் பிரிட்டிஷ் முதலாளியாகவோ, பிரிட்டிஷ்இந்தியக் கலப்பு முதலாளியாகவோ முழு இந்திய முதலாளியாகவோ இருந்தாலும், யாராக இருந்தாலும் ஆங்கிலேய அரசின் அரசு அதிகார வர்க்கத்தின் துணையுடன் கொடுமையான சுரண்டலை நிகழ்த்திக் கொண்டுதானிருப்பார்கள்.

இந்தியச் சமூகத்தின் மேல்தட்டு மக்களின் தலைவர்களை எளிய சலுகைகள் மூலமும், சமரசங்களின் மூலமாகவும் வென்றெடுத்தாலும், அதனால் தேச இயக்கங்களுக்குத் தற்காலிகமாகப் பின்னடைவுகளைத் தந்தாலும் ஒன்றும் கவலையில்லை. இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் முன்னணிப் படையான புரட்சிகரக் கட்சி, இந்தப் போராட்டத்தின் மத்தியில் கைவிடப்பட்டிருந்தாலும் கவலையில்லை.

எங்கள் மீது பரிவும், கவலையையும் வெளிக்காட்டிய தலைவர்களுக்கு நாங்கள் கடன்பட்டிருக்கிறோம். இருப்பினும், அவர்கள், இங்கு நடக்கும் போரின் முன்னணிப் படையான, வீடற்ற, துணைக்காளற்ற, காசு பணமற்ற உழைப்பாளிகளைப் பற்றிக் கிஞ்சித்தும் தங்கள் பேச்சு வார்த்தைகளில் கொள்ளாதிருந்ததைப் பாராமுகமொடு கடக்க இயலாது.

இதே தலைவர்கள் இவர்களைத் தங்களின் அதீதக் கற்பனையான அஹிம்சை வழி என்னும் பழங்கதையான கொள்கையின் எதிரிகளாகக் கருதுகிறார்கள். தங்கள் கணவன்மார்களைச், சகோதரர்களைத் தங்களின் நெருங்கிய உற்றாரை, அன்பிற்குரியாரைத் தங்கள் உயிர் உட்படத் தயக்கமின்றித் தியாகம் செய்த செய்யத் துணிந்த எங்கள் வீரப் பெண்களை உங்கள் அரசு சட்ட விரோதிகள் என அறிவித்துள்ளது எப்படி?

உங்கள் அரசின் பிரதிநிதிகள் அந்த மாசற்ற போராளிகளின் குறையற்ற பண்பாடு மற்றும் அவர்களின் நேர்மையான கட்சியைப் பற்றி அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வைக்க மிகவும் கீழ்த் தரமான முறையினில் இறங்கினாலும் கவலையில்லை..

போர் தொடரும்.!!

போர் வெவ்வேறு நேரங்களில், வெவ்வேறு வடிவங்களில் நிகழும். இப்போது அது வெளிப்படையாகவும், ரகசியத் தன்மை கொண்டும், முழுமையாகப் போர்க்குண நடவடிக்கை கொண்டதாயும், கடுமையான '' வாழ்வா சாவா '' போராட்டமாகவும் இருக்கும்.

**''எங்கள் போர்முறை'' எந்த வழி செல்ல வேண்டும் என்கிற தேர்வு உங்களுடையது. நீங்கள் தேர்வு செய்யும் அந்த வழி முறை குருதி தோய்ந்ததா, அல்லது ஓரளவு அமைதிப் பட்டதா என்பது உங்கள் முடிவு. எதை வேண்டுமானாலும் தேர்வு செய்து கொள்ளுங்கள்.**

**ஆனால், அந்தப் போர், தொடர்ந்து நிகழ்த்தப்படும்; அந்தப் போரானது,**



**கவனத்தில் கொள்ளக் கூடாத, மற்றும் அர்த்தமற்ற நெறிமுறை கூறும் தத்துவங்களைக் கணக்கில், கவனத்தில் கொள்ளாது அது இடையறாது நடத்தப்படும்.**

அது புது உத்வேகத்துடனும், அதிகப்பட்ட துணிச்சலுடனும், தடுமாற்றமேயில்லாத தீர்மானத்துடனும் முன்னேறும்.

எல்லாவிதமான சுரண்டல்களையும் ஒரு முடிவுக்குக் கொண்டுவரும், மொத்த சமூக வளர்ச்சியைக் கொண்டுவரும் சமூக நிலையை உருவாக்கி, மனித சமூகமே உண்மையான, நிரந்தரமான அமைதிதரும் காலகட்டத்துக்குள் வந்து சேர்க்கும் சோஷலிசக் குடியரசு நிறுவப்படும் வரை நடக்கும்.

இன்னும் குறுகிய காலத்திற்குள் இறுதி யுத்தம் நடந்தேறும். இறுதித் தீர்வும் காணப்பட்டுவிடும்.

ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்தியச் சுரண்டலின் நாட்கள் எண்ணப்படுகின்றன. இந்தப் போர் எங்களால் துவக்கப் படவில்லை; எங்கள் உயிர்களோடும் அது முடியப் போவதுமில்லை. அது வரலாற்றுச் சம்பவங்கள் மற்றும் இங்குள்ள சூழ்நிலைகளினால் தவிர்க்க முடியாது உருவான விளைவு.

ஒப்பிடற்கரிய ஜதின் தாசின் தியாகம், மிகுந்த சோகம் தந்த அரும் தியாகம் புரிந்த தோழன் பகவதி சரண், மற்றும் எங்களின் உயிர்ப் போராளி வீரன் சந்திரசேகர் ஆசாத் இவர்களின் தியாகமெனும் சங்கிலியில் எங்கள் பங்கு ஒரு சிறு கண்ணியாய் அமையும்.

எங்கள் விதி பற்றிக் கூறுவதெனில், நீங்கள் எப்போது எங்களைச் சாகடிக்க முடிவெடுத்தீர்களோ, அதைச் செய்து முடிப்பீர்கள் என்றே சொல்ல விரும்புகிறோம்.

அதிகாரம் என்பது உலகில் அதிகபட்ச அளவு நியாயப் படுத்தும் தன்மை கொண்டது; நீங்கள் அந்த அதிகாரத்தை உங்கள் கைகளில் வைத்துள்ளீர்கள்.

''வல்லான் சொல்வதே சரியான வாக்கு'' என்ற அடைச் சொற்றொடர் உங்க|ளை வழி நடத்தும் குறிக்கோளாக உள்ளது. எங்கள் வழக்கு விசாரணை முழுவதுமே இதற்கொரு சரியான நிரூபணம்.

உங்களின் நீதிமன்றத் தீர்ப்பின்படி, ''நாங்கள் உங்கள் மீது போர் தொடுத்தோம். ஆகவே, நாங்கள் போர்க் கைதிகள்'' எனச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அதன் படியே நாங்கள் தூக்கிலிடப் பட்டு மரணமடைவதை விட, சுடப்பட்டுச் சாகடிக்கப்படுவதையே கேட்கிறோம். அது நீங்கள் உங்கள் நீதிமன்றம் சொன்னதை எம்மாதிரிப் புரிந்தீர்கள் என்பதைப் பொறுத்தது.

எங்களின் மரணத்தை நிறைவேற்ற ராணுவத்துறையின் பிரிவிற்குத் தயவு செய்து உத்தரவிடுவீர்கள் என்று வேண்டுகிறோம், நம்புகிறோம்.

உங்கள்

**பகத் சிங்**

## சாவர்க்கரின் சரணாகதி கடிதம்

வீரத்தின் அடையாளம், போர்க்குணத்தின் முத்திரை மனிதன், வழிதிருந்தி, வருந்தி, வந்த பிள்ளை, ஆர் எஸ் எஸ் சின் சரணாகதித் தத்துவத்தின் கையேடு, உசுப்பி விட்டு ஒதுங்கி வாழ்ந்து பெயர் பெற்ற வீர சவார்க்கர் 26 மே 1883 26 ஃபிப் 1966

விடுதலைஇயக்கம்நடந்து கொண்டிருந்தபோது அந்தமான் செல்லுலார் சிறையிலடைக்கப் பட்ட சவார்க்கர், தன் சக தோழர்களோடு சிறைக் கைதி வாழ்க்கை வாழ்ந்த போதுதான் சில வீரக் கடிதங்களை மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் மாமன்னருக்கு அனுப்பினார், இங்கிருந்த உள்துறை அதிகாரி மூலமாக அனுப்பிய கடிதங்கள் அதிகாரப் பூர்வமாகச் சிறைப் பதிவேடுகளில் உள்ளன.

இந்த வேலைகளில் மிகுந்த சாமர்த்தியவாதிகள் டில்லியில் இருந்து கொண்டு இதை இன்றுவரை ஒன்றும் செய்யாதிருப்பர் என ஏதாவதொரு கடவுளிடம் வேண்டுவோமாக. 1911, 1913, 1914, 1917 மற்றும் 1920 இவற்றில் மிக்கப் பெருமை கொண்ட அவரின் கடித்ததிற்குள்:

வினாயக் தாமோதர் சவார்க்கரின் முறையீடு

செல்லுலார் சிறை, அந்தமான் 1913

இந்திய அரசாங்கத்தின் உள்துறை உறுப்பினர் அவர்களுக்கு,

தங்களின் கனிவான பரிசீலனைக்காகக் கீழ்க்கண்ட குறிப்புக்களை உங்கள் முன் பணிவோடு சமர்ப்பிக்கிறேன்.

இங்கே நான் 1911 ஜூன் மாதம் வந்த போது, என் கட்சியைச் சேர்ந்த மற்ற குற்றவாளிகளுடன் சேர்த்து தலைமை இயக்குனர் அலுவலகத்திற்கு அழைத்து வரப் பட்டேன். அங்கு நான் ''டி'' பிரிவு எனக் கொள்ளப் பட்டேன். டி என்பது பயங்கரமான கைதி எனக் குறிப்பிடுவதாகும்.: மற்றக் கைதிகள் டி பிரிவாய்க் கொள்ளப்படவில்லை. அதன் பின் நான் 6 மாதங்கள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டேன். இந்த நாட்களில் என் கைகளில் ரத்தம் வந்த போதிலும் தேங்காய் நார் உறிப்பதும், தேங்காய் உடைப்பதுமான வேலைக்கு ஆட்படுத்தப் பட்டேன். பின்னர், சிறையிலேயே மிகக் கடுமையான எண்ணெய்ச் செக்கிழுக்கும் வேலை கொடுக்கப்பட்டேன். இந்த ஆறு மாதங்கள் முழுவதிலும், என் நடவடிக்கைகள் மிக மிகச் சிறப்பாய் இன்றுவரை இருந்த போதிலும், என்னுடன் உள்ளே வந்த கைதிகள் வெளியில் போக அனுமதிக்கப் பட்ட போதிலும், நான் போக அனுமதிக்கப் படவே இல்லை.

அன்றிலிருந்து இன்று வரை, என் நடவடிக்கைகளை எவ்வளவு நன்றாக வைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு வைத்திருக்கிறேன்.

கைதிகளின் தர வரிசையில் நான் அடுத்த நிலைக்கு உயர்த்தும்படி கோரிக்கை தந்ததற்கு, ''நான் ஒரு வேறு சிறப்பு வகைக் கைதி என்றும் அதனால், கைதிப் பிரிவு உயர்த்தப்பட மாட்டாது'' என்றும் கூறினர். அதன்படி எங்களில் யாராவது நல்ல உணவும், நல்ல சிகிச்சையும் வேண்டுமெனக் கேட்டதற்கு, '' நீங்கள் வெறும் சாதாரணக் கைதிகள்தான்; மற்றவர்கள் என்ன சாப்பிடுகிறார்களோ அதையேதான் சாப்பிட வேண்டும்'' என்று சொல்லப் பட்டோம்.

மரியாதைக்குரிய ஐயா ! ஒரு தனிவகைப்பட்ட சிரமங்களுக்கு மட்டுமே எங்களைத் தனிவகைப்பட்ட கைதிகள்'' என்கிறார்கள்....ஒருவேளை நான் இந்தியச் சிறைகளில் இருந்திருப்பேனேயானால், இந்த கால கட்டத்திற்குள், தண்டனைகாலக் குறைப்பைச் சம்பாத்தித்திருப்பேன்; வீட்டிற்கு இன்னும் பல முறை கடிதங்கள் அனுப்பியிருப்பேன். பார்வையாளர்களைச் சந்தித்திருப்பேன்...

...நான் வேண்டுவதெல்லாம் பல்வகைக் குற்றவாளிகளுக்கும், வழக்கமாகக் குற்றச் செயல் புரிவோர்க்கும் காட்டக் கூடிய சலுகைகளும், வசதி களும் எனக்கும் காட்டப் படக் கூடாதா?'' இதே சிறையில் என்னை நிரந்தரமாக வைக் கும் திட்டமானது, எனக்கு வாழ்வையும், நம்பிக்கையையும் இருத்திக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்னும் நம்பிக்கையை இழந்து போகச் செய்யும்.

குறிப்பிட்ட தண்டனை காலக் குற்றவாளிகள் விஷயமே வேறு. ஆனால், ஐயா ! வாழ்க்கை ஒரு 50 வருட காலமானது என் முகத்தைப் பார்த்தவாறு இருக்கிறது. பல இழிசெயல் குற்றவாளிகளுக்குத் தங்கள் வாழ்வை இலகுவாக்கிக்கொள்ள கொடுக்கப்பட்ட சலுகைகள் கூட எனக்கு மறுக்கப்பட்ட நிலையில் என் நேர்மையான மன சக்தியை என்னால் எப்படி மேலெடுத்துச் செல்ல முடியும்? ஆகவே,என்னை இந்தியப் பரப்பி லுள்ள ஏதாவதொரு சிறைக்கு அனுப்பினால், அங்கே எனக்கு தண்டனைக்காலக் குறைப்பு கிட்டலாம் அவ்வப்போது தங்கள் உற்றார், உறவினர், வேண்டியவர்களைக் காணும் அரிய வரம் கிடைக்கலாம்துரதிர்ஷ்டவசமாய் சிறையில் வாடுபவர்களுக்கு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை கிடைக்கும்,.

எல்லாவற்றையும் விட 14 வருடங்களில் விடுதலை பெறும் ( தர்மப் படி சட்டப் படியல்ல..) ஆனால் ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

அதிகப் படியான கடிதங்களும், மற்ற சில சாதகமான சலுகைகளும். கூடக் கிடைக்கும். என்னை இந்தியச் சிறைகளுக்கு அனுப்ப முடியாதெனில், மற்ற கைதிகளைப்போல், என்னை விடுவித்து வெளியில் அனுப்புங்கள்: 5 வருடம் கழித்து என் குடும்பத்தாரை இங்கே வரவழைத்துக் கொள்கிறேன். நானும் டிக்கெட் லீவைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இதை ஏற்பீர்களானால், மீதி ஒரே ஒரு குறையே மிஞ்சியிருக்கும், அது வேறொன்றுமல்ல, அது மற்றவர்களுடையதில்லாமல். நான் செய்த தவறுகளுக்கு மட்டுமே நான் பொறுப்பாவேன். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு அடிப்படையான உரிமை இது; அதை நான் கெஞ்சிக் கேட்பது கேவலமாயிருக்கிறது !

ஒருபுறம் 20 அரசியல் கைதிகள்இளம் வயதினர் சுறுசுறுப்பானவர், அமைதியின்றி, மறுபுறம், இது ஒரு குற்றவாளிகளின் குடியிருப்பின் சட்ட திட்டங்களைக் கொண்டு சிந்தனைக்கும், சொல்லுக்கும் உள்ள சுதந்திரத்தை எந்த அளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்கிறார்கள்.. எனக்குப் புரிகிறது.

ஒவ்வொரு சமயத்திலும் யாராவது ஒரு கைதி ஏதாவதொரு சட்டதிட்டத்தை மீறி நடப்பதென்பது தவிர்க்க இயலாததுதான்; மீறினால் அதற்கு எல்லோரையும் பொறுப்பாக்குவது நடக்கிறது. என்னை வெளியில் விடுவதற்கான வாய்ப்பு மிக்க் குறுகுகிறது.

முடிவில், மரியாதைக்குரிய உங்களை நினைவுபடுத்த விரும்புவது, நான் 1911ல் அனுப்பிய கருணை மனு மீது உங்கள் பார்வை பட வேண்டும், அது இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப் பட அனுமதி தரவேண்டும்.

சமீபத்திய ( பிரிட்டிஷ் ) அரசின் அரசியல், மற்றும்) இசைவான) சமாதானக் கொள்கைகள் சட்ட பூர்வமன வழியை மீண்டும் ஒரு முறை திறந்து விட்டிருக்கிறதெனத் தெரிகிறது. சமாதானத்தையும், முன்னேற்றத்தையும் விட்டு எங்களை 1906 –07ல் நம்பிக்கை தர இயலாத சூழ்நிலை கொண்ட பழைய இந்தியாவில் வழிதவறவிடப்பட்டவர் போல் மீண்டும் அந்த முட்கள் நிறைந்த பாதையில் சமூக நேயத்தையும், இந்தியாவையும் இதயத்தில் கொண்டவன் செல்லமாட்டான்.

ஆகவே, பன்மடங்கு நன்மையையும், கருணையும் கொண்ட இந்த அரசு என்னை விடுதலை செய்யுமானால், முன்னேற்றத்திற்கு அடிப்படையான விசுவாசத்தை ஆங்கிலேய அரசின் சட்டபூர்வமான முன்னேற்றத்தின் மிகத் தீவிரமான ஆதரவாளனாக மாறுவேன்.

ரத்தம் நீரை விடக் கெட்டியானது. பல்லாயிரம், பல லட்சக் கணக்கான வீடுகளில் வாழும் மாட்சிமை தங்கிய மன்னரின் விசுவாச இந்தியப் பிரஜைகளுக்கு நாங்கள் சிறையிலிருக்கும் வரை உண்மையான மகிழ்சி இருக்க முடியாது.

ஆனால் நாங்கள் விடுதலை செய்யப்பட்டால், உளப் பூர்வமாகவே மக்கள் ஆன்ந்தத்தின் உச்சத்தில் ஒலி எழுப்புவார்கள். தண்டிக்கவும், பழி வாங்கவும் நினைக்காது, மன்னிக்கவும், சீர்படுத்தவும் தெரிந்த இந்த அரசுக்குத் தங்கள் மகிழ்ச்சியையும், நன்றியையும் காட்ட சந்தோஷ ஒலி எழுப்புவார்கள்.

அதுவன்றி, இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் என்னை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட, வழி தவறிப்போன அனைத்து இளைஞர்களையும், இப்போது நான் ஏற்றுக் கொண்டிருக்கும் சட்டபூர்வ வழிக்க்குக் கொண்டு வரும்.

என்னுடைய இந்த மாறுதல், மனமுவந்து ஏற்றுக் கொண்டது; அதனால், எதிர்காலத்திலும் நான் அப்ப்டியே நடப்பேன். அரசு எப்படி செயல்பட விரும்புகிறதோ, அந்த வழியில் சேவை செய்ய நான் தயார் என்னை விடுதலை செய்வதால் கிடைக்கும் நன்மையை ஒப்பிட்டுப் பார்த்தீர்களானால், என்னைச் சிறையில் வைத்திருப்பதால் எந்தப் பலனும் இல்லை என்பது புரியும்.

அந்த ''எல்லாம் வல்லவனால்'' மட்டுமே கருணை காட்ட முடியும்; ஆகவே, இந்த (THE PRODIGAL SON ) திருந்திய மகனால் இந்த அரசெனும் பெற்றோரின் கதவுகளை நோக்கியன்றி வேறெங்கு போக முடியும்?

மரியாதைக்குரிய தாங்கள் இந்தக் குறிப்புக்களைத் தங்கள் கவ்வனத்தில் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

**– வீ.டி.சவார்க்கர்**

தியாகச் செம்மல் பகத்சிங்கின் இறுதிக் கடிதம் படித்த போது, கண்கள் நெகிழ்ந்தன.

பகத்சிங் பிறந்தநாள் செப்.27, 1907

தொடர்புக்கு: 94498 26636

# தெலுங்கானா ஆ

## இந்திய தேசத்துடன் ஹை
## இணைக்கப் போ



-எஸ். சுதாகர் ரெட்டி

**1947 செப்டம்பர் 11ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உடந்தையாய் இருக்க, ஹைதராபாத் சமஸ்தானத்தை நிஜாம் சுதந்திர நாடாக அறிவித்தார். நிஜாமுக்கு எதிராக தெலுங்கானா ஆயுதப் போராட்டம் மூண்டெழுந்தது.**

ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய ஒன்றியத்துடன் இணைக்க நிஜாம் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்துமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. அப்போராட்டப் பிரகடனத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஆந்திர மகாசபா மற்றும் அனைத்து ஹைதராபாத் தொழிற்சங்கக் காங்கிரஸ் (கிபிஜிஹிசி) சார்பில் முறையே தோழர்கள் ரவி நாராயண் ரெட்டி, பத்தம் எல்லா ரெட்டி மற்றும் மக்தூம் மொஹிதீன் கையெழுத்திட்டனர். இந்தியாவின் விடுதலைப் போராட்டம் பல கருத்தோட்ட ஓடைகள் சங்கமித்தப் பேராறு. பிரிட்டிஷ் நேரடியாக ஆட்சிசெய்த பிரிட்டிஷ் இந்தியா தவிர சிறிதும் பெரிதுமான 545 சமஸ்தானங்கள், குறுநில ஆட்சிகள் பிரிட்டிஷ் குடையின் கீழ் இருந்தன. தங்கள் குறுநிலத்தில் வாழ்ந்த மக்களைச் சுரண்டவும், கொடுமைகளைச் செய்யவும் மட்டுமே அவை சுதந்திரமாக இருந்தன; ஆனால் அப்படி மேலாண்மை செய்ய அனுமதித்தற்காகப் பிரிட்டிஷ் பேரரசுக்கு அவை பெரும் தொகைகளை கப்பமாக செலுத்த வேண்டியிருந்தது.

### ஹைதராபாத் மாகாண நிலைமை

சமஸ்தானங்களில் ஹைதராபாத் மிகவும் பெரியது. அந்தச் சமஸ்தானத்தின் பாதி மாவட்டங்கள் தெலுங்கு பேசுபவை, ஐந்து மாவட்டங்களில் மராத்தி மொழியும், கனடா மொழி பேசப்பட்ட மூன்று மாவட்டங்களில் கன்னடம் இருந்தன. எனவே இப்பிரதேசத்தை மொழிகளின் முப்பட்டை கண்ணாடி எனலாம். ஆனால் அலுவல் மொழியும், பயிற்சி மொழியும் உருது மட்டுமே. இம்மண் பெரும் தேஷ்முக்குகள் மற்றும் நிலப்பிரபுகள் கைகளில் குவிந்து இருந்தது. அவர்களில் சிலரிடம் ஒரு லட்சத்திலிருந்து ஒன்னரை லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் குவிந்திருந்தது.

அங்கு “வெட்டி” என்ற சிஸ்டம் நடைமுறையில் இருந்தது, அதன்படி அனைத்து மக்களும் ஊதியமின்றி நிலப்பிரபுக்களுக்காக வேலை செய்ய வேண்டும். எந்தக் குடிமை உரிமைகளோ, மனித உரிமைகளோ இல்லாத ஏறத்தாழ பாதி அடிமை என்ற முறை இருந்தது. இதை மக்கள் வெறுத்தனர், எனினும் அவர்களால் எதுவும் செய்ய முடியாத கையறுநிலை.

### தேசியக் காங்கிரசும் பிரதேச மாகாணங்களும்

தேசியக் காங்கிரஸ் தலைமையிலான தேசிய இயக்கம் தனது போராட்டத்தைப் பிரதேச மாகாணங்களில் விரிவுபடுத்த முயற்சி செய்யவில்லை; “வெளிநாட்டுக் காலனியத்திற்கு எதிரான போராட்டம்” என்பதைக் காங்கிரஸ் இயக்கம் வெள்ளைத் தோல் உடையவர்களுக்கு எதிரான போராட்டம் என வரையறுத்து அத்துடன் நிறுத்திக் கொண்டது. உண்மையில், நம் மண்ணைச் சேர்ந்த பிரதேச மாகாணங்களின் ஆட்சியாளர்கள் தங்களின் வலிமை அனைத்தையும் திரட்டிப் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தனர். பிரிட்டிஷ் ஆதரவில் அவர்கள் பிரிட்டிஷ் வேலைக்காரர்கள் மற்றும் வீரர்களைவிடவும் கூடுதல் விஸ்வாசத்துடன் இருந்தனர்.

ஆனால் விடுதலைப் போராட்டத்தின் ஒளிக்கீற்று சமஸ்தானங்களின் இருண்ட பகுதிகளையும் சென்றடையவே செய்தது, மக்கள் மத்தியில் நம்பிக்கை எழுந்தது. திருவாங்கூர் கொச்சி, ஜம்மு காஷ்மீர், மணிப்பூர் மற்றும் பிற பகுதிகளின் ஏதேச்சிகார பிரதேச ஆட்சிகளுக்கு எதிராக வீரம் செறிந்த ஆயுதப் போராட்டங்கள் நடந்தன.

1942ன் வெள்ளையனே வெளியேறு இயக்கம், இரண்டாவது உலகப்போர் மற்றும் அதன் பின்விளைவுகள், இந்திய தேசிய இராணுவத்தின் போர், பாம்பேயில் நடைபெற்ற ராயல் இந்திய கப்பல்படை வீரர்களின் எழுச்சி புதிய நம்பிக்கைகளைக் கொண்டு வந்தன. ஆனால் இந்திய தேசியக் காங்கிரசும் மகாத்மா காந்தியும் ஒரு கட்டத்திற்கு மேல் சமஸ்தானப் பகுதிகளில் போராட்டங்களை விரிவுபடுத்த விரும்பவில்லை. ஆனாலும் நம் இந்திய தேசத்தைவிட்டு பிரிட்டிஷ் வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

### சுதந்திரப் பிரகடனம்

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் 1947 ஜூன் மாதம் இந்தியா, பாக்கிஸ்தான் மற்றும் 545 சமஸ்தானங்களுக்கும் விடுதலையைப் பிரகடனப்படுத்தி ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இந்தியத் துணைக் கண்டத்தில் குழப்பதை ஏற்படுத்தும் ஒரு கேடு கெட்ட சூழ்ச்சி அது. இப்படிச் செய்வதன் மூலம் உட்நாட்டு சச்சரவுகள், போர்கள் ஏற்படும் என எதிர்பார்த்த அவர்கள், அதன் விளைவாய் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க தங்களின் பிரிட்டிஷ் இராணுவம் நீண்ட காலத்திற்கு இங்கே இருக்கலாம் என்பதும் அவர்கள் கனவு.

ஆனால் அதற்கு மாறாக, ஜனநாயக முறைக்கு மாறவும், ஒன்றுபட்ட இந்தியாவுக்கான மக்களின் ஆழமான போராட்டங்களால் பெரும்பாலான சமஸ்தானங்கள் இந்திய ஒன்றியத்துடன் இணையச் சம்மதித்தன; எனினும், ஹைதராபாத், ஜம்மு காஷ்மீர், திரிபுரா மற்றும் ஜூனகத் சமஸ்தானங்கள் மட்டும் தனித்து விடுதலையை அறிவித்தன.

### ஹைதராபாத்தில் சமூகங்களின் போக்கு

ஹைதராபாத் நிஜாம் பிரிட்டனிலிருந்து ஆயுதங்கள் வாங்க உத்தரவிட்டு, பெரும் தொகையை வெஸ்ட்மினிஸ்டர் வங்கிக்கு மாற்றினார். அந்தப் பணம் இன்னும் பிரிட்டிஷ் வசமே உள்ளது, இந்தியா–பாகிஸ்தான் தகராறு இன்னும் தீர்க்கப்படவில்லை. ஆந்திர மகாசபா தெலுங்கு பேசும் மக்களின் சமூகப் பண்பாட்டு இயக்கமாகும், பின்வந்த ஆண்டுகளில் அந்த அமைப்பில் இடதுசாரிகள் ஆதிக்கம் செலுத்தினர். முக்கியமான 1947 காலகட்டத்தில் ரவி நாராயண் அதன் தலைவராக இருந்தார். முஸ்லீம் அரசைப் பாதுகாக்க, நிஜாமின் தனி இராணுவமான, ராஜ்கர்கள் மக்கள் மீது அடக்குமுறை அச்சுறுத்தல்களைக் கட்டவிழ்த்து விட்டது.

உண்மை யாதெனில், பெரும் எண்ணிக்கையிலான முஸ்லீம்கள் கடும் ஏழ்மையில் வாழ்ந்தனர். நிஜாமை ஆதரித்த நிலப்பிரபுகளில் கூடுதலான எண்ணிக்கையினர் இந்துகளே. துரதிருஷ்டவசமாக முஸ்லீம் ஜனத் தொகையில் ஒரு பிரிவினர் “அனல் மாலிக்” என்ற முழக்கத்தைப் பெரிதும் நம்பினர், நிஜாமை ஆதரித்தனர். ஆனால் நாட்டுப் பற்று, ஜனநாயக மற்றும் முற்போக்குச் சிந்தனை கொண்ட முஸ்லீம்கள் நிஜாமுக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு நல்கினர். உதாரணத்திற்கு, தனது நிலத்திற்காகப் போராடிய பண்டகி என்ற முஸ்லீம் விவசாயி இந்து நிலப்பிரபுக்களால் கொல்லப்பட்டார். நிஜாமை எதிர்த்த ‘அம்ரோஸ்’ இதழின் துணிச்சல் மிக்க ஆசிரியர், ஷோய்லபுல்லா கான் ராஜ்கர்களால் கொலையானார்.

### தெலுங்கானா போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி

தெலுங்கானா பகுதி போராட்டத்தைக் கம்யூனிஸ்ட்கள் தலைமையேற்று நடத்தியதால் அதற்கு ஒருபோதும் வகுப்புச் சாயம் பூசப்படவில்லை. அந்தப் போராட்டம் வழக்கொழிந்த, வாழ்ந்து முடிந்த நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரானது. நிலைமை நன்கு கனிந்து இருந்த, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான தெளிவான அழைப்புக்குச் செவிசாய்த்த லட்சக் கணக்கான மக்கள் அதில் பங்கேற்றனர். உண்மையைச் சொன்னால், தெலுங்கானா பகுதியில் கட்சியின் அமைப்பு நிலைக் கட்டமைப்பு பலவீனமாகவே இருந்தது; ஆனால் கட்சித் தலைமையின் செல்வாக்குப் புகழ், சரியான திட்டங்கள், உத்திகள் கட்சிக்குப் பெரிதும் உதவின.

ஒருங்கிணைந்த மெட்ராஸ் மாகாணத்தின் பகுதியாக இருந்த ஆந்திரா கட்சி அமைப்பு நிலைக் கட்டமைப்பு ரீதியில் சிறப்பான தயார்நிலையில் இருந்தது. கட்சித் தலைமை தத்துவார்த்த மற்றும் அரசியல் முதிர்ச்சியைப் பெற்றிருந்தது. ஆந்திரா கட்சி அனைத்து உதவிகளையும் தெலுங்கானா போராட்டத்திற்கு அளித்தது. ஆயுதப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன, நிதி மற்றும் ஆயுதம் திரட்டப்பட்டது, தன்னார்வத் தொண்டர்கள் தெலுங்கானா போராட்டத்தில் இணைந்தனர்,





பல ஆந்திரத் தோழர்கள் தெலுங்கானாவில் கொல்லப்பட்டு பலியாயினர். 1946லிருந்து ஹைதராபாத்தில் தங்கி இருந்த தோழர் சி இராஜேஸ்வர ராவ் மற்றும் தோழர்கள் பி சுந்தரையா, தம்மா ரெட்டி சத்யநாராயணா, எஸ்.வி.கே.பிரஸாத் போன்ற பிற புகழ்பெற்ற தலைவர்களும் மற்றும் பலரும் நேரடியாக இணைந்து போராட்டத்தில் பங்கேற்று வழிகாட்டினர்.

ஹைதராபாத்தில் தோழர் சி.ஆர்.கட்சியின் முதல் மையத்தை ஏற்படுத்தினார். மூவாயிரம் கிராமங்கள் கட்சிச் செல்வாக்கின் கீழ் வந்தன. நிலமற்றவர்களுக்குச் சுமார் பத்து லட்சம் ஏக்கர் நிலம் பிரித்தளிக்கப்பட்டது. நிலவுடைமை ஜமீன்தார்கள் கிராமங்களிலிருந்து தப்பியோடி மறைந்தனர்.

### போராட்டத்தில் இரண்டு கட்டங்கள்

முதல் கட்டம், ஆயுதப் போராட்டம் தொடங்கிய 1947 செப்டம்பர் 11ம் நாளிலிருந்து, ஹைதராபாத்துக்குள் இந்திய இராணுவம் நுழைந்த 1948 செப்டம்பர் 17ம் நாள் வரையானது. போராட்டத்தின் இரண்டாம் கட்டம், அந்த நாளிலிருந்து ஆயுதப் போராட்டம் திரும்பப் பெற்ற 1951 வரையானது.


முதல் கட்டத்தில் மக்கள் பேராதரவையும் பரிவையும் வாரி வழங்கினர். நிலப்பிரபுகள் ஓடி ஒளிந்தனர். ராஜ்கர்கள் மற்றும் நிஜாமின் போலீஸ்படைகள் தங்கும் இடமாகவும் மையமாகவும் இருந்த ஜமீன்தார்களின் தேவிடீஸ் என்று அறியப்படும் மாபெரும் பங்களாக்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. லட்சக் கணக்கான மக்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். சர்தார் பட்டேலின் நம்பிக்கைகுரியவரான கே.எம்.முன்ஷி ஹைதராபாத் மாகாணத்தில் இந்திய அரசின் ஏஜெண்ட் ஜெனரலாக இருந்தார். மோதல் நிறுத்த ஒப்பந்தம் நிஜாமுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் ஏற்பட்டது.

### இந்திய அரசின் அணுகுமுறை

நிஜாம் இந்திய ஒன்றியத்துடன் இணைய வேண்டும் என அரசு விரும்பினாலும், படைகளின் பலப் பிரயோகத்தைப் பயன்படுத்த விரும்பவில்லை. ஆனால் கம்யூனிஸ்ட்கள்

# நரிக்குறவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்திடும் அறிவிப்பை சட்ட வடிவமாக்குக!

## பழங்குடி மக்கள் சங்கம் கோரிக்கை



தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநில கவுரவ தலைவர் ந.நஞ்சப்பன் எக்ஸ்.எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தின் நரிக்குறவர் மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதில் ஒன்றிய அரசு தேவையில்லாமல் கால தாமதத்தையும், இழுத்தடிப்பும் செய்வதை தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் கண்டனத்தை தெரிவித்து கொள்கிறது. பல ஆண்டுகளாக தேக்கி, முடக்கி வைப்பது வேதனையான அவல நிலை ஆகும். இதனால் இச்சமூக மக்கள்பெரும் தவிப்பும், ஏமாற்றத்தையும் சந்திக்கின்றனர்.

நீண்ட காலமாக இச்சமூக மக்களும், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கமும் சட்ட வடிவமாக்க வலியுறுத்திய கோரிக்கை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. தமிழகத்தில் நரிக்குறவர், குருவிக்காரர் என அழைக்கப்படும் இச்சமூக மக்கள் ஒரே பெயரை கொண்டவர்கள். கேரளாவில் குருவிக்காரர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். நரிக்குறவர்கள் என்று தமிழக மக்களால் அடையாளப்படுத்தி அழைக்கப்படும் பெயரே குருவிக்காரர்கள் ஆகும். இவர்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் வாகிரி,சிக்காரி என அழைக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பழங்குடி மக்களாக உள்ளனர். வாகிரி, சிக்காரி, நரிக்குறவர், குருவிக்காரர் என்று அழைக்கப்படும் மக்கள் அனைவரும் ஒரே சமூக மக்கள் ஆவர். தமிழகத்தில் நரிக்குறவர் என்றும்,குருவிக்காரர் என்றும் தனித்தனியாக அடையாளப்படுத்தப்பட்டால் அதை பயன்படுத்தி தவறான வழியில் போலிச் சான்றுகள் பெறுவதற்கே வழிவகுக்கும்.10 ஆண்டுகளுக்கு முன்பே காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நரிக்குறவர் மக்களை பழங்குடியின பட்டியலில் சேர்க்க அமைச்சரவையில் முடிவு எடுத்து அறிவித்தது.பிறகு பாரதிய ஜனதா ஆட்சி அமைச்சவையிலும் இத்தகைய முடிவை அறிவித்தது. தற்போது மீண்டும் பாரதிய ஜனதா ஆட்சி அமைச்சரவை அதே முடிவு எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதை நாடாளுமன்றத்தில் சட்டமாக்காமல் தேர்தல் நெருங்கும் நேரத்தில் எல்லாம் அறிவிப்பதும்,கிடப்பில் போடுவதையும் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் வன்மையான கண்டனத்தை தெரிவித்து கொள்கிறது.இதை சட்ட வடிவமாக்க உரிய நடவடிக்கைககளை மேற்கொள்ளுமாறு நடுவண் அரசை வலியுறுத்துகிறது என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஆயுதப் போராட்டம்

## தராபாத் சமஸ்தானத்தை
## ராடியது, சிபிஜ

வலிமை பெற்று வந்ததால், எங்கே கம்யூனிஸ்ட்கள் ஹைதராபாத்தைக் கைப்பற்றி விடுவார்களோ என்ற அச்ச உணர்வு இருந்தது. எனவே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் காங்கிரஸ் தலைவர்கள் ஒன்றியத்தின் தலைமைக்கு அழுத்தம் தந்தனர். இந்திய இராணுவம் நான்கு புறங்களிலிருந்தும் ஹைதராபாத் மாகாணத்திற்குள் 1948 செப்டம்பர் 13 நாள் அணிவகுத்து நுழைந்தனர், செப்டம்பர் 17 அன்று நிஜாம் சரணடைந்தார்.

நிஜாமின் படையால் வலிமையான இராணுவத்தை எதிர்த்து நிற்க முடியவில்லை. எனவே எதிர்ப்பு பெயரளவில் மட்டுமே இருந்தது. நிஜாம் சரணடைவதாகப் பிரகடனம் செய்தார், இந்தியாவுடன் ஹைதராபாத் மாகாணத்தின் இணைப்பு அறிவிக்கப்பட்டது.

இந்த இணைப்புக்காக முக்கிய போரை நடத்தி எண்ணற்ற தனது தோழர்களின் இன்னுயிர்களைத் தியாகம் செய்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒன்றிய அரசு கலந்தாலோசிக்கவில்லை. இது மிகப் பெரிய துரோகம். கட்சியுடன் விவாதங்கள் நடத்தப்படவில்லை. தூக்கி எறியப்பட வேண்டிய நிஜாமுக்கு ராஜ மரியாதை அளிக்கப்பட்டது, பின் அவரை 'ராஜ் பிரமுக்'காக, வருடத்திற்கு ரூபாய் 2 கோடி நிவாரண மானியத் தொகையுடன், அறிவித்தனர்.

### சிபிஜ மீது இராணுவத்தின் அட்டூழியம்

கிராமங்களுக்குள் அணிவகுத்து நுழைந்த இந்திய இராணுவம் கம்யூனிஸ்ட்களைத் தேடி வேட்டையாடியது. மக்கள் மீது பெரும் கொடூர அட்டூழியங்களைப் புரிந்த ராஜ் கர்களின் தலைவனான காசிம் ரஸ்வி சிறு தண்டனைக்குப் பிறகு பாக்கிஸ்தான் செல்ல அனுமதிக்கப் பட்டான். இந்திய இராணுவம் ராஜ்கர்களை விடுதலை செய்தது; ஆனால் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கம்யூனிஸ்ட்களைக் கொன்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டத்தைத் தொடர்வது என முடிவு செய்தது.

### போராட்டத்தைத் தொடர்ந்தது ஏன்?

நிலப்பிரபுக்கள் கிராமங்களுக்குத் திரும்ப வந்தனர், பிரித்தளிக்கப்பட்ட நிலங்களை மீண்டும் கைப்பற்ற முனைந்தனர். ஜெனரல் சௌத்திரி கம்யூனிஸ்ட்களை 2 வாரங்களில் அழித்தொழிப்பதாக ஜம்பமடித்தார். குழப்பம் ஏற்பட்டது. நடுத்தர வர்க்கம், வணிகம் செய்யும் மக்கள், கற்றறிவாளர்கள் நிஜாமின் ஆட்சி முடிவுக்கு வந்ததாக மகிழ்ச்சி அடைந்தனர். இந்திய ஒன்றியத்துடன் இணைப்பு சாதிக்கப்பட்டது. அவர்கள் ஆயுதப் போராட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும் என விரும்பினர். ஏழை மக்கள் குழம்பினர். கட்டாயமாக ஆயுதப் போராட்டத்தைத் தொடர கட்சி நிர்பந்தப்படுத்தப்பட்டது.

### புதிய முடிவு

நிஜாம் மற்றும் நிலப்பிரபுக்களுடன் சமரசம் செய்து கொண்டதன் மூலம் காங்கிரஸ் மற்றும் ஒன்றிய அரசு துரோகம் இழைத்தன என்பது உண்மையே! ஆயினும் ஒருக்கால், மாறிய சூழ்நிலைக்குப் பொருத்தமான வித்தியாசமான உத்தி தேவைப்பட்டிருக்கலாம். சிலர் நடுநிலை வகித்தனர். காங்கிரஸ் ஆதரவாளர்கள் வெளிப்படையாகத் தீவிர பகை உணர்வு கொண்டனர். தங்கள் அடியாள் படைகளுடன் திரும்ப வந்த நிலவுடைமையாளர்கள் அத்தகைய எல்லா பிரிவுகளையும் ஒன்று திரட்டினர்.

ஆயுதப் போராட்டத்தைத் திரும்பப் பெறுதல், திரும்பப் பெறும் நேரம் காலம் மற்றும் பின்பற்ற வேண்டிய உத்திகள் கட்சிக்குள் சூடான விவாதப் பொருள்களாயின. கட்சி மதிப்புமிக்க பல தோழர்களின் உயிர்களைப் பலி கொடுத்து இழந்தது. இறுதியாக கட்சி ஆயுதப் போராட்டத்தை விலக்கிக் கொள்வதாகவும் பொதுத் தேர்தல்களில் பங்கேற்கவும் முடிவெடுத்தது.

கட்சி மீது தடை விதிக்கப்பட்டிருந்ததால் கம்யூனிஸ்ட்கள் 'மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற பெயரில் வரையறுக்கப்பட்ட இடங்களுக்குப் போட்டியிட்டனர், மாபெரும் பெருமபான்மையுடன் வெற்றிவாகை சூடினர்.

### முடிவின் மீது மாறுபட்ட பார்வைகள்

இன்றும்கூட தெலுங்கானா ஆயுதப் போராட்டம் மற்றும் அதன் பாடங்கள் மிகவும் பொருத்தமானவை. ஆயுதப் போராட்டம் திரும்பப் பெற்றது இன்னும் விவாதத்திற்குரிய பொருளாக உள்ளது. திரும்பப் பெற்றது தவறான முடிவு என்று நக்ஸைலைட்கள் மற்றும் மாவோயிஸ்ட்களின் சில பிரிவுகள் கூறுகின்றன.

அவர்களின் தற்போதைய ஆயுதம் தாங்கிய போராட்டம் தெலுங்கானாவின் தொடர்ச்சி என்கின்றன. சில தோழர்கள் திரும்பப் பெற்ற முடிவு தாமதமாக எடுக்கப்பட்டது, இன்னும் முன்னதாகவே திரும்பப் பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இந்தப் பொருள் மீது ஆழமான நேர்மையான விவாதங்கள் நடத்தப்படுவதன் மூலம் இந்தியப் புரட்சிக்கான முறையான பாடங்களைப் பெறலாம்.

### வரலாற்றைத் திரித்தல்

தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தின்போது, பாஜக மற்றும் அதன் முன்னோடியான ஜன சங்கம் பிறக்கவில்லை ஆயினும், ஆர்எஸ்எஸ் அமைப்பு அப்போது இருக்கவே செய்தது. ஒருமுறை ஆர்.எஸ்.எஸ். தலைவர் சர்சங்சாலக் ஹைதராபாத்தை விட்டு வெளியேறக் கூறியபோது அவரும் அதற்குக் கீழ்ப்படிந்ததாகக் கூறப்படுகிறது. இஸ்லாமுக்கு மதம் மாறுவதற்கு எதிராக ஆர்ய சமாஜ் எதிர்ப் போராட்டம் நடத்தி இந்துயிசத்திற்கு மீண்டும் மாறும் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. அத்தருணத்தில் குழம்பினாலும் பின்னர் அவர்களில் பலரும் தங்கள் தவறை உணர்ந்தனர். அத்தகைய ஆர்ய சமாஜிகள் பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர்.

ஆயுதப் போராட்டத்தின் 74 ஆண்டுகளுக்குப் பிறகு, பாஜக மற்றும் சங் பரிவார் அமைப்புகள் தற்போது திடீர் பாசம் வந்தவர்களாக விடுதலை தினத்தை அனுசரிக்கின்றனர்; தெலுங்கானாவை விடுதலைப் பெறச் செய்ததில் சர்தார் பட்டேல் தீர்மானகரமான பங்கினை ஆற்றியதாக உரிமை கோருகின்றனர். சுதந்திர இந்தியாவுக்கு எதிராகக் கம்யூனிஸ்ட்கள் போர் தொடுத்ததாக மேலும் குற்றம் சாட்டுகின்றனர்.

பொய் புனைந்துரைத்தலில் எந்த அளவுக்குக் கீழிறங்க முடியுமோ அப்படி அவர்கள் மோசமாகக் கம்யூனிஸ்ட்களைக் களங்கப்படுத்துகிறார்கள். 'கம்யூனிஸ்ட்கள் ராஜ் கர்களுடன் கை கோர்த்தனர்' என அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தவும் துணிகின்றனர். அவர்களது இந்த முழுமையான நோக்கம், தெலுங்கானா ஆயுதப் புரட்சியை முஸ்லீம் அடக்குமுறைக்கு எதிரான இந்துகளின் விடுதலைப் போராட்டம் என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கே ஆகும். இம்முயற்சி கேடுகெட்ட கட்டுக்கதை என்பதைத் தவிர வேறில்லை. இது அப்பட்டமாக வரலாற்றைச் சிதைத்துத் திரிப்பது.

### ஆயுதப் போராட்டத்தின் உண்மை

உண்மை யாதெனில், நிஜாம் தலைமை தாங்கியதும், இந்து நில உடைமையாளர்கள் மற்றும் சில முஸ்லீம் ஜாகிர்தார்கள் ஆதரித்ததுமான நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான வீரம் செறிந்த போராட்டமே வரலாற்றுப் புகழ் பெற்ற தெலுங்கானா போராட்டம்!

நிஜாம் மதசார்பற்றவர் அல்ல என்பது உண்மைதான், ஆனால் தனது சொந்த காரணங்களுக்காக அவர் எப்போதும் வகுப்புவாத நிகழ்ச்சிநிரலைப் பின்பற்றவில்லை. அவர் இந்து ஜாகிர்தார்கள் மற்றும் தேஷ்முக்களைப் புரவலராக ஆதரித்தார். அவரிடம் சில இந்து அதிகாரிகளும் இருந்தனர்; சமஸ்தானத்தின் பெரும்பான்மை இந்து குடிமக்களுடன் தொடர்பு கொள்ள நிஜாமிற்கு அவர்கள் தேவைப்பட்டனர். ஆனால் பாரபட்சம், குறைந்தபட்சம் மொழி மற்றும் சமயம் தொடர்பான பாரபட்சம், நிச்சயமாக அங்கே இருந்தது.

ஆனால் ஆயுதம் எடுத்துப் போராடியவர்கள், ஒடுக்குமுறை நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்துத்தான் தாங்கள் போராடுகிறோமே தவிர ஒரு மதத்தை எதிர்த்து அல்ல என்பதில் தெளிவாக இருந்தார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணி(என்டிஏ) ஆட்சியில் இருந்தபோது பாஜக அந்த அருவருப்பான பிரச்சாரத்தைத் தொடங்கியது. அப்போது ஹைதராபாத் மாநில சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பரிசீலனைக் குழு வி.பி.சிங் ஆட்சியின்போது நியமிக்கப்பட்ட அதிகாரபூர்வ குழு, பின்னர் ஐக்கிய முன்னணி ஆட்சியில் உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா நியமித்த குழு) ஆயிரக் கணக்கான தெலுங்கான விடுதலைப் போராட்ட வீரர்கள் பெயர் பட்டியலை ஒய்வூதியம் வழங்கக் கோரி சிபார்சு செய்தது.

ஆனால் அப்போது 1998 முதல் 2004 வரை உள்துறை அமைச்சராக இருந்த எல்.கே.அத்வானி சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான அந்த ஒய்வூதியத்திற்கு அனுமதி வழங்க மறுத்து ஸ்கிரீனிங் கமிட்டி சிபார்சை நிராகரித்தார்.

நிஜாமிற்கு எதிரான மக்கள் போராட்டத்தில் எந்தப் பங்கும் வகிக்காத சங் பரிவார் கும்பல், வெட்கமற்று இப்போது வரலாற்றைத் திரிக்கத் தனது அருவருப்பான தந்திரங்களைச் செயல்படுத்த முயற்சிக்கிறது. பொய்களில் பிறந்த பாஜக, பொய்களிலேயே வளர்ந்தது. அன்னிய ஆட்சியிலிருந்து ஒரு நாடு சுதந்திரம் அடைந்தால் அதனை விடுதலை என்று அழைப்பார்கள். விடுதலை என்பது, அன்னிய ஆட்சியிலிருந்தும், ஒடுக்குமுறையாளர்களின் சுரண்டலிருந்தும் மக்களை விடுவிப்பது என்றும் சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் உண்மையான ஜனநாயகத்தைச் சாதிப்பது என்றும் விரிவான பொருள் உடையது.

### புதிய ஆய்வு தேவை

தெலுங்கானா ஆயுதப் போராட்டம் பல்வேறு கோணங்களிலிருந்து பரிசீலனை செய்யப்பட வேண்டும். கட்சியால் தலைமை தாங்கப்பட்ட ஏழைகள், விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் தவிர, நடுத்தர வர்க்க வேளாண் குடியினர், சிறு, குறு வணிகர்கள், அறிவுச் சமூகம் என்ற பிரிவுகளிலிருந்தும் பரந்த அளவிலான மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தனர்.

மிக மிக சிரமமான காலங்களில் நமது தலைமறைவு வாழ்வு தலைவர்களைக் காப்பாற்றியுள்ளனர். கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள், அரசு ஊழியர்கள், இந்துகள், முஸ்லீம்கள் எனப் பலதரப்பினர் ஆயுதப் போராட்டத்துடன் உறுதியாக நின்றனர்.

### பெண்கள் முக்கிய பங்கு வகித்தனர்

சமூகத்தின் பல்வேறு பிரிவுகள் தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தை ஆதரித்ததற்கான காரணங்கள் யாவை என்பது குறித்து ஆழமான ஆய்வு நடத்த வேண்டிய தேவை உள்ளது. அத்தகைய ஆய்வு மட்டுமே தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தை ஒருங்கிணைந்த முறையில் புரிந்து கொள்ளவதற்கு ஒருவருக்கு உதவிடும்.

தெலுங்கானா குறித்த இதுவரையான பெரும்பாலான நூல்களும் எழுத்துகளும் போராட்டத்தின் வரையறுக்கப்பட்ட கோணத்தில் இருந்து மட்டுமே செய்யப்பட்டுள்ளது. சிலர் இந்த வீரம் செறிந்த போரின் பகுதி விவரிப்புகளை மட்டுமே தந்துள்ளனர். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பிளவு ஏற்படுத்திய சூழல், சில முக்கியமான தலைவர்களின் பங்களிப்புகளைக் குறைவுபடுத்தவும் மற்றும் அவர்களையே புறக்கணிக்கும் அளவும் சில எழுத்தாளர்களை முயற்சிக்கச் செய்துவிட்டது.

அதற்கு மாறாக, பாரபட்சம் அற்ற, விருப்பு வெறுப்பற்ற முறையில், தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த விரிவான பதிவுகளும், ஆய்வு எழுத்தாக்கங்களும் இனி எதிர்கால வரலாற்றாளர்களால் திரிபின்றி எழுதப்படும் என நான் நம்புகிறேன்.

1948 செப்டம்பர் 17ம் நாள் இந்திய இராணுவம் ஹைதராபாத் மாகாணத்திற்குள் நுழைந்து, அதனை நிஜாமிடமிருந்து மீட்டு இறுதியில் ஹைதராபாத் மாகாணத்தை இந்தியத் துணைக்கண்டத்தின் ஒன்றியத்துடன் ஒன்றிணைத்த நாள்!

தெலுங்கானா ஆயுதப் போராட்டத் தியாகிகளுக்குச் செவ்வணக்கம்!

நன்றி : நியூஏஜ், தமிழில் : **நீலகண்டன்**

---

## மதகுகளை சீரமைக்க கோரி
# விவசாயிகள் ஆர்ப்பாட்டம்...

கும்பகோணம் வட்டம், அகராத்துடி பஞ்சாயத்து, சாத்தங்குடி கிராமத்தில் உள்ள தவணை வாய்க்கால் மதகுகள் பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் உள்ளது. இதனால் சுற்றுவட்டார கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பாசன வசதி இல்லாமல் உள்ளன.

தவணை வாய்க்கால் மதகுகளை சீரமைத்து பாசன நீரை வீணாக்காமல் விவசாயத்திற்கு பயன்படுத்த செய்ய வேண்டும் எனக் கோரி கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மதகுகளை சீரமைக்க கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் ஏ.ராஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கிளை நிர்வாகிகள் ஏ.சகாதேவன், எம்.கலியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வடக்கு மாவட்ட செயலாளர் சாமு தர்மராஜன், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர.எஸ்.பாலு, நிர்வாகிகள், ஏ.ஜி.பாலன், ஆர்.செந்தில்குமார், க.சுந்தர்ராஜன், ப.சரவணகுமார், எம்.வெட்கடேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

---

## தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில மாநாட்டில்
# பி.எஸ்.மாசிலாமணி வாழ்த்துரை



தமிழ்நாடு விவசாயின் சங்கத்தின் (சி.பி.ஐ.எம்) மாநில 30–வது மாநாடு நாகப்பட்டினத்தில் செப்டம்பர்17 முதல் 19 வரை நடைபெற்றது. முதல் நாள் நடைபெற்ற விவசாயிகள் பேரணியின் போது தமிழ்நாடு விவசாய சங்க நாகப்பட்டினம் மாவட்ட தோழர்கள் கலந்து கொண்டு பேரணியை வாழ்த்தி வரவேற்று முழக்கமிட்டனர்.

மறுநாள் மாநாடு தொடங்கிய போது, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி பங்கெடுத்து மாநாட்டை வாழ்த்திப் பேசினார். இதில் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் அசோக் தாவ்லே, பொதுச் செயலாளர் ஹன்னன் முல்லா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தந்தை பெரியாரின் 144வது பிறந்தநாள் விழா:

## உறுதிமொழி ஏற்பு

தமிழ்நாட்டில் நிலவிவந்த மூடநம்பிக்கை, அறியாமை, கல்லாமை, மனுதர்ம சாஸ்திரப்படி பெண்களை அடிமையாக வைத்திருத்தல், கொடூரமான சாதிய கட்டுமானங்களுக்கு எதிராக, சமூக சமத்துவத்திற்காக நீண்ட நெடிய போராட் டங்களை நடத்தியவர் தந்தை பெரியார். அவரது பிறந்தநாள் தமிழகம் முழுவதும் செப்.17 அன்று கொண்டாடப்பட்டது.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூரில் இடதுசாரிகள் பொதுமேடை சார்பில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்தில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம் தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் வெ. சேவையா, மக்கள் அதிகாரம் ராஜேந்திரன், ஏஐடியூசி மாவட்ட துணைத்தலைவர் ஆர்.பி.முத்துக்குமரன், வி.சி.க. நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் கிள்ளிவளவன், எழுத்தாளர் சாம்பான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



**கோவை: கருஞ்சட்டை பேரணி:** தந்தை பெரியார் திராவிட கழகத்தின் முன்னெடுப்பில் கோவை சிவானந்த காலனியில் இருந்து காந்திபுரம் வரை சமூக நீதி நாள் கருஞ்சட்டை பேரணி நடத்தப்பட்டது. பேரணியை கோவை மக்களவை உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் துவக்கி வைத்தார். பேரணிக்கு பெரியார் திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் வழக்கறிஞர் கே.சுப்பிரமணியம், தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்ட செயலாளர் யு.கே. சிவஞானம், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுசி கலையரசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சி.தங்கவேல், மு.வ. கல்யாணசுந்தரம், மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், பிரபா ரவீந்திரன், மத்திய மண்டல செயலாளர் கே. ரவீந்திரன், துணைச்செயலாளர் ஏ.பி. மணிபாரதி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட தலைவர் பி.முருகன், மாவட்ட செயலாளர் ஏ.அசரப்அலி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆர். சந்திரசேகர், எம்.குணசேகர், கலைஅஸ்வினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



**திருச்சி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட செயலாளர் க.சுரேஷ் தலைமையில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் செல்வகுமார், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட தலைவர் நடராஜன், மணிகண்டம், ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன், கிழக்கு பகுதி செயலாளர் சையது அபுதாஹிர், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராஹிம், ஒடுக்கப்பட்டார் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் சூர்யா, பொன்மலை பகுதி துணைச் செயலாளர் ராஜா, ஸ்ரீரங்கம் பகுதி துணைச் செயலாளர் சந்தோஷ், மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் பாட்ஷா, இளைஞர் பெருமன்ற மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் விஸ்வா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




**கள்ளக்குறிச்சி :** கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டையில், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத் தின் மாநில செயலாளர் வழக்கறிஞர் கீ.சு.குமார் சிறப்புரை யாற்றினார். முன்னதாக பேருந்து நிலையத்தில் வைக்கப்பட் டிருந்த பெரியார் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாவட்ட செயலாளர் வெங்க டேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இளை ஞர்கள் மாணவர்கள் மற்றும் திரளான தோழர்கள் பங்கேற்றனர்.

**திருப்போரூர்:** செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள பெரியார் சிலைக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்போரூர் சட்ட மன்ற தொகுதிக்குழு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது இதில் இளைஞர் பெருமன்ற முன்னாள் தேசிய குழு உறுப்பினர் க.ஜெகதீசன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எம்.பார்த்திபன், சிபிஐ தொகுதி துணை செயலாளர்கள் எஸ்.கே. பிரபு, மோ.வெங்கடேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொாண்டனர்.

**வடசென்னை:** சென்னையில் உள்ள பெரியார் நினைவிடத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.மாதவன், வடசென்னை மாவட்ட செயலாளர் க.சுப்ரமணி, இ.அருண், ஜி.தர்மா, நாகலிங்கம், இ.முத்து, ஏ.தர்ஷன், ஏ.சுதர்சன், குமரேசன், அருண் குமார், பி.பாபுராவ், எம்.ஜெகதீஷ், ஜி.வெங்கடேசன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மதுராந்தகம்: மதுராந்தகம் ஒன்றியம், புக்கத்துறை சமத்துவபுரத்தில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் கே.வி.சேகுவாராதாஸ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் கிளை செயலாளர் செ.இன்பராஜ், கி.கதீர்வேல், கே.அய்யனார் பங்கேற்றனர்.

**மணப்பாறை :** திருச்சி புறநகர் மாவட்டம், மணப்பாறை பேருந்துநிலையம் அருகில் உள்ள பெரியாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமூகநீதி பாதுகப்பு முழக்கமிடப்பட்டது.

நிகழ்வில் நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்ட குழு உறுப்பினர்கள் பழனிச்சாமி, சௌக்கத்அலி, ராஜேந்திரன், பெருமாள், நல்லுச்சாமி, ஆரிப், மரியராஜ், சின்னகண்ணு உட்பட நிர்வாகள் கலந்துகொண்டனர்.

செங்கம்: செங்கத்தில் சிபிஐ சார்பில் மாதேஸ்வரன், சர்தார், முருகன், ராஜா, ஜக்கரியா, தங்கமணி மற்றும் சிபிஎம், விசிக தோழர்களும் ஊர்வலமாக வந்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# தெரு வியாபாரிகளுக்கு ஆண்டு வியாபார கட்டணம் நிர்ணயித்து வசூல் செய்திடுக

## ஏஐடியூசி ஆர்பாட்டம்

தெரு வியாபாரிகள் அனைவரையும் கணக்கெடுத்து விடுபடாமல் ஸ்மார்ட் கார்டு வழங்க வேண்டும், வியாபார சான்று வழங்க வேண்டும், வணிக குழு தேர்தலை முறையாக நடத்த வேண்டும், வணிக குழு அலுவலகம் பணியாளர் வசதிகளை ஏற்படுத்த வேண்டும், சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆண்டு வியாபார கட்டணம் நிர்ணயித்து வசூல் செய்ய வேண்டும், டெண்டர் முறையை கைவிட வேண்டும், காவல்துறை உள்ளாட்சித் துறை, நெடுஞ்சாலைத்துறை, வனத்துறை உள்ளிட்ட அதிகாரிகள் தெரு வியாபாரிகளை சட்டவிரோதமாக அச்சுறுத்துவது மற்றும் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தெரு வியாபார தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் செப்.20 அன்று ஆர்ப்பாபட்டம் நடைபெற்றது.

**ஓசூர் :** கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி தெருவோர வியாபாரிகளின் மாவட்டச் செயலாளர் யூ.சின்னசாமி தலைமை தாங்கினார். மாவட்டத் துணை தலைவர் ஏ.முபாரக் முன்னிலை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லகுமைய்யா, ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.கே.மாதையன் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்ட ஏஐடியூசி தெருவோர வியாபாரிகள் கலந்து கொண்டனர்.




**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் ரெயிலடி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட் டத்திற்கு தெருவியாபார தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர். பி.முத்துக்குமரன் தலைமை வகித்தார். சங்க மாநில தலைவர் சி.சந்திரகுமார் ஆர்ப்பாட்டத்தினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் வங்கி ஊழியர் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் க.அன்பழகன், நுகர்



பொருள் வாணிபக் கழக சங்க மாநில பொருளாளர் தி.கோவிந் தராஜன், அரசு போக்குவரத்து சம்மேளனத்தின் மாநில துணைத் தலைவர் துரை.மதிவாணன், பி.அப்பாதுரை, பொன்.தங்கவேல், தி.திருநாவுக்கரசு, அ.சாமிக்கண்ணு, பி. செல்வம், கே.கல் யாணி, திலகர் திடல் மார்க்கெட் சங்க செயலாளர் கே.மணி கண்டன் மற்றும் வியாபார சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றினர். முடிவில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா ஆர்ப்பாட்டத்தினை நிறைவு செய்து பேசினார்.

**கும்பகோணம்:** கும்பகோணம் தலைமை தபால் நிலையம் முன்பு மாவட்ட தலைவர் பி.சிவக்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தொழிற்சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் ஆர்ப்பாட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றினார். சங்கத்தின் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் மு.அ.பாரதி நிறைவுறையாற்றினார். சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் ஐ.ஜார்ஜ், மாவட்ட துணை செயலாளர் கோ.மணிமூர்த்தி, சி.தண்டாயுதபாணி, ஜி.கார்த்தி, கே.பாலகிருஷ்ணன், கே.சரவணன், கே.நாராயணன், எஸ்.முருகவேல், வி.காமராஜ்,



பி.சாமிநாதன், மார்க்கெட் எஸ்.ரவி உள்ளிட்ட திரளான நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.




**மதுரை புறநகர் :** மதுரை ஏ.ஐ.டி.யூ.சி புறநகர் மாவட்டம் சார்பில், திருப்பரங்குன்றம் 16 கால் மண்டபத்தில் தெரு வியாபாரிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி, மாவட்ட துணை தலைவர் டி.மாரி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பொருளாளர் முத்துப்பாண்டி முன்னிலை வகித்தார், பொதுச் செயலாளர் தினகர மோகன் துவக்கி வைத்தார். துணை பொறுப்புச் செயலாளர் பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். சி.பி.ஐ புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல் நிறைவுரை ஆற்றினார்.

**திருச்சி:** திருச்சி சிந்தாமணி அண்ணாசிலையில் மாவட்ட தலைவர் எஸ்.சிவா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை விளக்கி ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட தலைவர் வே.நடராஜா, தரைக்கடை சங்க மாவட்ட செயலாளர் அன்சர்தீன், மாணவர் பெருமன்ற செயலாளர் க. இப்ராஹீம், ஒடுக்கபட்டோர் வாழ்வுரிமை இயக்க செயலாளர் சூர்யா, தோல் பதனிடும் சங்க பொறுப்பாளர் ராஜா, கிழக்கு பகுதி செயலாளர் அபுதாகீர் உள்ளிட் டோர் உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தரைக்கடை வியாபாரிகள் கலந்துகொண்டனர்.

**பிற மாநில முக்கிய நடப்புச் செய்திகள்**

செய்தித்தொகுப்பு: ந.சேகரன்

# விவசாயிகளின் தொடரும் தற்கொலை துயரச் சம்பவங்கள்

**மகாராஷ்டிரா:** மகாராஷ்ட்டிரா மாநிலம் நாகபூரி மாவட்டத்தில் மட்டும் கடந்த 10 நாட்களில், 5 விவசாயிகள் தற்கொலை செய்துள்ள துயர நிகழ்வுகள் நடந்துள்ளன. மகாராஷ்ட்ரா மாநிலத்தில் தொடர் மழை காரணமாக, விளைபயிர்கள் நீரில் முழ்கியதால் பொருளதார பேரிழப்பை சந்தித்த விவசாயிகள், அரசின் நிவாரண உதவி பற்றி எந்த அறிவிப்பும் இல்லாத நிலையில் தங்கள் வாழ்வை முடித்துக் கொண்ட துயர சம்பவம் நடந்தேறி உள்ளது.

பிமபால்தார மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ராஜீவ் பாபுடராவ் ஜீத்பே தனது விவசாய நிலத்தின் அருகே உள்ள மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலை செய்து கொண்ட விவசாயி வங்கியில் கடன் வாங்கி, தனது 2.5 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வந்ததாகவும், மழையால் ஒரே நாளில் அனைத்துப் பயிர்களும் நாசமானதால், மனமுடைந்த விவசாயி தற்கொலை செய்துகொண்டார் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த துயர சம்பவத்திறகு முன்பு கடந்த வாரத்தில் லோகாரா கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஈஸ்வர்தாஸ் நாராயணன்தாஸ் பங்கர் என்பவர், கடன் சுமையாலும் பயிர் இழப்பாலும் தற்கொலை செய்து கொண்டார் என்பதும் வேதனை தரும் செய்தியாகும்.

அம்பாதா கிராமத்தைச் சேர்ந்த விவசாயி விட்டல் உமார்கர் தாண்டா கிராமத்தைச் சேர்ந்த விசவாயி சங்கர்ராம் ஷியாமா ஆகியோர் விவசாயத்திற்காக வாங்கிய கடன் பிரச்சினைகளால் தற்கொலை செய்து கொண்டனர்.

உம்ரி என்ற கிராமத்தைச் சேர்ந்த அசோக் நீலகாந்த் சார்வே என்ற இளம் வயது விவசாயியும் விவசாயத்திற்காக வாங்கிய கடன் பிரச்சினையால் தற்கொலை செய்து கொண்ட கொடுஞ் சம்பவம் நடந்தேறி உள்ளன.

கடனில் சிக்கிண்டு வாழ்வைத் தொலைக்கும் விவசாயிகளை கடனிலிருந்து மீட்க எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த முன்வாரத பிரதமர், விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்குமாக உயர்த்துவேன் என்று கூறியது, வெறும் ஆரவாரக் கூச்சல் வெற்று வாய்ப்பந்தல் என்பது இதன் மூலம் நிரூபணமாகி வருகிறது.

## உத்தரப் பிரதேச பாஜக அரசின் அராஜகம்

# உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கியும் விடுதலை செய்யாத பாஜக அரசு

உச்ச நீதி மன்றம் ஜாமீன் வழங்கிய போதும் அமுலாக்கத் துறை யின் வழக்கு விசாரணை நிலுவையில் இருப்பதாகக் கூறி, கேரள பத்திரிக்கையாளர் சித்திக் கப்பானை இன்னும் விடுதலை செய்யாமல் சிறையில் அடைத்து அராஜகம் செய்து வருகிறது உத்தரப் பிரதேச பாஜக வின் யோகி அரசு.

கடந்த 2020 அக்டோபர் மாதத்தில் உத்திரப் பிரதேச மாநிலம் ஹத்ராசில் தலித் பெண் ஒருவர் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்த கொடுஞ் சம்பவம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் குறித்து செய்தி சேகரிப்பதற்காக கேரளாவை சேர்ந்த் பத்திரிக்கையாளர் சித்திக் கப்பான், உத்தரப்பிரதேசம் சென்றார்.



ஆனால் பத்திரிக்கையாளர் கப்பானை உத்தரபிரதேசத்திற்குள் உள்ளே விடாமல் அந்த மாநில போலீசார் கைது செய்தனர். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்துள்ளதாகக் கூறிய பாஜக அரசு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலடைத்திருந்தது.

இந்த நிலையில் பலமுறை விசாரணை என்ற பெயரில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யாமலும் போதுமான கால அவகாசங்கள் எடுத்துக் கொண்டு, குற்றச்சாட்டுக்குரிய ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படாத நிலையில் உச்ச நீதிமன்றம், பத்திரிக்கையாளர் சித்திக் கப்பானை ஜாமீனில் விடுதலை செய்து உத்தரவு இட்டது. ஆனால் நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்தாமல் வேண்டுமென்ற இன்னொரு பொய் வழக்கைக் காரணம் காட்டி அவரை விடுதலை செய்யாமல் இழுத்தடித்து வருகிறது உ.பியின் யோகி அரசு. கருத்துச்சுதந்திரத்திற்கு வேட்டு வைக்கும் பாஜக அரசு நீதிமன்ற உத்தரவையும் அலட்சியப்படுத்தி அராஜகம் செய்து வருகிறது.

## திருவள்ளூர் அருகே தனியார் தொழிற்சாலைக்கு இடம் கொடுத்த விவசாயிகள்

# குடும்பத்துடன் காத்திருப்பு போராட்டம்

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், அதிகத்தூர் கிராமத்தில் தனியார் கார் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலைக்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு தொழிற்சாலை நிர்வாகம் வேலை வழங்கியிருந்தது. இந்நிலையில் முதலில் இருந்த நிர்வாகம் கைமாறி வேறொரு நிர்வாகத்திற்கு சென்றது. தொழிற்சாலைக்கு நிலம் கொடுத்ததால் தொழிற்சாலையில் 22 நிரந்தர தொழிலாளர்கள் மற்றும் 150 ஒப்பந்த தொழிலாளர்கள் என 172 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். இந்நிலையில் நிலம் கொடுத்து பணியாற்றி வந்த 172 தொழிலாளர்களை புதியதாக வந்த தொழிற்சாலை நிர்வாகம் வேலையை விட்டு நீக்கியது.




இதனை தொடர்ந்து பணிநீக்கம் செய்யப்பட்ட நிலம் கொடுத்து பணியாற்றி வந்த 172 தொழிலாளர்கள் தங்களுக்கு மீண்டும் பணி வழங்க கோரி கடந்த 4 வருட காலமாக பல்வேறு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக அவர்கள் சாலை மறியல் போராட்டம், கம்பெனிக்கு பூட்டு போடும் போராட்டம், கலெக்டர் அலுவலகம் முற்றுகை போராட்டம் கலெக்டர் அலுவலகத்தில் தங்களது குழந்தைகளுடன் காத்திருப்பு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். இருப்பினும் இதுநாள் வரையிலும் தொழிற்சாலை நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கக்கோரி தங்களது குழந்தைகள் மற்றும் குடும்பத்தாருடன் தனியார் தொழிற்சாலையை அருகே காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் சிபிஐ மாவட்ட நிர்வாகிகள் ஆறுமுகம், கே.கஜேந்திரன், கே. ரவி, சரவணன், இஸ்மாயில், சீனிவாசன், அண்ணாமலை உள்பட 60 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிலம் கொடுத்த விவசாயிகள் வேலை இழந்த தொழிலாளர்கள் குடும்பத்துடன் தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முடிவு எட்டும் வரை போராட்டம் தொடரும் என்று வேலை இழந்த தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

## நூல் விலை உயர்வை கண்டித்து ஆண்டிபட்டியில் ஆர்ப்பாட்டம்

ஒன்றிய மோடி அரசே மாதம் தோறும் நூல் விலையினை உயர்த்தி நெசவு தொழிலை சவகுழிக்குள் தள்ளாதே என வலியுறுத்தி ஆண்டிபட்டி நகரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து நெசவாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தி.சென்றாயபெருமாள் உரையாற்றினார். நெசவாளர் சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் க.முனீஸ்வரன் கண்டன உரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன் நிரைவுரையாற்றினார். நெசவாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் பா.பிச்சைமணி நன்றி உரையாற்றினார்.



ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள், நெசவாளர்கள் என 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## சிவகாசியில் நவம்பர் 11 விருதுநகர் மாவட்ட ஏஐடியுசி மாநாடு

விருதுநகரில் ஏஐடியுசி மாவட்டக் குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தலைமை வகித்தார். மாநில தலைவர் கே.சுப்பாராயன் எம்பி, மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி,மாநில செயலாளர் காசிவிஸ்வநாதன் ,தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ ஆகியோர் பேசினார்கள்.

சங்கங்களை மத்திய, மாநில பதிவுகளை முடிப்பது எனவும் அதற்கு பொறுப்பாளர்களாக முத்துமாரி, தங்கராஜ் , மாரியப்பன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். சிவகாசியில் மாவட்ட மாநாட்டை நவம்பர் 11ல் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. இக்கூடடத்தில் மாவட்ட தலைவர் சமுத்திரம், பாலமுருகன், எஸ்.பழனிக்குமார், கட்டிட தொழிலாளர் சங்க தலைவர் நடராஜன், தங்கராஜ், போக்குவரத்து இராஜேந்திரன் ,சம்மேளன ஆதிமூலம், டாஸ்மாக் சங்கம், சுமைதூக்கும் சங்க ஜீவா, அமைப்புசாரா சங்க முனியசாமி, சாமிநாதன், ஆட்டோசங்க ஸ்டாலின் , சக்கணன், முத்துக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.




## வத்திராயிருப்பில் திருட்டு மற்றும் கஞ்சா வியாபாரத்தை தடுத்திடுக

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்**

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு பகுதியில் தொடர் திருட்டு மற்றும் கஞ்சா விற்பனை நடைபெற்று வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் பேரூராட்சி தலைவர் பி.தவமணி மீதும் சமூக விரோதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

காவல்துறை சட்டம் ஒழுங்கை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வத்திராயிருப்பு முத்தாலம்மன் திடலில் ஆர்ப்பாட்டம் நடந்தது. வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எமஎல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், வி.பொண்ணுப்பாண்டியன் எக்ஸ் எம்எலஏ ,தவிச மட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன், துணைசெயலாளர் மகாலிங்கம் ஆகியோர் பேசினர்.

## இளைஞர் பெருமன்றம் சார்பில்

# துவக்க பள்ளிக்கு ஒலிபெருக்கி வழங்கும் விழா

மதுரை புறநகர் மாவட்டம் நரசிங்கம் பகுதியில் உள்ள சி.எஸ்.ஐ தனியார் துவக்க பள்ளியில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மற்றும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் முன்னாள் மாணவர்கள் சார்பில், ஒலிப்பெருக்கி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் கிருஷ் பாக்கியம், நரசிங்கம் கிளை செயலாளர் ராஜீவ்காந்தி, பெருமாள்புரம் கிளை செயலாளர் முத்துசாமி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மதுரை புறநகர் மாவட்ட தலைவர் விக்ரம், நரசிங்கம் கிளை உறுப்பினர் அஜய் மற்றும் மாணவ, மாணவிகள் உள்பட பலர் இதில் பங்கேற்றனர்.



## இந்த வார தம்பிக்குறள்

### 88. வைகறைத்துயிலெழு

**வைகறைத் துயிலெழ காகம் கரையும்**
**விரைத்தெழுந்து வேலை தொடர்.**

காகம் கரைகின்ற அதிகாலையில் எழுந்து, செய்ய வேண்டிய பணிகளைத் தொடங்கி விட வேண்டும். (கோழிச் சேவல் கூவ எழுதல் எனக் கூறுவது மரபு. இவர் காகம் கரைய என்பது ஏனெனில், கோழி கூவி நிறுத்திவிடும். காகம் எழுந்து கரையத் தொடங்கினால் இடைவிடாமல் மாறி மாறிக் கரைந்து எழுப்பி விடும்)

**நாளைநாளை என்பான் எவனும் வினையைஇ**
**வேளைக்குச் செய்யான் விரைந்து**

எந்தச் செயலையும் ‘நாளை செய்யலாம்‘ என்று தள்ளிப் போடக் கூடாது. தள்ளிப் போடுபவன் உரிய செயலை உரிய நேரத்தில் செய்து முடிக்க இயலாது.

# பட்டு நூல் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கப் பேரவை

சேலம் மாவட்ட பட்டு நூல் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட பேரவை கூட்டம் செப்.18 அன்று கொண்டலாம்பட்டியில் நடைபெற்றது. கூட்டத்தை ஏஐடியூசி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ப.பரமசிவம், சாலையோர சங்கத்தின் மாவட்ட தலைவர் அ.மோகன் வழிநடத்தினர். கூட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் நடேசன் தலைமை வகித்தார். தலைவராக நடேசன், செயலாளராக மோகனரங்கன், பொருளாளராக ஜெயகோபால் ஆகியோர் ஏகமனதாக பேரவையில் தேர்வு செய்யபட்டனர்.

# தோழர் வ.பாலமுருகன் தாயார் வள்ளியம்மாள் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு முன்னாள் உறுப்பினர் வ. பாலமுருகனின் தாயார் திருமதி வள்ளியம்மாள் என்கிற சின்னத்தாயி அம்மாள் (86) செப்.14 அன்று கோவில்பட்டி, கடலையூர் அருகில் உள்ள வள்ளிநாயகிபுரத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது, தாயாரை பிரிந்து வாடும் பாலமுருகனுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# மின்கட்டண உயர்வை திரும்ப பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் !



தமிழகத்தில் உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டண உயர்வினை திரும்ப பெற வற்புறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்ரீரங்கம் பகுதி குழு சார்பில், தேவி தியேட்டர் அருகில் மாவட்ட குழு உறுப்பினர் சொக்கி.சண்முகம் தலைமையில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா. ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட பொது செயலாளர் க.சுரேஷ், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க. இப்ராஹீம். ஸ்ரீரங்கம் பகுதி செயலாளர் ச.பார்வதி, தரைக்கடை சங்க மாவட்ட செயலாளர் ஏ.அன்சர்தின் ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட குழு உறுப்பினர் கருணாகரன் நன்றி கூறினார்.

**பெரம்பூர் :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரம்பூர் தொகுதி 46வது வட்ட கிளையின் சார்பாக சத்தியமூர்த்தி நகர் பில்லர் அருகில் 33சி,2ஏ ஆகிய பேருந்துகளை ஏற்கனவே இயக்கிய வழியாக மீண்டும் இயக்கிடவும், ஏழைகளை ஏறி மிதிக்கும் மின்சார கட்டண உயர்வை தமிழக அரசு உடனே திரும்ப வலியுறுத்தியும் போராட்டம் நடைபெற்றது. நமது கோரிக்கையை ஏற்று முன்தினமே 33சி,2ஏ பேருந்து இயக்கப்பட்டது. இருப்பினும் வரும் போது மட்டுமே பேருந்து வியாசர்பாடி மேம்பாலம் கீழே வருகிறது. திரும்ப செல்லும் போது மேம்பாலம் மேலே செல்கிறது மற்றும் பிராட்வே பிரகாசம் சாலை வழியாகவும் பேருந்து இயக்கப்படவில்லை. எனவே சட்டமன்ற உறுப்பினர் மற்றும் போக்குவரத்து துறை அதிகாரிகள் இந்த கோரிக்கைகளையும் உடனே நிறைவேற்ற வேண்டும் இல்லையெனில் மீண்டும் போராட்டம் தொடரும் என்று ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளை செயலாளர் நாகராஜ் தலைமை தாங்கினார். இராஜாராம் வரவேற்புரையாற்றினார். சிபிஐ வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, த.ஒ.வா.இ. மாநிலச் செயலாளர் கீ.சு.குமார், சிபிஐ பகுதி செயலாளர் எஸ்.கோட்டி சுரேஷ், மாதர் சம்மேளன வடசென்னை மாவட்டச் செயலாளர் டி.செண்பகம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஜெகதீசன் நன்றி கூறினார்.

# ஊராட்சி நிதியில் முறைகேடு:

## ● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் உட்பட்ட கூவாகம் ஊராட்சி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு, ஊராட்சி நிதிகள் ஊழல் முறைகேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்க கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூவாகம் கிளை செயலாளர் எஸ்.நாராயணன் தலைமையில் திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்திற்கு முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோரிக்கையை வலியுறுத்தி ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன், வட்டத் தலைவர் மீசை ஆறுமுகம், கட்சி ஒன்றிய நிர்வாகிகள் மணிகண்டன், நாகப்பன், இராதாகிருஷ்ணன், ரவி, பாலகிருஷ்ணன், மணி, ஆகியோர் பேசினர். ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தது சிபிஐ மாவட்ட செயலாளர் ராமசாமி உரை நிகழ்த்தினார்.




# கட்டட தொழிலாளர் சங்க தேனி மாவட்ட மாநாடு

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க தேனி மாவட்ட 5வது மாநாடு தேனி சிட்கோ சென்டெக்ட் வளாகத்தில் நடை பெற்றது. மாவட்டத்தலைவர் ஆர். செந்தில் தலைமை வகித்தார். மாவட்ட துணைச்செயலாளர் டி.கலா வரவேற்புரையாற்றினார். வி.முத்து கொடியேற்றினார். மாநில பொதுச்செயலாளர் கே. இரவி சிறப்புரையாற்றினார். மாநிலச் செயலாளர் துரைச்சாமி, மாநில பொருளாளர் மதுரை ஆர்.முருகன், ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.ரவிமுருகன் வாழ்த்துரையாற்றினர்.

மாவட்டத் தலைவராக ஆர்.செந்தில், துணைத் தலை வர்களாக முத்துலட்சுமி, ரஹீம், மாவட்டச் செயலாளராக ச.ஆலன், துணைச் செயலாளர்களாக வி.முத்து, டி.கலா போடி சங்கர், பொருளாளராக படையப்பா முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேனி மாவட்டத்தில் நீண்ட காலமாக இயங்கிவந்த 40 ற்கும் மேற்பட்ட கல் குவாரிகள் உரிமம் புதுப்பித்தல் இரண்டு வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஒருசில பட்டா குவாரிகள் மட்டும் இயங்குகிறது.

நிறுத்தப்பட்ட கல் குவாரிகளில் பணி புரிந்த 2000 ஆயிரம் தொழிலாளர்கள் நேரடியாகவும் பல் ஆயிரம் தொழிலாளர்கள் மறைமுகமாகவும், வேலையிழந் துள்ளனர். பல குடும்ங்கள் சிரமத் திற்குள்ளாகியுள்ளனர். உரிமை யாளர்கள் நஸ்டத்திற்குள்ளாகி அரசிற்கு கனிமவளத்துறை மூலமாக கிடைக்கவேண்டிய வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்கள் நலன்கருதி குவாரிகள் உரிமம் புதுப்பித்தலை வழங்கவும் ஏலம் அரசு குவாரிகளை விடுவதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டுமென மாநாடு தமிழக அரசை வலியுறுத்துகிறது.

தேனி மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற ரயில்வே நெடுஞ் சாலைத்துறை பணிகளில் 90 சதம் உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்திட வேண்டும்.

தொழிலாளர் நல வாரிய மாவட்ட அலுவலகத்தில் கண்காணிப்புக்குழு கூட்டத்தை மாதம்தோறும் நடத்திட வேண்டும்என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஏஐடியூசி வேலை நிறுத்த நோட்டீஸ்!

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சியில் துப்புரவு பணி செய்யும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை ஜெயங்கொண்டம் நகராட்சி நிர்வாகம் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருகிறது. குறிப்பாக மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்ட தினக்கூலி ஊதியத்தை அமுலாக்காத 52 மாதத்திற்கான நிலுவைத் தொகை வழங்காதநிலை, ஆரம்பகால சென்னை எம்.இ.டி.சி. ஒப்பந்ததாரர், தூய்மை பணியாளர்களின் 15 மாத கால சேமநல நிதியை பணியாளர்களுக்கு கிடைக்கச் செய்யாமல் இருப்பதை நகராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளாத போக்கு, நிரந்தர தொழிலாளர்களுக்கு இ.பி.எப். வட்டியுடன் கூடிய இருப்புக் கணக்கு கொடுக்கப்படாத போக்கு, இ.எஸ்.ஐ. மருத்துவ அட்டை, ஐடி காா்டு கொடுக்கப்படாத நிலை, கோரிக்கைகளிலிருந்து திசை திருப்ப, தொழிலாளர் பிரதிநிதிகளான தொழிற்சங்க நிர்வாகிகளான செயலாளர் மா.தம்பி சிவம் மற்றும் ம. சிலம்புசெல்வி, ஆர்.துரை, எஸ்.சீதா, பி.ஜெயா, பி.லட்சுமி, சிவக்குமார், என்.சுரேஷ் போன்ற நிர்வாகிகளை வேலையை விட்டு ஒழித்துவிடுவேன் என மிரட்டி பழிவாங்கிட முயற்சித்தல்,

1948 ஆம் வருட குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்திற்க்கு




குறைவாக,அரியலூர் மாவட்ட ஆட்சியர் 2022 – 2023 நிதியாண்டிற்கான தினக்கூலி அறிவித்துள்ளதை மாற்றி உத்தரவிட கோருதல் உள்ளடங்கிய 15 கோரிக்கைகளை முன்வைத்து 14/9/2022 அன்று ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகத்தில் சங்க தலைவரும், உள்ளாட்சி ஏஐடியூசி சம்மேளன மாநில செயலாளர் டி.தண்டபாணி, சங்க செயலாளர் மா.தம்பிசிவம் மற்றும் தொழிலாளர்கள் திரளாக சென்று கொண்டு நகராட்சி ஆணையர்(பொ) மதி.சித்ரா அவர்களிடம் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. நிகழ்வில் தொழிலாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# கும்பகோணம் கல்வி மாவட்டம் தொடர்ந்து செயல்பட தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

கும்பகோணத்தில் செயல்பட்டு வந்த மாவட்ட கல்வி அலுவலகத்தை, தஞ்சையில் அமைந்துள்ள மாவட்ட கல்வி அலுவலகத்தோடு இணைக்கப்படும் என்ற அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இதனால் மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தில் பின்னடைவு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டு உள்ளது.

கும்பகோணம் கல்வி மாவட்டத்தில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பள்ளிகளும், சுமார் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

கும்பகோணம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அமைந்துள்ள பள்ளிகளை நேரடியாக கவனம் செலுத்தி நிர்வகிக்கவும், மாணவர்கள் கல்வி தரம் மேம்பட வசதியாகவும், கடந்த 2008ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் கும்பகோணம் கல்வி மாவட்டம் அமைக்கப்பட்டது.

இதன் காரணமாக இப்பகுதியின் கல்வித் தரமானது உயர்ந்து வளர்ச்சி பெற்றது. தஞ்சை மாவட்டத்திலேயே கும்பகோணம் கல்வி மாவட்டத்தில் தான் அதிக மாணவர்கள் உள்ளனர். இப்பகுதியில் பெரும்பாலான அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகள் கிராமப்புறங்களில் உள்ளது.

ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதில் கும்பகோணம் கல்வி மாவட்டம் கடந்த காலங்களில் சிறப்பான பங்களிப்பை செய்துள்ளது.

அகவே, மாணவ மாணவிகள் நலன் கருதியும், இப்பகுதியின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை கருத்தில் கொண்டும், கும்பகோணத்தில் செயல்பட்டு வந்த மாவட்ட கல்வி அலுவலகத்தை, தஞ்சையில் அமைந்துள்ள மாவட்ட கல்வி அலுவலகத்தோடு இணைக்கப்படும் என்ற அரசாணையை உடனே ரத்து செய்ய வேண்டும் எனவும், கும்பகோணம் கல்வி மாவட்டம் தொடர்ந்து செயல்பட தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்




## திண்டுக்கல் மாவட்ட

# கட்டட தொழிலாளர் சங்க மாநாடு

தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி கட்டிட தொழிலாளர் சங்க திண்டுக்கல் மாவட்ட 8–வது மாநாடு எஸ்.கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டை துவக்கி வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் உரையாற்றினார். கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் கே.இரவி மாநாட்டின் நோக்கங்களையும், கோரிக்கைகளையும் விளக்கி பேசினார். மாவட்டச் செயலாளர் ஜி.பாலன் அறிக்கை சமர்ப்பித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், ஏ.ஐ.டி.யு.சி. கௌரவ தலைவர் துரை சந்திரமோகன், கட்டிட சங்க மாநில செயலாளர் ஆர்.துரைசாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்.

கட்டுமான தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மாதம் 6000 வழங்கப்பட வேண்டும்.

பெண் கட்டுமான தொழிலாளர்களுக்கு 50 வயதில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் .

இ எஸ் ஐ, பிஎப் சட்டத்தை கட்டுமான தொழிலாளர்களுக்கு அமல்படுத்திட வேண்டும்.

விபத்துக்குள்ளாகும் தொழிலாளிக்கு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் மறுப்பின்றி சிகிச்சை அளிக்கவும், செலவை நல வாரியமே ஏற்க வேண்டும். குழந்தைகளின் கல்விச் செலவு முழுமையாக வாரியம் ஏற்க வேண்டும்.

திருமண உதவி நிதி ரூபாய் ஒரு லட்சம் வழங்க வேண்டும். விபத்து மரணத்திற்கு ரூபாய் பத்து லட்சம், இயற்கை மரணத்திற்கு ரூபாய் 5 லட்சம் வழங்கப்பட வேண்டும். பேறுகால பயன்கள் சட்டத்தில் வரையறுத்துள்ளபடி பெண் தொழிலாளிக்கு ஆறு மாத காலம் ஓய்வு, அதற்கான சம்பளமாக 90 ஆயிரம் நிதி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட செயலாளராக ஜி.பாலன், தலைவராக எஸ்.கண்ணன், பொருளாளராக சிவராஜன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## உறையூர் பகுதிக்கு அரசு மேல்நிலைப்பள்ளி:

# மாணவர் பெருமன்றம் ஆட்சியரிடம் மனு!

திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட உறையூர் பகுதி அதிக அளவிலான மக்கள் தொகையை கொண்ட திருச்சியின் மிக முக்கிய நிலப்பரப்பாகும். இந்த பகுதியில் ஏழை, எளிய, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த ஏராளமான மாணவ மாணவிகள் பள்ளிக்கல்வி படிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இந்த பகுதியில் அரசு ஆரம்பப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் உள்ள நிலையில் அரசு மேல்நிலைப்பள்ளி இல்லாதது வருத்தம் அளிக்கிறது. அதே நேரம் எண்ணற்ற தனியார் பள்ளிகள் உறையூர் மற்றும் உறையூரை சுற்றியும் அதிக அளவில் தொடங்கப்பட்டு விட்டன. இதனால் பெற்றோர் பலரும் தங்கள் பிள்ளைகளின் மேல்கல்வியை தனியார் பள்ளியிலேயே சேர்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் மக்கள் நலனை கருத்தில் கொண்டும், மாணவர்களுக்கு இலவசமாக தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும் உறையூர் பகுதிக்கு நவீன கட்டமைப்புடன் அனைத்து வசதிகள் அடங்கிய அரசு மேல்நிலைப்பள்ளி அமைத்து தர வேண்டும் என்று கேட்டு அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் திருச்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளர் பாலச்சந்திரனிடம் மாவட்ட செயலாளர் க.இப்ராகிம் தலைமையில் மனு அளிக்கப்பட்டது. இதில் மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, மாநிலத் துணைச் செயலாளர் ஜி.ஆர்.தினேஷ்குமார், இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் முருகேசன், மாநிலக்குழு உறுப்பினர் தாஸ், மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் பாட்ஷா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## சேலம் மாவட்ட சாலையோர வியாபாரிகள் சங்கப் பேரவை



சேலம் மாவட்ட ஏஐடியுசி சாலையோர வியாபார தொழிலாளர் சங்கத்தின் 2வது பேரவைக் கூட்டம் சங்கத் தலைவர் ஏ.மோகன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் பா.தினேஷ் வரவேற்றுப் பேசினார். பொதுச்செயலாளர் எம்.ஷாநவாஸ்கான் வேலை அறிக்கையையும், எம்.முகமது மீரா வரவு செலவு கணக்குகளையும் வாசித்தனர். தமிழ்நாடு தெரு வியாபார தொழிலாளர் இணையத்தின் மாநில பொதுச்செயலாளர் எம்.என்.இராமச்சந்திரன், ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் எம்.முனுசாமி, துணைத்தலைவர் பி.பரமசிவம், மாவட்ட செயலாளர் டி.வி.கருணைதாஸ் வாழ்த்துரை வழங்கினர்.

தலைவராக ஏ.மோகன், பொதுச்செயலாளராக எம்.ஷாநவாஸ்கான், பொருளாளராக எம்.முகமது மீரா, துணைத்தலைவர்களாக ஏ.முகமது இக்பால், கே.எம்.முகமது யூசுப், செயலாளர்களாக ஆர்.வேல்முருகன், எம்.நந்தகுமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆனந்தா இறக்கம் முதல் கேவீஸ் வரை கடந்த 25 ஆண்டுகளாக சாலையோர கடைகள் செயல்பட்டு வந்தது. தற்போது ஸ்மார்ட் சிட்டி பணிகள் முடிவடைந்து விட்டது. ஆகவே ஆனந்தா இறக்கம் முதல் கேவீஸ் வரை சாலையோர கடைகள் செயல்பட அனுமதி அளிக்க வேண்டும்.

சட்டப்படி குறிப்பிட்டுள்ள வியாபார கட்டணத்தை உள்ளாட்சி அமைப்புகள் நேரிடையாக வசூல் செய்ய வேண்டும். டெண்டர் முறையை ரத்து செய்ய வேண்டும்.

ஆற்றோர சாலையோர வியாபாரிகளுக்கு இரு பாலர் கழிப்பிடம் குடிநீர் வசதி செய்து தர வேண்டும்

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயலாளர் ஆர்.வேல்முருகன் நன்றி கூறினார்.

# மதுரை மாவட்ட கட்டட சங்க மாநாடு


தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மதுரை மாவட்ட மாநாடு அலங்காநல்லூரில் நடைபெற்றது. மாநில செயலாளர்கள் கோவை செல்வராஜ், சேலம் சின்னச்சாமி பங்கேற்றனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல், மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், மாதர்சங்க மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி வாழ்த்தி பேசினர். இந்த மாநாட்டில் கட்டட சங்கத்தின் சார்பாக இரா.முருகன், எம்.இருளாண்டி, கே.கதிரேசன், அலங்காநல்லூர் அலெக்ஸ், மேலூர்நாராயணன், இந்தியக் கம்யூ.கட்சியின் அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் செல்லத்துரை, மதுரை மாவட்ட ஏஐடியூசி பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் விளாங்குடி கே.எஸ்.மணி, திருப்பரங்குன்றம் பாலகிருஷ்ணன், ஜனசக்தி என்.ஜீவா உட்பட பலர் பங்கேற்றனர்.

# குடியிருப்பு பகுதியில் மதுக்கடையை திறக்கக் கூடாது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வேப்பங்காடு கிராமம் அம்பேத்கர் காலனியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் அன்றாடம் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வருகின்றனர். இளம்பெண்கள் நிறைய பேர் உள்ளனர். இந்த இடத்தில் தற்போது புதிதாக டாஸ்மாக் மதுக்கடை கட்டப்பட்டு திறக்க உள்ளனர். புதிய கடை திறக்கப்பட்டால் இப்பகுதியில் உள்ள பெண்களுக்கு பாதுகாப்பின்மை, மாணவ, மாணவியர்கள் படிப்பதற்கு இடையூறு என பல தொல்லைகள் வர வாய்ப்புள்ளது. அம்பேத்கர் காலனியில் புதிதாக டாஸ்மாக் கடை கட்டப்பட்ட போது கடையைக் கட்டக் கூடாது என மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், கலால் பிரிவு உள்ளிட்டு மனு அளித்தும் எவ்விதமான நடவடிக்கையும் இல்லை. தற்போது புதிதாக கட்டப்பட்ட டாஸ்மாக் மதுக் கடையை திறக்க கூடாது என கிராம மக்கள் சார்பிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பட்டுக்கோட்டை ஒன்றியம் சார்பிலும் மாவட்ட ஆட்சியரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பட்டுக்கோட்டை ஒன்றிய செயலாளர் க.பூபேஸ்குப்தா கோரிக்கை மனு அளித்தார்.

## இராஜபாளையம் மூத்த தோழர் இ. கணேசன் காலமானார் : தலைவர்கள் அஞ்சலி



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி ஊழியராக செயல்பட்டவர் இ.கணேசன் (வயது 89) . இவர் வயது மூப்பின் காரணமாக காலமானார். தகவலறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, வத்திராயிருப்பு வட்ட செயலாளர் கோவிந்தன் உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, மகன்களிடம் துக்கம் விசாரித்து இரங்கல் தெரிவித்தனர்.

# கஞ்சா- மாபியாக்களை கைது செய்க

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு கஞ்சா, போதை ஊசி, போதை மாத்திரை மாபியாக்களால் பள்ளி, கல்லூரி, மாணவர்கள் சீரழிக்கப்பட்டு, கூலிப்படைகளாவதை தடுத்து நிறுத்தி, சமூகக் குற்றங்களிலிருந்து பொதுமக்களை காத்திட தமிழக அரசை வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி கண்டன உரை நிகழ்தினார். நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

# ஸ்ரீ ராம் பைனான்ஸ் நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்திடுக


## இராமேஸ்வரதில் ஏஐடியூசி ஆட்டோ சங்கம் ஆர்ப்பாட்டம்

ஒடி.. வட்டி என்ற பெயரில் வாகன கடன் வாங்கியவர்களிடம் லட்சக்கணக்கில் பணம் பிடுங்குவதை கண்டித்தும் தவணை தவறிய கடனாளிகளிடம் அடியாட்டகளை வைத்து மிரட்டும் பைனான்ஸ் நிறுவனத்தை கண்டித்தும் கட்டிய பணத்தை கடனில் வரவு வைக்காமல் மோசடி செய்த பைனான்ஸ் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற கோரிக்கைகளை வலிறுத்தி ஏஐடியூசி ஆட்டோ சங்கம் சார்பில் ராமேஸ்வரம் என்.எஸ்.கே. வீதியில் தாலுகா தலைவர் ஏ.கே.முனீஸ்வரன் தலைமையிலும், மகாராஜா ஸ்டாண்ட் தலைவர் மணிகண்டன் முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி மீனவர் சங்கத்தின் மாநில செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல் சிறப்புரை நிகழ்த்தினர், ஆட்டோ சங்க மாவட்ட தலைவர் எம். செந்தில், மாவட்ட நிர்வாகிகள் பி.ஜீவானந்தம், ஜி.பாண்டி, வி.கருப்பையா, மாரிராஜா, மீனவர் சங்க நிர்வாகிகள் எம்.அந்தோனிபீட்டர், எம்.பிச்சை, ஜி.ஆதித்தன், மற்றும் நுற்றுக்கானக்கான ஆட்டோ ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர்.

# கபிலரின் செயற்கையற்ற வாழ்வும் மொழிநடையும்

கபிலரின் செயற்கையற்ற வாழ்வும் மொழிநடையும் என்னும் இந்த நூல். தமிழரின் இயற்கையோடு இணைந்த வாழ்வு, கபிலரின் படைப்பும் பாடுபொருளும், பாடல்களில் மொழி நடை என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. ‘குறிஞ்சிக் கபிலன்’ ‘ நல்லிசை வாய்மொழிக் கபிலன்’ ‘ பொய்யா நாவிற் கபிலன்’ என்னும் பெயரடைகளால் கபிலரின் பன்முகத் தன்மைகளை அறியலாம். உலக இலக்கியங்களிலேயே முதன்முறையாக இயற்கையை பெரிதும் கொண்டாடியவரும், தமிழ் அக மரபைப் பிற மொழியாளர்களுக்குக் கற்றுக் கொடுத்தவரும் கபிலரே. இவர் சங்கப் புலவர்களில் மிகுதியான பாடல்களை பாடியவர். அப்பாடல்களின் வழி பண்டைத் தமிழ் நிலத்தின் இயற்கையையும்,இயற்கை சார்ந்த மனிதர்களின் வாழ்வியல் முறையும் பறைசாற்றியவர். கபிலர் பண்டைய தமிழரின் பண்பாட்டையும், இலக்கிய மரபையும் பரப்பியவர். பழனி மலையை ஆட்சி புரிந்த பேகன். கடையெழு வள்ளல்களில் ஒருவன். அவன் கொடை உள்ளமும், அன்பும் கொண்டவன். கார்மேகத்தை கண்ட மயில் மகிழ்ச்சியில் தன் தோகை விரித்து ஆடிக்கொண்டிருந்தது.அதை கண்ட பேகன் குளிரால் நடுங்குகிறது என கருதி மயிலுக்கு போர்வை போர்த்தி சென்றான் என்பதை பாடுகிறார். கபிலர் பாரி இறந்தபின் அவன் மகள்கள் இருவருக்கும் மணமுடித்து வைக்க எண்ணி,விச்சிக்கோ என்ற அரசனிடம் முதலில் வேண்டுகின்றார். ஆனால் அவன் அவளை மணக்க மறுத்து விடுகிறான்.பின்னர் இருங்கோவேள் என்ற அரசனிடம் அழைத்துச் செல்கின்றார். அவரும் அவளை மணக்க மறுத்து விடுகிறான். எனவே கபிலர் அவனை இகழ்ந்து பாடும்போது கழா அத்தலையார் என்ற புலவரின் சிறப்பையும் மேன்மையையும் குறிப்பிடுகின்றார். இந்நூலில் கபிலரின் சிறப்பையும், அவர் இயற்கையை சிறப்பாக பாடி உள்ளதையும், முனைவர் நா. அறிவரசன் அவர்கள் எழுதியுள்ளார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.




– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : நா.அறிவரசன்
வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை14
பக்கங்கள் : 120 விலை: ரூ.110

## நூல் நயம்

# தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை மதுரை மாவட்டம்

தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை மதுரை மாவட்டம் என்கிற இந்த நூல். மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் பிஎச்டி பட்டத்திற்காக தயார் செய்யப்பட்ட கட்டுரைகளின் அடிப்படையில் ஆனது என்கிற செய்தியை பதிப்புரை கூறுகிறது.

இந்தப் புத்தகத்தில் காலனிய ஆட்சிக் காலத்தில் மதுரை பகுதியில் இருந்த சமூக,பொருளாதார,வரலாற்றின் பரந்த விரிவான மற்றும் பொருளார்ந்த ஆய்வை தருகிறார் நூலாசிரியர். ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி 1801ஆம் நேரடி நிர்வாகத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வங்காள முறைமையில் அமைந்த ஜமீன்தார் முறையை சென்னை மாகாணத்தில் பல்வேறு மாவட்டங்களில் உருவாக்கியது. ஜமீன்தார்கள் மீதான ஆங்கிலேயர்களின் கொள்கைகள், ஜமீன்தாரின் சமூக வாழ்க்கை,,ஒடுக்குமுறை சுரண்டல்கள் போன்றவற்றை இந்நூல் விரிவாக ஆராய்ந்துள்ளது.

ஜமீன்தாரி முறைகளுக்கு முன்னால் மதுரை நாயக்கர் ஆட்சி காலத்தில் பாளையக்காரர்கள் முறை இருந்தது. பாளையக்காரர்கள் என்றால் ஆயுதப் படையின் தலைவர் என பொருள். நாயக்க மன்னர்களின் தீவிர விசுவாசிகள் பாளையக்காரர்கள். மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் மணப்பாறை பகுதிகளில் ஆதிக்கம் பெற்றவர்களாக இருந்தனர். அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாளையங்களின் நிர்வாகத்திற்கு அவர்கள் பொறுப்பாளராக இருந்தனர்.




பாளையக்காரர்கள் பாளையங்களில் இருந்து வரிவசூல் செய்து மூன்றில் ஒரு பங்கை அரசுக்கு செலுத்தினர். அவர்கள் தங்களது முழு படைபலத்தையும் போர்க்காலங்களில் அரசுக்கு அளிக்க கடப்பாடு உடையவராய் இருந்தனர். சாதாரண உள்ளூர் தலைவர்களை நாட்டின் பாதுகாப்பிற்கும் இறையாண்மைக்கும் ஆதரவாக உருவாக்கியது நாயக்கர்களின் அரசுதான். இந்த முறையை ஒழித்து தான் ஆங்கிலேய அரசு ஜமீன்தார் முறையை கொண்டு வந்துள்ளது. ஜமீன்தாரி முறையால் விவசாயிகள் கசக்கி பிழியபட்டனர். இயற்கை சீரழிவின் போது வரி தள்ளுபடிகள் செய்யப்படாமல் விவசாயிகளிடம் இருந்து பணத்தைப் பறிப்பதே முக்கிய குறிக்கோளாக கொண்டு செயல்பட்டனர் . இதனால் விவசாயிகள் பெரிதும் விரக்தி அடைந்தனர். விவசாயிகளின் விழிப்பாலும், அவர்கள் தொடர் போராட்டத்தின் காரணமாக 1949இல் தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது.

மதுரையை சுற்றி இருந்த ஜமீன் களைப் பற்றிய விவரங்கள் இந்நூலில் உள்ளது. டாக்டர் எஸ். வர்கீஸ் ஜெயராஜ் அவர்கள் எழுதிய இந்நூலில் பல்வேறு விவரங்கள் அடங்கியுள்ளது இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– சமரன்

நூலாசிரியர் : டாக்டர் எஸ். வர்கீஸ் ஜெயராஜ் தமிழில்: யூசுப் ராஜா
வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை14
பக்கங்கள் : 270 விலை: ரூ.220


வாரம் தோறும் வெளிவரும்

**ஜனசக்தி - நூல் நயம்**

புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014


சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

# சரிவைச் சந்தித்து வரும் அமெரிக்கா - ஐ. நா. சபை தகவல்

ஐ. நா. சபை வெளியிட்டுள்ள தகவலின்படி, நீடித்த வளர்ச்சியடைந்த நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் அமெரிக்கா சரிவைச் சந்தித்து வருகிறது.

அண்மையில், நீடித்த வளர்ச்சிக்கான (Sustainable Development) ஐ. நா. சபையின் பிரத்யேக அமைப்பு (UN-OSD) வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, அமெரிக்கா, அதன் சக வளர்ச்சியடைந்த நாடுகளைக் காட்டிலும் தரவரிசையில் பின்தங்கியுள்ளது. கடந்த ஆண்டு 32 வது இடத்தில் இருந்த அமெரிக்கா, ஒரே ஆண்டில், 11 இடங்கள் பின்தங்கியது. தற்போது, கியூபா மற்றும் உக்ரைன் நாடுகளைக் காட்டிலும் தரவரிசையில் பின்தங்கியுள்ளது.

ஐ. நா. சபையின் நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்கு களை நிறைவேற்றுவதில் நாடுகள் அடையும் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தரவரிசை பட்டியல் தயாரிக்கப்படுகிறது. சுத்தமான குடிநீர், சுகாதாரம் மற்றும் பசிக் கொடுமையின்மை ஆகியவற்றுடன் தரமான கல்வி உள்ளிட்ட நோக்கங்களும் அந்த இலக்குகளில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் ஐ. நா. சபையின் வலைதளத்தில் மிக விரிவாகவே விளக்கப்பட்டுள்ளன. நீடித்த வளர்ச்சிக்கான செயல்திட்டம் 2030 –ஐ (Agenda for Sustainable Development – 2030) நடைமுறைப்படுத்திட ஐ. நா. சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

2022 – ம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலில் ஸ்கேண்டிநேவியன் (Scandinavian) நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. பின்லாந்து முதல் இடத்தையும், டென்மார்க், சுவீடன் மற்றும் நார்வே ஆகிய நாடுகள் அடுத்த மூன்று இடங்களையும் பிடித்துள்ளன. தரவரிசையின் முதல் 20 இடங்களுக்குள் உள்ள, ஐரோப்பாவைச் சாராத நாடாக ஜப்பான் (19 வது இடம் ) உள்ளது.

அமெரிக்காவின் இந்தப் பின்னடைவுக்கு அதன் இனவாதப் போக்குதான் காரணம் என்று வரலாற்றாளர் கேத்லீன் குற்றஞ்சாட்டியுள்ளார். இன அடிப்படையில் பாகுபாடுகளை முன்னிறுத்தி, அமெரிக்க மக்கள் திரளில் கணிசமானோருக்கு கிடைத்திருக்க வேண்டிய கல்வி, சுகாதாரம், பொருளாதார பாதுகாப்பு உள்ளிட்டவற்றை மறுத்ததன் விளைவு தான் அமெரிக்காவின் பின்னடை வுக்கு காரணமாக உள்ளது.

அமெரிக்கா சரிவைச் சந்தித்து வருகிறது என்று ஐ. நா. சபை கூறுவதோடு மட்டுமின்றி, அமெரிக்கா ஒரு சீரழிந்து வரும் ஜனநாயக அமைப்பு என்று ‘The Economist’ இதழும் இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே வகைப்படுத்தி இருந்தது. அவ்வாறு வகைப்படுத்துவதற்கான அளவீடு களாக நாடுகளின் தேர்தல் செயல்பாட்டு முறை, பன்மைத் துவம், அரசாங்கத்தின் செயல்பாடு, பொதுமக்களின் அரசியல் பங்கேற்பு, ஜனநாயகப்பூர்வ அரசியல் விழுமியங்கள் மற்றும் சிவில் உரிமைகள் மற்றும் சுதந்திரம் ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## நியூயார்க் நகரில் வீடற்றோர் எண்ணிக்கை அதிகரிப்பு




நியூயார்க் நகரத்தின் வீடற்றோர் எண்ணிக்கை 80,000 ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்க பெருநகரமான நியூயார்க் நகரில் வீடற்ற மக்கள் தொகை சமீபத்திய ஆண்டுகளில் 80,000 பேராக உயர்ந்துள்ளது, தி போவரி மிஷன், பசி மற்றும் வீடற்றவர்களுக்கு சேவை செய்கிற (150 ஆண்டுகள் பழமையான) அமைப்பு இவ்வாறு தெரிவிக்கிறது.

நியூயார்க் நகரத்தில் வீடற்ற நிலை, 1930களின் பெரும் மந்தநிலைக்குப் பிறகு மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளது. 18,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 55,338 பேர் செப்டம்பர் 11, 2022 அன்று நகரக் காப்பகங்களில் தூங்கியதாக நகரின் சமூக சேவைகள் மற்றும் வீடற்ற சேவைகள் துறை இணையதளம் கூறுகிறது.

மாநில செனட்டர் பிராட் ஹோய்ல்மேன் “இந்த துயரமான சூழ்நிலையைப் பயன்படுத்தி பலர் பணம் சம்பாதிக்கிறார்கள், ஆனால் அவர்கள் நகரத்திற்குத் தேவையான சேவைகளை வழங்கவில்லை” என்று கூறினார். முன்னாள் நகரசபை வேட்பாளரும் வாழ்நாள் முழுவதும் மன்ஹாட்டனில் வசிக்கும் ஜாக்கி டோபோராஃப் “இப்போது நாங்கள் பிடன் பொருளாதார கொள்கைக்கு விலை கொடுக்கிறோம். சிறைகளை காலி செய்தார்கள், பிராட்வே மற்றும் வணிகத்தை இரண்டு ஆண்டுகளாக மூடிவிட்டனர், குழந்தைகளின் கல்வியை அழித்தார்கள், அவர்களின் கட்டளைகள் மக்களை வேலை இழக்கச் செய்தன. அவர்கள் நகரத்தை சட்டவிரோதமாக குடியேறியவர்களால் நிரப்பினர் ” என்கிறார்.

# ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் கம்யூனிச விரோத போக்கு

## கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் கம்யூனிச விரோத போக்கிற்கு கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரி வித்துள்ளது. அது குறித்த விவரம் பின்வருமாறு:

கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்தின் முடிவற்ற ஊற்றாக ஐரோப்பிய நாடாளுமன்றம் தொடர்ந்து சேவகம் செய்து வருகிறது. சோவியத் ஒன்றியம் மற்றும் சோஷலிசத்திற்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தை மீண்டும் பரப்பும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் புதியதொரு கம்யூனிச விரோத தீர்மானத்தை கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற குழு கண்டனம் செய்துள்ளது.

“உக்ரைன் மக்களை ரஷ்யாவிற்கு கட்டாயமாக நாடு கடத்துவது மற்றும் உக்ரைன் குழந்தைகளை ரஷ்யாவில் ஸ்வீகரிப்பது தொடர்பான மனித உரிமைகள் மீறல்” என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இன்றைய முதலாளித்துவ ரஷ்யாவுடன் சோவியத் ஒன்றியத்தை ஒப்பிட்டு, எதார்த்தத்தைத் திரித்துச் சொல்லும் நோக்கத்துடன், அறிக்கையின் தலைப்பிற்கும், உள்ளடக்கத்திற்கும் முற்றிலும் தொடர்பற்ற ஒரு பத்தியைச் சேர்த்துள்ளார்கள் !

கம்யூனிஸ்டுகள் மீதும், கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சித்தாந்தத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல உறுப்பு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மேலும் அது போன்ற புதிய ரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பத்தியில் கூறப்பட்டுள்ளது. “சோவியத் ஆக்கிரமிப்பு மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள்” குறித்து மிக மோசமான அவதூறுகள் அந்தப் பத்தியில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கம்யூனிச எதிர்ப்பு தான் ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரப்பூர்வ சித்தாந்தம் ஆகும். அதன் இதர அமைப்புகளிலும், உறுப்பு நாடுகளிலும் “அரசியல் ரீதியாக முறைப்படுத்தும்” பணியை மேற்கொள்வதாகக் கூறிக் கொள்ளும் ஐரோப்பிய ஒன்றியம், பாசிச சக்திகள் மற்றும் இதர வலதுசாரி குழுக்களுக்கு உதவிகரமாக இருந்து வருகிறது.

கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான பொய் மற்றும் புரட்டுகள் மூலம் முதலாளித்துவ சுரண்டல் முறை மீதான மக்களின் கோபாவேசம் போராட்டமாக மாறுவதைத் தடுத்து நிறுத்த முடியும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைப்புகளும், உறுப்பு நாடுகளும், முதலாளித்துவ கட்சிகளும் அவற்றின் அரசாங்கங்களும் கருதுவது மடமை ஆகும்.

இவ்வாறு கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழு கருத்து தெரிவித்துள்ளது.



# கோடம்பாக்கத்தில் கோலோச்சிய கோமகன்!



- சி.பாஸ்கர்

**தமிழ் சினிமாவின் சத்யஜித்ரே இயக்குனர் சிகரம் கே.பாலசந்தர் என்றால் அது மிகையில்லை. ஜித்ரேயின் படங்களில் 'பதர் பாஞ்சாலி' சிறப்பான படைப்பு என்பது பொதுவான விமர்சனம். யதார்த்த சினிமாவின் முன்னோடி மற்றும் தந்தை ஜித்ரே என்பது அவரின் சாதனையின் மணிமகுடம்.**

இந்த இரு பெரும் மேதைகளை அவரவர் வெளிச்சத்தில் மதிப்பிடுவதுதான் சரியாக இருக்கும். திரைப்படங்கள் மூன்று விதமாக சித்தரிக்கப்படுகின்றன.

நல்ல கருத்துக்களை வலிந்து கலை ரசனை இல்லாமல் உருவாக்குவது. ரொம்பவும் யதார்த்தமாக கலை அம்சம் இல்லாமல் சித்தரிப்பது, வணிக நோக்கத்தோடு கலப் படமாக, ஜனரஞ்சகமாக படைப்பது.

இந்த வழியில் நல்ல முறையில் தயாரான படங்கள் கூட வணிக ரீதியாக தோல்வி அடைகின்றன. நல்ல கலைஞர்கள் ஓரிரு படங்களோடு முகவரியை இழந்து தடம் தெரியாமல் மறைந்து போவது ஒன்றும் புதிதான விஷயமல்ல.

எவ்வளவு தான் நல்ல படமாக இருந்தாலும் அது ஜனரஞ்சகமாக இல்லாவிட்டால் அது பெட்டியில் முடங்கிவிடும்.

மார்க்சிய அழகியல் கோட்பாடு 'உருவமும் – உள்ளடக்கமும்' என்ற வெற்றிச் சூத்திரத்தை படைப்பாளிகளுக்கு வழங்கியுள்ளது. இதனை பின்பற்றியவர்கள்தான் பிரம்மாண்டமான வெற்றியை திரைத்துறையில் பதிவு செய்துள்ளார்கள்.

உலக திரைப்பட வரலாற்றில் 'பத்துக் கட்டளை', 'கிளி யோபாட்ரா', 'உமர் முக்தர்', 'கிளாடியேட்டர்' என அனைத்து படங்களும் உருவமும் – உள்ளடக்கமும் நேர்த்தியாக பொருந்தி பெரும் வெற்றி பெற்றன.

நம்மிடம் அது போன்ற படங்களை எடுக்க பெரும் மூலதனமும் – அதற்கான தொழில்நுட்பமும் இல்லை. ஆனால் தமிழ்மொழி – சாகாவரம் பெற்ற இலக்கியம் என்ற பேராயுதம் நம்மிடம் இருக்கிறது. அந்த வகையில் வாழ்வியலின் சிரஞ்சீவியான விழுமியங்களை மிக எளிமையாக சொல்லும் மேதைமை நம் கலைஞர்களிடம் கொட்டிக்கிடக்கிறது.

உலக சினிமாவில் அந்தக் கோணத்தில் நாம் தான் முதலிடம் வகிக்கிறோம். அந்தத் தடத்தில் புதுமை இயக்குனர் ஸ்ரீதர், பாலச்சந்தர், பாரதிராஜா, பீம்சிங், ப.நீல கண்டன், திருலோகச்சந்தர் என ஒரு பெரிய வரிசையே இருக்கிறது.

மனித வாழ்வின் அறத்தை யதார்த்தமாக தன் படம் மூலம் சொல்லி சமூகத்திற்கு நல் வழி காட்டுபவன் தான் சமூகப் பொறுப்புள்ள கலைப் படைப்பாளி.

'நீர்க்குமிழி' என்ற பாலசந்தர் படத்தை பார்த்தால், ஒரு மனிதனால் ஒரு வாரம் கூட தூங்க முடியாது. வள்ளுவனின் 'நிலையாமை' அதிகாரத்தைச் சொன்னால் அற்புதக் கலை ஓவியம். ஒரே குதூகலமாக சிரிப்பாய் நகரும் படம். கிளைமாக்சில் நெஞ்சத்தை கனமாக்கிவிடும்.

'நீரின்றி அமையாது உலகு' என்ற வள்ளுவன் வாக்கை நிரூபித்த படம் 'தண்ணீர் – தண்ணீர்'. இந்தக் கதை இன்றைக்கும், வரும் காலத்திற்கும் பொருந்தும் அழகியல் படைப்பு. ஒரு சிறு வர்க்கப் போராட்டத்தை சித்தரிக்கும் தமிழ் சினிமாவின் சிகரமானப் படைப்பு. ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய திரைச் சித்திரம்.

**'புன்னகை' என்ற படம் ஒரு இலட்சியவாதி தன் இறுதி மூச்சு வரை கொள்கையில் சமரசம் செய்து கொள்ள மாட்டான் என்ற அரிய கதை களத்தைக் கொண்டது. பாலசந்தர் தலைசிறந்த பெண்ணியவாதி.**

பாரதியாரிடம் அளவற்ற ஈடுபாடும் பற்றும் கொண்டவர். மகாகவி ஷேக்ஸ்பியர் பற்றி உலகப் பிரசித்தி பெற்ற இலக்கிய விமர்சகர் ஏ.சி.பிராட்லி இவ்வாறு குறிப்பிட்டார். "ஷேக்ஸ்பியர் பெண் கதாபாத்திரங்களை மட்டும்தான் முன்னிலைப் படுத்துகிறார்; பிரபலமாக்குகிறார்" பாலசந்தருக்கு இந்த விமர்சனம் முற்றிலும் பொருந்தும். பாரதியின் கவிதை வரிகளையே தன் படங்களுக்கு பெயர் சூட்டினார்.

அவரின் 'அபூர்வ ராகங்கள்', 'மனதில் உறுதி வேண்டும்', 'அவள் ஒரு தொடர்கதை', 'அச்சமில்லை அச்சமில்லை' ஆகிய படங்கள் ஒரு பெண்ணின் வலிமைமிக்க ஆளுமையை சித்தரிக்கின்றன. ஆண்கள் தோற்றுப் போன இடத்தை பெண்கள் கைப்பற்றி நிமிர்ந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்வது அற்புதம். இவை அனைத்தும் பாரதியின் புதுமைப் பெண் இலக்கணத்திற்கு சாட்சியாக அமைந்தவை.

இயற்கையில் விபத்து போல சிலர் பிறவியிலேயே ஊனமாகப் பிறந்துவிடுகிறார்கள். கண்பார்வை இல்லாமமை – பேச முடியாமை – காது கேளாமை என பிறந்த பெண்மணி ஹெலன் கெல்லர் பிரைல் முறை கல்வி கற்று பெரும் ஞானம் பெற்றார். நோபல் பரிசு பெற்றார். சரித்திரப் பிரசித்திப் பெற்றார். மாற்றுத்திறனாளிகளுக்கு அவர் ஒரு உதாரணம். இதை மையமாக வைத்து 'வானமே எல்லை' என்ற படத்தை பாலசந்தர் எடுத்தார். அப்படத்தின் கிளைமாக்ஸ் நெஞ்சை நெகிழ வைக்கும்.

"புரட்சியாளர்கள் வாழ்வில் எந்த எதிர்பாராத சம்பவங்களையும் – ஆபத்தையும் சந்திக்க தயாராக இருக்க வேண்டும்" என்பது மாமேதை லெனின் சொன்ன அமுத வாக்கு. இந்தக் கருத்தை தனது 'நாணல்' படத்தில் மையக்கருத்தோட்டமாக வைத்தார். எம்.ஜி.ஆர். தனது 'தெய்வத்தாய்' படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பை பாலசந்தருக்கு கொடுத்தார். அன்று தொடங்கிய அவரின் கலைப்பயணம் என்பது வயதுவரை தொய்வில்லாமல் தொடர்ந்து வெற்றி கண்டது. திரைத்துறையில் 'பாலசந்தரின் சிந்தனைப் பள்ளி' என்ற விருட்சமாக அது வேரூன்றி விட்டது.

பெரிய நடிகரை வைத்து அவர் படம் எடுப்பதில்லை. ஏ.வி.மெய்யப்பச் செட்டியார் இவ்வாறு சொன்னார். ஒரு திரைப்படத்தின் கதாநாயகன் 'கதைதான் கதாபாத்திரத்தை உருவாக்கும் அச்சாணி. வெற்றியின் ரகசியத்தை கலைத் துறையில் கற்றறிந்த மேதை பாலசந்தர்.

ஒரு கதையை கையாளுவதிலும், கதாப்பாத்திரங்களை உருவாக்கி அதற்கு உயிர் கொடுப்பதிலும், அவற்றை காவியமாக்குவதிலும் அவர் ஒரு அசுரன். இயக்குனர்கள் தான் நடிகர்களைவிட பெரிய சூப்பர் ஸ்டார் என்பதை நிரூபித்தவர். களிமண்ணைக்கூட அற்புத கலைப் படைப்பாக மாற்றும் ரசவாதம் கற்ற சிந்தனைச் சிற்பி.

தன்னம்பிக்கை இல்லாத 'சிவாஜிராவ்' என்ற நபருக்கு 'ரஜினிகாந்த்' என்ற புதிய பெயர் சூட்டி வெற்றிச் சிகரத்திற்கு அழைத்துச் சென்றவர். கமலஹாசனை இரண்டாவது சிவாஜிகணேசனாக ஜொலிக்க வைத்தது அவரின் மந்திரக்கோல். நூறு படங்களை இயக்கினார். நூறும் வெவ்வேறு வடிவமும் – வண்ணமும் பெற்ற கலை பொக்கிஷங்கள். தனது அனைத்து படைப்புகளுமே தனக்கு பிரசித்தமானவை என்றார்.

அனைத்தும் கலை அம்சம் பரவிக்கிடக்கும் பவித்திரமான படைப்புகள். தோல்விகள் அவரை பின்னோக்கி இழுக்க முடியாமல் தோற்றுப் போயின. ஒரு தோல்வியை அடுத்த படத்தின் பிரம்மாண்டமான வெற்றியாக மாற்றிக் காட்டும் கலையுலக பிரம்மா அவர். கை நடுக்கம் வந்து இயற்கை அவரை முடக்கும் வரை முட்டி மோதிக் கொண்டே இருந்த முரட்டுக்காளை அவர்.

'வறுமையின் நிறம் சிவப்பு' என்ற படத்தில் கம்யூனிஸ்ட் என்ற பதத்திற்கு அவர் தந்த விளக்கம் என்றென்றும் நின்று பேசும்.

தஞ்சையின் காவிரிக்கரையில் பிறந்த அவர். தஞ்சைக்கு புகழ் சேர்த்த கலை உலகின் இன்னொரு ராஜராஜ சோழன். அவர் பிறந்த மண் அவருக்கு கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பால் எப்போதும் ஒரு ஈர்ப்பை தந்தது. நாகை நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தோழர் எஸ்.ஜி. முருகையன் அவரின் உயர்நிலைப் பள்ளி மாணவர்.

மத்தியதர வர்க்கத்தின் வாழ்வில் மகிழ்ச்சி – துயரம் – வலி என அனைத்தையும் ஆழமாக உளவியல் பூர்வமாக புரிந்து வைத்திருந்தார். எனவேதான் அவர் படங்கள் இமாலய சாதனைகளைக் கண்டன. பாட்டாளி வர்க்கம் – விவசாய வர்க்கம் ஆகிய இரண்டு சமுதாய பெரும் ஜீவநதிகளோடு மத்தியதர வர்க்கமும் சங்கமிக்க வேண்டும். அதுவன்றி நமது இலட்சியமும் இடேறாது.

நமது கலை இலக்கியப் பெருமன்றம் பாலசந்தரின் அணுகுமுறையை நமது ஆயுதத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டிய தருணம் இது.

புரட்சியின் உந்து சக்தியாக மிகச் சிறந்த அறிவுஜீவிகள் – மேதைகள் அந்த வர்க்கத்திலிருந்து நமது நேச சக்திகளாக கிடைப்பார்கள். அந்த வகையில் அவரின் கலைப்படைப்புகள் நமது படை வரிசையில் நிச்சயம் ஆற்றல்மிகு படைக்கலன்களாக செயல்படும்.

நமது தோழர்கள் பாலசந்தரை நமது அடிப்படையில் வலுவாக காலூன்றிக் கொண்டு நமக்கு சாதகமாகப் பயன்படுத்தலாம். உன்னதமான கலைஞர்களுக்கு என்றும் மரணமில்லை. மக்கள் மனதில் காலத்தைத் தாண்டி வாழ்வார்கள்.

தொடர்புக்கு: **96007 23726**

## சத்தீஸ்கர் மாநில அரசாங்கத்தின்
# ஜனநாயக விரோத போக்கிற்கு சிபிஐ கண்டனம்

சத்தீஸ்கர் மாநில அரசாங்கத்தின் ஜனநாயக விரோத போக்கிற்கு கண்டனம் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் மணிஷ் குஞ்சம் தலைமையில் நடைபெறவிருந்த பாத யாத்திரைக்கு அனுமதி மறுத்துள்ள சத்தீஸ்கர் மாநில அரசாங்கத்தின் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

மாநில அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை ஜனநாயக விரோதமானது மற்றும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது ஆகும். ஜனநாயகப்பூர்வ போராட்ட இயக்கங்களை ஒடுக்குவது தான், முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டிற்கு எதிரான, ஜனநாயக விரோதமான போராட்ட முறைகளை மக்கள் மேற்கொள்வதற்கு காரணமாகும்.

சத்தீஸ்கர் அரசாங்கம் அதன் முடிவைத் திரும்பப் பெற வேண்டும்; பாத யாத்திரை இயக்கம் நடைபெற அனுமதி வழங்க வேண்டும்.

"பாரத ஒற்றுமை" என்னும் முழக்கத்துடன் ராகுல் காந்தி பாத யாத்திரை நடத்தி வருகிறார். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாத யாத்திரை இயக்கத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை நினைவுறுத்துகிறோம்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பாரத் ஒற்றுமை யாத்திரை:
## காங்கிரஸ் கட்சி ஜனநாயக ரீதியாக தெளிவான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும்

- டி ராஜா

இந்திய தேசிய காங்கிரஸ் 'பாரத் ஒற்றுமை யாத்திரையை' நடத்தி வருகிறது. ஆனால், சத்தீஸ்கரில் உள்ள காங்கிரஸ் அரசாங்கமோ, பழங்குடி மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 100 கிலோ மீட்டர் தொலைவு பாத யாத்திரை நடத்த அனுமதி மறுக்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விளிம்புநிலை மக்களின் பிரச்சனைகளை முன்வைத்து தொடர்ந்து போராடி வருகிறது.

இந்திய தேசிய காங்கிரஸ் ஜனநாயக ரீதியாக, சித்தாந்த ரீதியாக தெளிவான நிலைப் பாட்டை மேற்கொள்ள சுயபரி சோதனை செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

## விருதுநகர் ஆட்டோ ஓட்டுனர்கள் சங்க
# ஏஐடியுசி கொடியை கே.சுப்பராயன் எம்.பி. ஏற்றினார்

விருதுநகர் பழைய பேருந்து நிலையம் முன்பு நியூ நண்பர்கள் ஆட்டோ ஓட்டுனர்கள் , உரிமையாளர்கள் முன்னேற்ற சங்கம் ஏஐடியுசியுடன் இணைந்தது. அங்கு ஏஐடியுசி கொடியேறு விழா பெயர் பலகை திறப்பு விழா நடைபெற்றது. சங்க தலைவர் மணிகண்டன் தலைமை வகித்தார். ஏஐடியுசி கொடியை மாநில தலைவர் கே.சுப் பாராயன் எம்பி ஏற்றி வைத்துப் பேசினார்.

மாநில பொதுச்செயலாளர் டி.எம். மூர்த்தி பெயர் பலகையை திறந்து வைத்தார். மாநில செயலாளர் காசி விஸ்வநாதன் உறுப்பினர் அடையாள அட்டையை வழங்கினார். இந் நிகழ்வில் சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் பி. லிங்கம் எக்ஸ் எம்பி, பாலமுருகன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், கட்டிட




தொச மாவட்ட தலைவர் தங்கராஜ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 24.09.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registrar of Newspapers for India, Under Regd No: 1222/57

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைச் செயலாளர்கள், பொருளாளர், செயற்குழு, நிர்வாகக்குழு மற்றும் பயிற்சி உறுப்பினர்கள் தேர்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் 17.09.2022 சனிக்கிழமை அன்று தோழர் டி.எம்.மூர்த்தி தலைமையில் திருப்பூர் மாநகரில் உள்ள எம்.கே.எம். ரிச் தங்கும் விடுதி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் ஆனி ராஜா பங்கேற்று, தேசிய நிர்வாகக் குழு முடிவுகளையும், கட்சியின் 24 வது அகில இந்திய மாநாட்டு தயாரிப்புகளையும் விளக்கி கூறினார்.

**நிர்வாகக் குழு தேர்வு:** மாநிலக் குழுக் கூட்டத்தில், கட்சியின் அமைப்பு விதியின் வழிகாட்டல் படி 31 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழு ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டது.

| தேர்வு செய்யப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: | 16 எம்.இலகுமையா, |
|---|---|
| 1. இரா.முத்தரசன் | 17. தி.இராமச்சந்திரன், எம்.எல்.ஏ. |
| 2. மு.வீரபாண்டியன் | 18. பி.எஸ்.மாசிலாமணி |
| 3. நா.பெரியசாமி | 19. க.மாரிமுத்து எம்.எல்.ஏ., |
| 4. டி.எம்.மூர்த்தி | 20. எம்.ராதாகிருஷ்ணான் |
| 5. பி.பத்மாவதி | 21. ஆ.மோகன் |
| 6. க.சந்தானம் | 22. எஸ்.கலைச்செல்வன் |
| 7. வகிதா நிஜாம் | 23. எஸ்.மோகன்குமார் |
| 8. வை.சிவபுண்ணியம் | 24. முத்து.உத்திராபதி |
| 9. எம்.ரவி | 25. க.பாரதி |
| 10. தி.ராமசாமி | 26. மு.அ.பாரதி |
| 11. எம்.ஆறுமுகம் | 27. டி.இசக்கிதுரை |
| 12. எம்.செல்வராசு எம்.பி. | 28. த.செங்கோடன் |
| 13. மு.கண்ணகி | 29 எஸ்.தேவராஜ் |
| 14. டாக்டர் ஜி.ஆர்.ரவீந்தரநாத் | 30. பி.துரை |
| 15. வை.செல்வராசு | 31. பொ.லிங்கம் |

**செயற்குழு தேர்வு:** கட்சி அமைப்பு விதியின் வழிகாட்டில்படி கீழ்காணும் உறுப்பினர்கள் செயற்குழுவிற்கு ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.


1. இரா.முத்தரசன்


2. மு.வீரபாண்டியன்


3. நா.பெரியசாமி


4. டி.எம்.மூர்த்தி



5. க.சந்தானம்


6. பி.பத்மாவதி


7. வகிதா நிஜாம்


8. வை.சிவபுண்ணியம்


9. எம்.ரவி



10. தி.ராமசாமி (அழைப்பாளர்)

**நிர்வாகிகள் தேர்வு:** கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர்களாக தோழர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி, பொருளாளராக தோழர் எம்.ஆறுமுகம் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

## பயிற்சி உறுப்பினர்கள்:

கீழ்க்கண்ட தோழர்கள் பயிற்சி உறுப்பினர்களாக ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. எஸ்.ராஜ்குமார் | திருச்சி புறநகர் | 6. ரஞ்ஜனி கண்ணம்மா | தூத்துக்குடி மாவட்டம் |
| 2. எல்.மணி | ஆசிரியர் அரங்கம் | 7. ஆ.வளர்மதி | கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| 3. திருவாரூர் மாவட்டம் | பெண் தோழர் | 8. கலை.அஸ்வினி | கோவை மாவட்டம் |
| 4. டி.செல்வம் | நாகை மாவட்டம் | 9. ஜி.சங்கீதா | திருப்பூர் புறநகர் மாவட்டம் |
| 5. எஸ்.சின்னசாமி | ஈரோடு தெற்கு மாவட்டம் | 10. கே.நாகஜோதி | மதுரை புறநகர் மாவட்டம் |



### சாதி, மதம் கடந்த திருமணம்

# கே.சுப்பராயன் எம்.பி. நடத்தி வைத்தார்

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் பூர்ணிமா நந்தினி, மாவட்ட செயலாளர் பவன் குமார் இருவரும் காதலித்து, திருமணம் நிச்சயிக்கப்பட்டு, அவர்களது திருமணம் கே.சுப்பராயன் எம்.பி., தலைமையில் கோவை பாலன் நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகமான பாலன் இல்லத்தில் நடைபெற்றது.

திருமண நிகழ்ச்சியில் கட்சியின் மாநில பொருளாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.பத்மநாபன், மனோகரன், வேலுசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம், பி.மௌனசாமி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் பொதுச் செயலாளர் இரா.திருமலை, மாநில செயலாளர் கே.பாரதி, மாணவர் பெருமன்றத்தின் மாநில தலைவர் எம்.குணசேகர், மாநில செயலாளர் சீ.தினேஷ், வே.வசந்தகுமார், சி.மோகன், கலை.அஸ்வினி, மு.வ.கல்யாணசுந்தரம், அஷ்ரப் அலி, கே. புருஷோத்தமன், மாமன்ற உறுப்பினர் எம்.டி. மோகன், ப.பா.ரமணி உட்பட தோழர்கள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். திருமணத்தில் கட்சி வளர்ச்சி நிதியாக ரூபாய் 3000 வழங்கப்பட்டது.

### மியான்மாருக்கு கடத்தப்பட்ட

# தமிழகத் தொழிலாளர்களை மீட்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

நாட்டில் நிலவும் வரலாறு காணாத வேலையின்மை பல விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

குடும்ப உறுப்பினர்களின் உயிர் வாழ்வுக்கும், குழந்தைகளின் எதிர்கால நலனுக்கும் வேலை தேடி அலைந்து திரிவோர் அவல நிலை எழுத முடியாத துயரமாகும். இந்தப் பரிதாபகரமான நிலையைப் பயன்படுத்தி பணம் பறிக்கும் சட்டவிரோத செயலில் சில கும்பல்கள் “வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகமைகளாக” செயல்பட்டு வருகின்றன. இதில் பணம் கொடுத்து ஏமாந்து விட்ட, ஆயிரக்கணக்கானோர் சட்டப்படி புகார் கொடுத்துள்ளனர். ஆனால் குற்றச் செயல்கள் குறைந்தபாடில்லை.

அண்மையில் தாய்லாந்தில் வேலை அமர்த்துவதாக கூறி, அழைத்துச் சென்றவர்கள், மியான்மார் நாட்டின் மியாவாடி நகருக்கு கொண்டு சென்று, கொத்தடிமைப் பணிக்கு நிர்பந்தித்து, சித்தரவதை செய்வதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளது. இந்தச் செய்தி மியாவாடியில் சிக்கியுள்ளவர்கள், தாய்லாந்தில் தவிக்கவிடப்பட்டவர்கள் குடும்பங்களில் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு தருவோம் என உறுதியளித்த பாஜக ஒன்றிய அரசு, நடைமுறையில் ஏமாற்றி விட்டதால், தொழிலாளர்கள் அயல்நாடுகளில் அவதிப்படும் கொடுமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் மியான்மாரில் சிக்கித் தவிக்கும் தொழிலாளர்களை மீட்டு, அவரவர் வீடுகளில் ஒப்படைத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஒன்றிய அரசும், அயலுறவுத்துறையும் போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, நாட்டின் பிரதமரையும், அயலுறவுத்துறை அமைச்சரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.